SEC | SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

# தெளிவினை நிலைநிறுத்தல்

துரிதமாக வளர்ச்சியடையும் ஓர் பொருளாதாரத்தில் எது நியாயமானது எது சரியானது என்பதை இலகுவில் கவனிக்கத் தவறிவிடலாம். இதன் காரணமாக எமது பங்கு மிகவும் தவிர்க்க முடியாததாகக் காணப்படுகின்றது ஏனெனில் சமூகத்தின் பரவலான பிரிவினர் எமது வளர்ச்சியடையும் பொருளாதாரத்தில் முதலிடுவதன் உள்ளாற்றலை காண்கிறார்கள். எனவே முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாக்கக்கூடிய ஓர் சூழலை உருவாக்குவது எமது கடமையாகும். இதற்கு நாம் உகந்த முக்கியத்துவம் அளித்து தெளிவு, சீர்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை நிலைநிறுத்தும் முறைமைப்படுத்தல் முறையினை பலப்படுத்துவோம்.

ஆண்டறிக்கை
2014

## குறிக்கோள்

பயனுறுதிமிக்க, திறமைமிக்க மற்றும் உயிர்ப்பான மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலுக்கு தெற்காசியாவிலேயே சிறந்த முறைமைப்படுத்துபவராக வருவது

## செயற்பணி

நியாயமான, திறமைமிக்க, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான மூலதனச் சந்தை ஒன்றை ஊக்குவிப்பதற்கு, விருத்தி செய்வதற்கும் மற்றும் பராமரிப்பதற்கு

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| குறிக்கோள் மற்றும் செயற்பணி | 1 |
| தலைவரின் மீளாய்வு | 3 |
| பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | 7 |
| ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் | 10 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 14 |
| பொருளியல் மீளாய்வு | 16 |
| மூலதனச் சந்தை மீளாய்வு | 19 |
| முகாமையாளர்கள் | 21 |
| ஊழியர்கள் | 22 |
| செயற்பாட்டு மீளாய்வு | 26 |
| மேலதிகத் தகவல்கள் | 57 |
| செய்கைப் பத்திரம் | 62 |

**நிதியியல் அறிக்கைகள் - இ.பி.ப.ஆ.**

| | |
|---|---|
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 66 |
| நிதி நிலைமைக் கூற்று | 68 |
| நிதிச் செயற்திறன் கூற்று | 69 |
| ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 70 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 71 |
| காசுப் பாய்ச்சல் கூற்று - தீர்வை நிதியம் | 72 |
| காசுப் பாய்ச்சல் கூற்று - இழப்பீட்டு நிதியம் | 73 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 74 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 76 |

**நிதியியல் அறிக்கைகள் - தீ.உ.நி.**

| | |
|---|---|
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 86 |
| நிதி நிலைமைக் கூற்று | 88 |
| நிதியியல் செயற்திறன் கூற்று | 89 |
| தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 90 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 91 |
| கணக்கீட்டு கொள்கைகள் | 92 |

| | |
|---|---|
| குறிப்புகள் | 95 |
| கூட்டாண்மை தகவல்கள் | **பின்பக்க உள் உறை** |



## தலைவரின் மீளாய்வு



"மேற்கொண்டு முன்னேறும்போது பல முக்கியமான முகப்புகளில் யதார்த்தமான காலவரிசையை தீர்மானிப்பதுடாக வலுவான விளைவுகளை அடைவதற்கு நாம் தீவிர கவனஞ்செலுத்துவது நல்லதென நான் கருதுகின்றேன். 2016 ஆம் வருட நிறைவிற்கு முன்னர் எம்மால் மத்திய தீர்வகக் கூட்டுத்தாபனத்தை நிறுவியும், கொ.ப.ப. இனை பரஸ்பரமற்ற உரித்துடைமை பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுவதற்கான இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான திருத்தத்தினையம் மேற்கொள்ளலாம் என நான் நம்புகின்றேன்."

**திலக் கருணாரத்ன**
*தலைவர்*

மூலதனச் சந்தையானது நீண்ட கால நிதியினைத் திரட்டுவதற்கான ஓர் அவசியமான கால்வாயாகக் காணப்படுவதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் முக்கிய இயக்கியாகவும் கருதப்படுகின்றது. மூலதனச் சந்தையை முறைமைப்படுத்துபவர் என்ற ரீதியில் வழங்குனர்கள் நிதியைத் திரட்டக்கூடிய ஓர் நியாயமான, செயற்திறனான, கிரமமான மற்றும் வெளிப்படையான ஓர் சந்தைக்கு வசதியளிப்பதிலும் முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கு போதிய பாதுகாப்பினை வழங்குவதிலும் எமது கவனம் செலுத்தப்படுகின்றது. எனவே, பிணையங்கள் சந்தையின் முறைமைப்படுத்தல் கட்டமைப்பானது இந்த பணிப்பாணையை நிறைவேற்றுவதற்கும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நம்பகத்தன்மை மிக்க ஓர் விலை கண்டுபிடிப்பு பொறிமுறை, அனைத்து முதலீட்டாளர்களுக்கும் நியாயமான சந்தை நுழைவு, சந்தை தோல்விகளை கட்டுப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கை மற்றும் சந்தை வெளிப்படுத்தல்களது சரியான நேர மற்றும் பயனுறுதிமிக்க பரப்புதல் என்பனவாகும். அதிகளவு முறைமைப்படுத்தல்கள் வளர்ச்சியை முடக்குவதுடன் உயிர்ப்புள்ள பங்காளிகளது பங்குபற்றுதலை ஊக்கம் கெடுப்பதால் இ.பி.ப.ஆ. ஓர் சமனான முறைமைப்படுத்தலை கடைப்பிடிப்பதனை தொடர்ச்சியாக உறுதிசெய்கின்றது.

சந்தையின் நேர்மையை பராமரித்தல் மற்றும் முதலீட்டாளர்கள் பாதுகாக்கப்படுவதனை நிச்சயப்படுத்திக்கொள்ளல் என்பவற்றிற்கு ஓர் அவசியமான தோற்றமாக தொடர்ச்சியாக தரமான மற்றும் நம்பகத்தன்மையுடனான தகவல்களை பரப்புதல் காணப்படுகின்றது. வெளிப்படுத்தல்கள், முதலீட்டாளர்கள் தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றலை அதிகரிப்பதுடன் பங்குதாரர் உணர்ச்சிப்பாங்கினை மேம்படுத்தி முகாமைத்துவம் முறையற்ற நடத்தையில் ஈடுபடுவதனையும் தடுக்கின்றது. முக்கியமான தகவல்கள் கிரமமான முறையில் கிடைக்கக்கூடியதாயிருக்கும்போது அது பல முதலீட்டாளர்களால் பின்தொடரப்படும் மந்தை மனப்பாங்கினையும் குறைக்கக்கூடியதாயுள்ளது. நம்பகத்தன்மை மிக்க மற்றும் நேரகாலத்துடனான தகவல்கள் காணப்படாதவிடத்து அது முதலீட்டாளர் நம்பிக்கைக்கும் சந்தை அபிவிருத்திக்கும் தடங்கலாக இருப்பதால் அமைவுறாமைக்கு எதிராக இ.பி.ப.ஆ. தொடர்ந்தும் கடுமையான விதிகளை சுமத்துவதுடன் கடும் வலியுறுத்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

எமது பொறுப்பாணைக்கமைய நாம் சந்தையின் நேர்மையினை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இடர்நேர்கையினை கண்காணித்தும், குறைப்பதனையும் முகாமைப்படுத்துவதனையும் தொடர்ந்தோம். முறைசார் இடர்நேர்கைகள் நிதியியல் சந்தையை மாத்திரமின்றி முற்றான பொருளாதாரத்தையும் பாதிக்ககூடிய சாத்தியப்பாட்டினை கொண்டிருப்பதனால் எமது மேற்பார்வையின் வரையெல்லையானது முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்கள், வழங்குனர்கள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சந்தை என்பவற்றில் இடர்நேர்கைகளை இனங்காணுவதனையும் உள்ளடக்குகின்றது. எமது இடர்நேர்கை அடிப்படையான மேற்பார்வை கட்டமைப்பினூடாக நாம் சந்தை இடையீட்டாளர்களுக்கு மூலதனம் மற்றும் ஏனைய விவேகமுள்ள தேவைப்பாடுகள், முதலீட்டாளர்களது சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் உள்ளகக்

# தலைவரின் மீளாய்வு தொடர்ச்சி.

கட்டுப்பாடுகளுடன் அமைவுறுதல் என்பவற்றில் ஒழுங்கான அடிப்படையில் கவனஞ்செலுத்துவதற்கு முயற்சிக்கின்றோம். எமது மேற்பார்வை பங்கானது பிணையங்கள் சந்தையில் தீர்ப்பனவு இடர்நேர்கையினை குறைப்பதிலும் நீட்டப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடையும் நோக்கில் பிணையங்கள், பங்குகள், கூட்டாண்மை கடன்கள் மற்றும் எமது ஆதிக்க வரம்பினுள் வரும் வேறு ஏதேனும் கருவிகள் என்பவற்றின் தீர்ப்பனவுக்கான மத்திய எதிர்தரப்பினராக (மஎத) செயற்படும் ஓர் தீர்வக இல்லத்தினை உருவாக்குவதற்கு நாம் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையுடன் கூட்டிணைந்துள்ளோம். எனவே, ஓர் முழுநீள ம.எ.தரப்பினரை அமுல்படுத்தும் பொறுப்பானது உலகளாவிய ரீதியில் மூலதனச் சந்தை தொடர்பான விசேட நிபுணத்துவம் நிறைந்த ஓர் ஆலோசனை நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தீர்ப்பனவு தவறுதல் இடர்நேர்கை மற்றும் எதிர்தரப்பினா் இடர்நேர்கை என்பவற்றை கணிசமான அளவு குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சந்தைக் கையாளுகை, முறைமைப்படுத்தும் நிறுவனங்களின் துர்நடத்தை மற்றும் கூட்டாண்மை வெளிப்படுத்தல் தொடர்பான தவறுகள் உள்ளடங்களாக முறைமைப்படுத்தல் மீறுகைகள் மேற்கொள்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இ.பி.ப.ஆ. உறுதியான கடப்பாடுடையதாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், 28 வருடங்களுக்கு முன்னர் சட்டமாக்கப்பட்ட தற்போதைய இலங்கைப் பிணையங்கள் சட்டமானது அதன் குறைகளைக் கொண்டுள்ளது, உதாரணமாக ஏனையவற்றுக்கிடையில் குற்றவியல் வழக்குத்தொடுப்புகள் மற்றும் தவறுகளை ஒத்திணங்குதல் என்பவற்றில் கட்டியெழுப்பப்பட்ட வலியுறுத்தல் கட்டமைப்பு என்பதாகும். எனவே, கடந்த காலங்களில், இ.பி.ப.ஆ. பிரதானமாக எச்சரிக்கை கடிதங்களை வழங்கியும், முதலீட்டு ஆலோசகர்களில் இடைநிறுத்தல்களை அமுல்படுத்தியும் ஒத்திணங்கியும் செயற்பட்டது. மூலதனச் சந்தையில் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்பற்ற விரிவாக்கலுக்கமைய வலியுறுத்தல் அதிகார வீச்சினை பரவலாக்கும் நோக்கில் இ.பி.ப.ஆ. சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியமென கருதப்பட்டது. இ.பி.ப.ஆ. சட்டத்திற்கு முன்மொழியப்படும் திருத்தங்கள் ஓர் நிர்வாக மற்றும் குடியியல் வலுவளிப்புகள் வீச்சினை அறிமுகப்படுத்துவதுடன் இடருறும் யாரேனும் நபருக்கு பரிகாரம் காணுவதையும் உள்ளடக்கும். இது நம்பகத்தன்மை மிக்க முறைமைப்படுத்தலுக்கும் சந்தை நம்பகத்தன்மைக்கும் வழிசமைப்பதனால் இ.பி.ப.ஆ. இத்திருத்தங்களை துரிதப்படுத்தும் அதன் முயற்சிகளை அதிகரித்தது. இதற்கும் மேலாக சட்டத்திற்கான திருத்தங்கள் இ.பி.ப.ஆ. இன் ஆளுகை கட்டமைப்பினை சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழு ஒழுங்கமைப்பின் நியமங்களுக்கு சீரமைப்பதுடன் புதிய வகையான சந்தை இடையீட்டாளர்களது அறிமுகத்திற்கு வசதியளித்தல் மற்றும் அவர்களது வணிக நடத்தையினை முறைமைப்படுத்தல் மற்றும் மூலாதாரக் கருவிகளது முறைப்படுத்தலுக்கு வசதியளித்தல் என்பவற்றையும் ஏற்படுத்தும்.

மூலதனச் சந்தையை கட்டியெழுப்புவதற்கான அடித்தளமாக முதலீட்டாளர் நம்பிக்கை விவரிக்கப்படுவதுடன் திடமான ஆளுகையானது உள்ளூர் மற்றும் வெளியூர் முதலீட்டாளர்களை கவர்வதற்கும் பொருளாதார வளர்ச்சியினை தூண்டுவதற்கும் பங்களிப்பு செய்யும். மூலதனச் சந்தையை முறைமைப்படுத்துபவர் என்ற ரீதியில் பொறுப்புக்கூறல், நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தும் ஓர் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் கட்டமைப்பினூடாக நல்ல கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு இ.பி.ப.ஆ. முயற்சிக்கின்றது. எவ்வாறாயினும், நல்ல கூட்டாண்மை ஆளுகையினை நிலைநிறுத்துவதற்கு மூலதனச் சந்தையின் அனைத்து பங்காளிகளதும் ஒற்றுமையான முயற்சிகள் தேவைப்படுகின்றது. இதற்கு வசதியளிப்பதில் நாம் ஏராளமானவற்றை சாதித்துள்ளதுடன் இதில் இன்னமும் மேற்கொள்ளவேண்டியவை காணப்படுவதுடன் நாம் கூட்டாண்மை ஆளுகை நியமங்களை மேம்படுத்துவதற்காக மூலதனச் சந்தைத் துறையினருடன் தொடர்ந்தும் கூட்டிணைந்து செயற்படுவோம்.

முறைமைப்படுத்துபவர் என்ற விதத்தில், முதலீட்டாளர் கல்வி மற்றும் நிதியியல் கல்வியறிவு என்பவற்றிற்கான தேவையானது இன்றிலும் பார்க்க முன்னர் மிகவும் முக்கியமாகக் காணப்படவில்லை. எமது முதலீட்டாளர் கல்வி முன்னெடுப்புகள் முதலீட்டாளர் பாதுகாப்பினை மேம்படுத்தல், முதலீட்டாளர் நம்பகத்தன்மையை ஊக்குவித்தல் மற்றும் மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் பங்குபற்றலை வளர்த்தல் என்பவற்றில் குவிந்துள்ளது. முதலீட்டாளர்களுக்கு அதிகாரமளிக்கும் ஓர் அவசியமான முறைமைப்படுத்தல் கருவியாக முதலீட்டாளர் கல்வி காணப்படுவதனால் நாம் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு மூலதனச் சந்தையில் முதலிடுவதற்கான சரியான அறிவினை வழங்குவதற்கான கருத்தரங்குகள், வர்த்தக கண்காட்சிகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி உரையாடல் நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு கால்வாய்கள் மற்றும் வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுறுத்தினோம். அதிகாரமளிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் அவர்களது முதலீட்டு தீர்மானங்களுக்கு அதிக பொறுப்பினை ஏற்றுக்கொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். முதலீட்டாளர் கல்வியானது ஓர் பகிரப்பட்ட பொறுப்பென்று நாம் புரிந்துள்ளதுடன் இந்த நோக்கத்தை அடைவதற்கு நாம் ஏனைய பங்காளிகளுடன் இணைந்து செயற்படுகின்றோம்.

வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் முதலீட்டு ஆலோசனையின் தரமானது முதலீட்டு ஆலோசகரின் தரத்தில் தங்கியுள்ளதனால், இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தை தொழில்நெறிஞர்களுக்கு இத்துறையில் அவர்களது கடமைகளை செயற்படுத்துவதற்கு அவசியமான அறிவு மற்றும் திறன்களை வழங்குகின்றது. துறைசார் பங்குபற்றுனர்கள் வாடிக்கையாளர்களது சிறந்த நலன்களுக்கான அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதனை உறுதிசெய்யும்பொருட்டு பங்குத் தரகு நிறுவனங்கள் ஓர் திடமான பயிற்சி முறையினை கடைப்பிடிக்கும் என இ.பி.ப.ஆ. எதிர்பார்க்கின்றது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பரஸ்பரமற்ற உரித்துடைமை பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றும் முன்னெடுப்பிற்கு வசதியளித்தல் பல காலமாக இ.பி.ப.ஆ. இன் முதன்மையாகக் காணப்படுகின்றது. இந்த முக்கியமான முன்னெடுப்பிற்கு பரவலான சட்டவாக்க மாற்றங்கள் மற்றும் அரசாங்கத்தின் உறுதுணை தேவைப்படுவதுடன் இது கொ.ப.ப. இன் வணிக மாதிரியினை பின்வருமாறு மாற்றியமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலாபத்திற்கான

பரிவர்த்தனை, அதன் ஆளுகை கட்டமைப்பினை மறுசீரமைத்து பெறுமதியினை வெளிக்கொணர்வதற்கான பரிவர்த்தனையின் ஆற்றலை அதிகரிக்கும். இவ்வாண்டில் சட்ட வரைஞர் பரஸ்பரமற்ற உரித்துடைமை பகிர்தல் சட்டத்தின் வரைவினை நிறைவுசெய்ததுடன் இ.பி.ப.ஆ. அவசியமான நடவடிக்கைக்காக நிதி அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ளது.

முறைமைப்படுத்தலானது நியமங்களை அமைப்பதுடன் ஆரம்பமாகின்றது. சந்தை இடையீட்டாளர்கள் அமைவுறவேண்டிய சுமையான நியமங்களை தவிர்ப்பது குறித்தும் அதிக கண்டிப்புக் குறைவான விதிகள் குறித்தும் முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாப்பதை நோக்காகக் கொண்ட நியமங்கள் மற்றும் வழிகாட்டிகள் குறித்தும் நாம் அக்கறைகொண்டுள்ளோம். சந்தை இடையீட்டாளர்கள் பொறுப்பேற்கும் இடர்நேர்கைகளை பிரதிபலிக்கும் சந்தை இடையீட்டாளர்களுக்கான ஆகக்குறைந்த நுழைவு நியமங்கள், ஆரம்ப மற்றும் தொடர்ச்சியான மூலதன மற்றும் ஏனைய விவேகமான தேவைப்பாடுகளை முறைமைப்படுத்தலானது வழங்குகின்றது. திடமான வணிக நடைமுறைகள், முதலீட்டாளர்களுக்கு பொருத்தமான பாதுகாப்புகள் மற்றும் சந்தை நம்பகத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச நியமங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு ஒத்த நிலைமைக்கு கொண்டுவருவதற்கு எமது ஆகக்குறைந்த நுழைவு நிமயங்கள் மற்றும் தொடர்ச்சியான விவேகமான தேவைப்பாடுகள் மேம்படுத்தப்படல் வேண்டும் என நாம் கருதுகின்றோம்.

சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்கள் சிறந்த தகவலறிந்த முதலீட்டு தீர்மானங்கள் மேற்கொள்வதனை இயலுமாக்குவதற்கு ஓர் கூட்டாண்மை முறி வழங்கலில் குறியிடப்பட்ட கடன் தரப்படுத்தல்கள், வழங்கும் நிறுவனத்தின் கடன் யோக்கியதைகள் மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மை என்பவற்றில் ஓர் குறிக்கோளான அபிப்பிராயத்தினை வழங்குகின்றது. இதற்கும் மேலாக, ஒவ்வொரு கடன் தரப்படுத்தல் முகவரும் அவர்களது சொந்த தரப்படுத்தல் முறையியனைக் கொண்டுள்ளார்கள். இவற்றைக் கருத்திற்கொண்டு இ.பி.ப.ஆ. முன்விவரணக்கோவையில் ஓர் தரப்படுத்தல் காரண விளக்கத்தை கட்டாயமாக உள்ளடக்கும் ஓர் முக்கியமான கொள்கை தீர்மானத்தை மேற்கொண்டது. இது தரப்படுத்தப்பட்ட பிணையத்தில் தகவல்களை வழங்குவதூடாக தகவல் சமச்சீரின்மையினை குறைக்கும்.

பங்குத் தரகு நிறுவனங்கள் முதலீட்டாளர்களது வர்த்தகங்களுக்கு வசதியிளிப்பதனூடாக மூலதனச் சந்தையில் ஓர் முக்கியமான பங்களிப்பினை மேற்கொள்கின்றன. சமீபத்தைய காலங்களில் பங்குத் தரகுத் துறையானது சேவைகளை வழங்குவதிலும் சந்தையில் காணப்படும் தரகர்களது எண்ணிக்கை தொடர்பிலும் கணிசமான அளவு முன்னேற்றமடைந்துள்ளது. விசேடமாக சிற்றளவு முதலீட்டாளர்கள் நிறுவனத்தின் மதிப்புத்திறனை தெரிந்துகொள்வதூடாக ஓர் தரகரை தெரிவுசெய்வதற்கு வசதியளிக்கும் பொருட்டு இ.பி.ப.ஆ. பங்குத் தரகு நிறுவனங்களுக்கு ஓர் கட்டாய தரப்படுத்தலை அறிமுகப்படுத்தும் சாத்தியப்பாட்டினை ஆராய்கின்றது. இந்த தரப்படுத்தலானது சந்தையின் நேர்மையினை பாதுகாப்பதற்கும் முதலீட்டாளர் நலன்களை பாதுகாப்பதற்கும் முயற்சிக்கும் என எதிர்நோக்கப்படுகின்றது. இதனை அமுல்படுத்துவதற்கு முன்னர் இ.பி.ப.ஆ. ஓர் துறைசார் கலந்தாலோசனையை நடாத்தும்.

மேற்கொண்டு முன்னேறும்போது பல முக்கியமான முகப்புகளில் யதார்த்தமான காலவரிசையை தீர்மானிப்பதூடாக வலுவான விளைவுகளை அடைவதற்கு நாம் தீவிர கவனஞ்செலுத்துவது நல்லதென நான் கருதுகின்றேன். 2016 ஆம் வருட நிறைவிற்கு முன்னர் எம்மால் மத்திய தீர்வகக் கூட்டுத்தாபனத்தை நிறுவியும், கொ.ப.ப. இனை பரஸ்பரமற்ற உரித்துடைமை பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுவதற்கான இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான திருத்தத்தினையம் மேற்கொள்ளலாம் என நான் நம்புகின்றேன்.

அறுதியான தகுதியுடைய மற்றும் செயல்திறனுடைய தொழில்வல்லுனர்களை மான்புமிகு பிரதம மந்திரியின் ஆதிக்கவரம்பின் கீழ் வரும் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு நியமித்தமைக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மான்புமிகு பிரதி அமைச்சர் கலாநிதி. ஹர்ஸா டி சில்வா அவர்களுக்கும் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கித்சிரி லியனகே அவர்களுக்கும் எமக்கு அளித்த அனைத்து உறுதுணைக்கும் நான் நன்றியைத் தெரிவிக்கின்றேன். நான் முன்னைய தலைவர் மற்றும் ஆணைக்குழுவிற்கு 2014 இல் அவர்களது முயற்சிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். செயலகத்தின் ஊழியர்களது உயர்ந்த மட்டத்திலான அர்ப்பணிப்பு மற்றும் எமது அனைத்து பங்காளிகளாலும் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு என்பதன் விளைவாக நாம் எமது குறிக்கோள்களை பயனுறுதிமிக்க விதத்தில் அடைந்துகொள்ளக்கூடியதாயிருந்தது. இலங்கையின் பொருளாதாரத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யத்தக்க ஓர் கிரமமான பிணையங்கள் சந்தையினை அடையும்பொருட்டு பயனுறுதிமிக்க மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் வலியுறுத்தல் என்பவற்றுடன் ஒன்றிணைந்து ஓர் செயல்திறனுடைய முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை நாம் தொடர்ந்தும் பின்பற்றுவோம்.

**திலக் கருணாரத்ன**
*தலைவர்*

23 மே 2015



## பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



"பொதுமக்களது நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை மீளப்பெறுவதற்கு தனிநபர் பங்குபற்றுனர்களது நடவடிக்கைகளுக்கு ஓர் திடமான நெறிமுறை பரிமாணம் அவசியமாகின்றது என நாம் நம்புகின்றோம். சிறந்த நடத்தையானது வெறுமனே சட்டமாக்கப்பட்டு முறைமைப்படுத்தப்படமுடியாது. அது கம்பனிகளினால் ஊக்குவிக்கப்பட்டு அகவயப்படுத்தப்படல் வேண்டும்."



**வஜிர விஜேகுணவர்தன**
*பணிப்பாளர் நாயகம்*

முதலீட்டாளர்கள் நலன்களைப் பாதுகாத்தல், நியாயமான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான சந்தையைப் பராமரித்தல் மற்றும் மூலதன உருவாக்கத்திற்கு வசதியளித்தல் ஆகிய இ.பி.ப.ஆ. இன் பொறுப்பாணைக்கு ஏற்ப இ.பி.ப.ஆ. இனால் பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகளது விளக்கத்தை வழங்கும் 2014 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையினது மூலதனச் சந்தையின் முறைமைப்படுத்துபவர் என்ற ரீதியில் மெய்யான பொருளாதாரத்தின் நிதியளிப்பிற்கு சேமிப்பு மற்றும் முதலீடுகளை திரட்டுவதற்கு திறமையான மற்றும் பயனுறுதிமிக்க ஓர் கால்வாயான மூலதனச் சந்தை ஒழுங்குமுறையாக செயற்படுவதை உறுதிப்படுத்துவது எமது பொறுப்பாகும்.

இவ்வருடத்திற்கான எமது நிகழ்ச்சி நிரலானது தொடர்ந்தும் சந்தையின் நிலைநிறுத்தக்கூடிய மற்றும் உள்ளடங்களான வளர்ச்சியினை ஊக்குவிப்பதில் அழுத்தத்துடன் இயக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உந்துசக்தியாக மூலதனச் சந்தையினது பங்களிப்பினை பரவலாக்கும் நோக்கில் 2006-2015 முதன்மைத் திட்டத்தினூடாக மூலதனச் சந்தை அபிவிருத்தி இயக்கியானது இ.பி.ப.ஆ. னால் முன்னெடுக்கப்பட்டது. இது 2012 இல் ஓர் பத்து திட்ட முன்னெடுப்பினூடாக முன்னுரிமையளிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. 28 வருடங்களுக்கு முன்னர் சட்டமாக்கப்பட்ட இ.பி.ப.ஆ. சட்டமானது (1991, 2003 மற்றும் 2009 இல் திருத்தியமைக்கப்பட்டது) எதிர்கால தேவைகளையும் நவீன சந்தைகள் முகங்கொடுக்கும் வெளித்தோன்றும் சவால்களையும் சந்திப்பதற்கு ஆயத்தமாக இல்லை. இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தங்களது சட்டவாக்கத்தின் பின்னர் நடைமுறையிலுள்ள சட்டத்தின் இடைவெளிகள் சீராக்கப்பட்டு எமது முறைமைப்படுத்தல் பொறுப்பாண்மையானது விரிவுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான திருத்தங்கள் எமக்கு குடியியல் மற்றும் நிர்வாக வலுவளிப்புகளை அறிமுகப்படுத்துவதற்கும், கண்டனங்களை வழங்குவதற்கும் முறையற்ற விதத்தில் பெறப்பட்ட செல்வத்தினை நீக்கி முதலீட்டாளர்களுக்கு இழப்பீடளிக்கவும் எமக்கு அதிகாரமளிக்கும். தனிப்பட்ட பங்குபற்றுனர்கள், முதலீட்டு வங்கிகள் மற்றும் பட்டியலிடப்படாத கூட்டாண்மை முறிகள் சந்தை போன்ற இதுவரைக்கும் முறைமைப்படுத்தப்படாத மூலதனச் சந்தை இடையீட்டாளர்கள் ஆகியோரது வணிக நடத்தைகளை எம்மால் முறைமைப்படுத்த இயலும்.

சந்தைக்கு ஸ்திரத்தன்மையை வழங்குவதற்கான எமது மேற்பார்வை பங்களிப்பானது கொடுக்கல் வாங்கல்களை தீர்வக மற்றும் தீர்ப்பனவு செய்வதில் முக்கியமான பங்களிக்கும் நிதியியல் சந்தை உட்கட்டமைப்பிற்கும் நீண்டுள்ளது. தற்போதைய பங்குச் சந்தையில் தீர்ப்பனவு தவறுகை இடர்நேர்கையினை குறைப்பதற்கும் எதிர்தரப்பினர் இடர்நேர்கை மற்றும் சொத்துக் கடப்பாட்டு இடர்நேர்கை என்பவற்றை கையாள்வதற்காக மத்திய எதிர்தரப்பினர் (ம.எ.த.) பொறிமுறை அமுலாக்கத்தின் முக்கியத்துவமானது பல வருடங்களாக நிறைவேற்றல் செயல்முறையிலிருந்தது. இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் இலங்கை மத்திய வங்கி (இ.ம.வ.) என்பன ம.எ.த. நிறுவுவதற்கான ஓர் கூட்டு முன்னெடுப்பினை பின்வருவனவற்றுக்காக ஆரம்பித்தது. பங்குகள், கூட்டாண்மை கடன்கள் மற்றும் அரசாங்கப் பிணையங்கள் போன்ற பிணையங்களது தீர்ப்பனவிற்காகவும் அதன் மூலம் இலங்கையின் வளர்ச்சியடையும் மூலதனச் சந்தைக்கு துணைபுரிவதற்காக ஓர் தேசிய பிணையங்கள் மத்திய எதிர்தரப்பினருக்கான செயல்திட்டத்தை அமுல்படுத்துவதற்காகவும் ஆகும். 2014 ஆம் ஆண்டில் ஓர் ஆலோசனை நிறுவனத்துடன் ஒப்பந்த உடன்படிக்கையானது கைச்சாத்திடப்பட்டதுடன் திட்டத்தின் வேலையானது இலங்கையில் பிணையங்கள் வர்த்தகத்தில் ஓர் புதிய

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு தொடர்ச்சி.

யுகத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது. விசேட வடிவமைப்பானது சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழு ஒழுங்கமைப்பு (ச.பி.ஆ.ஒ.), சர்வதேச தீர்ப்பனவுக்கான வங்கி (ச.தீ.வ.) மற்றும் ஐரோப்பிய மன்ற ம.எ.த. தீர்வக இல்லங்கள் (ஐ.ம.தீ.இ.) என்பவற்றின் நியமங்களுக்கு அமைவுற்றுள்ளது. மேலும், ம.எ.த. இன் செயற்படுத்துகையானது இலங்கையின் மூலதனச் சந்தையானது ஜி20 இன் சர்வதேச தேவைப்பாடுகளுக்கு அமைவுறுவதை இயலுமையாக்கியுள்ளது. ஜி20 இன் தேவைப்பாடாக ஓர் மத்திய அளவில் தீர்வு செய்யப்படும் சூழலுக்கு அனைத்து மூலதனச் சந்தைகளும் இடம்பெயர்வதுடன் மூலாதாரப் பிணையங்கள் போன்ற கருவிகளது இயலுமைக்கு ஓர் முன்நிபந்தனையாகவும் காணப்படும்.

ஓர் துடிதுடிப்பான முறிகள் சந்தையானது வங்கியியல் முறையை பதிலீடு செய்வதன் மூலமும் கூட்டாண்மைத் துறையின் நீண்ட கால மூலதனத் தேவைப்பாடுகளுக்கு உறுதுணையளிப்பதூடாகவும் பொருளாதார வளர்ச்சிக்கு துணையளிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. மேலும், நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட கூட்டாண்மை முறிகள் சந்தையானது நிதியியல் முறையின் இடர்நேர்கை பன்முகப்படுத்தலிலும் ஓர் முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்துடன் கடன் பெறுபவர்களுக்கு நிதி ஒதுக்கப்படுவதில் பெருமளவு சாமர்த்தியத்தை உறுதிசெய்வதற்காக கடனை ஒதுக்குவது மற்றும் விலையிடுவதில் ஓர் சந்தை பொறிமுறையினை கடைப்பிடிக்கின்றது. ஏனையவற்றுக்கிடையில் கூட்டாண்மை முறிகள் வழங்கலில் அரசாங்கத்தினால் அறவிடப்படும் பிடித்துவைத்தல் வரியின் விலக்களிப்பிற்கு இ.பி.ப.ஆ. வசதியளித்த முக்கியமான முன்னெடுப்பின் பலனாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கூட்டாண்மை முறிகள் சந்தையினூடாக முறையே ரூபா 68.3 பில்லியன் மற்றும் ரூபா 54.2 பில்லியன் திரட்டப்பட்டது. உலகளாவிய மட்டத்தில் கடன் மற்றும் தவறுதல் இடர்நேர்கையில் காணப்படும் அதிகரித்த முன்னிறுத்தலின் பின்னணியில் மேற்கொள்ளப்பட்ட பல முக்கியமான கொள்கை தீர்மானங்கள் பின்வருவனவாகும். முதன்மை வர்த்தகர்கள் மற்றும் ஏனைய மூலதனச் சந்தை இடையீட்டாளர்களை கூட்டாண்மை கடன் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு வசதியளித்தல், கொ.ப.ப. இன் வழங்கல் செயல்முறை மற்றும் வழங்குனர்களுக்கான பட்டியலிடல் தேவைப்பாடுகளை சீரமைத்தல், வர்த்தக மற்றும் அறிக்கையிடல் கட்டமைப்பினை மேம்படுத்துதல், இரண்டாந்தரச் சந்தை திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காக எதிர்தரப்பினரிடையே கூட்டாண்மை முறிகளில் மீள்கொள்வனவு வசதிக்கு இயலுமைப்படுத்தல் மற்றும் இலங்கையில் கூட்டாண்மை கடன் சந்தையினை அபிவிருத்தி செய்வதற்காக பட்டியலிடப்படா கூட்டாண்மை முறிகள் வழங்கல் தொடர்பான தகவல்களை பிரசுரிக்கும் ஓர் பொறிமுறையினை கட்டியெழுப்புதல் என்பனவாகும். இந்த முன்னெடுப்புகள் வழங்குனர்களுக்கும் இடையீட்டாளர்களுக்கும் முறிகள் வழங்கலை கட்டமைக்கும்போதும் திட்டமிடும்போதும் பாரிய நெகிழ்வினை வழங்குகின்றது.

கொ.ப.ப. இன் பரஸ்பரமற்ற உரித்துடைமை பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுதலானது பின்வருவனவற்றுக்கு அவசியமான ஓர் முக்கியமான முன்னெடுப்பாகும். மிகவும் சக்திமிக்க மற்றும் போட்டித்தன்மை மிக்க உலகளாவிய வணிகச் சூழலின் சவால்களை சந்திப்பதுடன் அனைத்து பங்காளிகளதும் நலன்களுக்கு சிறப்பாக சேவையாற்றுவதற்கும் பரிவர்த்தனையின் மூலோபாய நலன்களை ஓர் செயற்திறனான மற்றும் ஆக்கிரமிப்பான விதத்திலும் தொடர்வதற்கும் ஆகும். எவ்வாறாயினும், கொ.ப.ப. இனை பரஸ்பரமற்றதாக்கும் செயல்முறையானது, இவ்வருடத்தில் நிறைவுசெய்யப்பட்ட பரஸ்பரமற்றதாக்கல் சட்டமானது பாராளுமன்றத்தினால் சட்டமாக சட்டவாக்கம் செய்யப்பட்ட பின்னரே ஆரம்பிக்கப்படலாம். பெறுமதி ஒதுக்கீடு மற்றும் பரஸ்பரமற்றதாக்கலுக்கான செயல்முறை என்பவற்றில் கலந்தாலோசனை இடம்பெறுவதுடன் இதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் தேவைப்படும். பரஸ்பரமற்றதாக்கியதன் பின்னர் கொ.ப.ப. அதன் மூலோபாய நலன்கள், தீர்மானம் மேற்கொள்ளலை சீராக்கல் மற்றும் இலங்கையின் மூலதனச் சந்தையின் வளர்ச்சிக்கு ஓர் வினையூக்கியாகச் செயற்படல் என்பவற்றை சிறப்பாக செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சியானது சேமிப்பினை ஒன்றுசேர்த்து ஆக்கவளமுடைய முதலீடுகளுக்கு மூலதனத்தை திரட்டும் செயற்திறன்மிக்க மூலதனச் சந்தையில் மையப்படுத்தப்பட்டுள்ளது. மூலதனச் சந்தைகள் உள்ளூர் மற்றும் வெளியூர் நிதியங்களை கவர்வதற்கு பயன்படுத்தப்படுவதுடன் வெளிநாட்டு முதலீட்டுத்தேக்கங்களை கவர்வதற்கான சூழலை உருவாக்குதல் முன்னேற்றமடைவதற்கு முக்கியமானதாகும். மூலதனச் சந்தையில் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களை முன்னிறுத்தும் நோக்குடன் இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் கூட்டாக 2014 இல் உள்ளூர் மற்றும் வெளியூர் முதலீட்டாளர் மன்றங்கள் நடாத்துவதனை தொடர்ந்தது. ஒக்டோபர் 2014 இல் கொழும்பில் இடம்பெற்ற மூலதனச் சந்தைக் கருத்தரங்கானது பல சர்வதேச நிதி முகாமையாளர்களை கவர்ந்ததுடன் சிங்கப்பூர், இலண்டன் மற்றும் நியூ யோர்க் ஆகிய நகரங்களில் இடம்பெற்ற முதலீட்டாளர் மன்றங்கள் இவ்விடங்களிலிருந்து வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிப்பதற்கு காரணமாயிருந்தது.

மேலும், சந்தை பங்குபற்றுனர்களிடையே ஓர் நன்னடத்தை கலாச்சாரத்தை வளர்ப்பதனை நாம் தொடர்ந்ததுடன், மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் நம்பகத்தன்மையில் செல்வாக்கினை செலுத்தும் மிகவும் முக்கிய காரணிகளில் ஒன்றாக இது காணப்படுகின்றது. அத்தகைய இடர்நேர்கைகளை நேரத்துடன் மட்டுப்படுத்தும் தேவைகளை உணர்ந்து இ.பி.ப.ஆ. சந்தை பங்குபற்றுனர்களது ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றின் திறனில் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் இடர்நேர்கை முனைப்புடனான மேற்பார்வை நடாத்துவதை தொடர்ந்தது. பணம் சலவை செய்யப்படுவதனை தவிர்ப்பதற்காக முன்நோக்கிய முறைகளில் மூலதனச் சந்தை இடையீட்டாளர்கள் உயர்ந்த நியமங்களை கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்துவதற்கு இ.பி.ப.ஆ. கடப்பாடுடையதாயுள்ளது. இவ்வாண்டில், பணம் சலவை செய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் ஆகியவற்றுக்கு எதிராக உலகளாவிய நிதியியல் முறையினை பாதுகாப்பதற்கு அவசியமான கொள்கைகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஊக்கமளிப்பதற்கும் பொறுப்பாயுள்ள அரசாங்கங்களுக்கிடையேயான ஓர் சுயாதீன அங்கமான, நிதியியல் நடவடிக்கை செயலாக்கக்குழுவினது (நி.ந.செ.) சிபாரிசுகளை பின்பற்றுதல் தொடர்பாக இலங்கையினால் பொறுப்பெடுக்கப்பட்ட மதிப்பீடுகளில் நாம் பங்குபற்றினோம்.

முதலீட்டாளர் பாதுகாப்பும் அதிகாரமளிப்பும் இ.பி.ப.ஆ. இன் ஓர் முக்கியமான முன்னுரிமையாகத் தொடர்ந்தும் காணப்பட்டது. முதலீட்டாளர்களிடையே அதிக தகவலறிந்த மற்றும் ஈடுபாடுடனான பங்குபற்றலை ஊக்குவித்தல் முக்கியமென நாம் கருதுகின்றோம். இவ்வாண்டில், நாம் எமது முதலீட்டாளர் வெளிக்கள நிகழ்ச்சித் திட்டங்களை கல்விசார் கருத்தரங்குகள், பத்திரிகை கட்டுரைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி அரங்க கலந்துரையாடல்கள் போன்ற முன்னெடுப்புகளுடன் மேலும் பரவலாக்கினோம். இதற்கும் மேலாக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. என்பன சிரச தொலைக்காட்சியுடன் கூட்டிணைந்து மூலதனச் சந்தையில் விழிப்புணர்வினை தொடர்ச்சியாக ஏற்படுத்துவதற்காக இலங்கையின் முதலாவது நிதர்சன புதிர் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தியது. எமது மதிப்பீடுகளிலிருந்து நாம் பெற்றுக்கொண்ட பின்னூட்டங்கள் எமது முதலீட்டாளர் கல்வி மூலோபாயத்தினை வடிவமைக்கும் நோக்கில் எமது நிகழ்ச்சித்திட்டங்களின் செயல்விளைவினை அளவிடுவதற்கு வசதியளித்தது.

எதிர்காலத்தை நோக்கி பார்க்கும்போது, இலங்கையில் தற்போது நிதி திரட்டல் மற்றும்

முதலீட்டு நடவடிக்கைகள் வங்கியியல் துறையினால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. மூலதனச் சந்தையின் பருமனானது மொத்த உள்ளூர் உற்பத்தியின் 30% ஆக காணப்படுவதுடன் இது அனைத்து பங்காளிகளுக்கும் ஓர் தனித்தன்மை மிக்க சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது. மூலதனச் சந்தையானது வங்கியியல் துறைக்கு ஓர் குறை நிரப்பியாக நிலைப்படுத்தப்பட்டு நாட்டின் வளர்ச்சி இலக்குகளுக்கு துணைபுரிதல் வேண்டும். பல நாடுகளில் துரிதமான பொருளாதார விரிவாக்கல்களை நிலைநிறுத்துவதற்கு மூலதனச் சந்தைகளை ஆழமாக்குதல் முக்கியமானதாவதுடன் இதனை அடைவதற்கு, முதலீட்டாளர் மற்றும் பொது மக்களது நம்பிக்கை என்பவற்றுடன் சந்தைகள் மற்றும் பங்குபற்றுனர்களது நேர்மையானது முக்கியமாகும்.

துறைசார் பரவலான நெறிமுறைகளில் உயர்ந்த நியமங்களுக்கு எந்தளவு முறைமைப்படுத்தலும் ஈடாகாது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சந்தையின் வளர்ச்சி, நிலைநிறுத்தக்கூடியதன்மை மற்றும் ஸ்திரத்தன்மை என்பவற்றுக்கு மையமாக தொழில்சார் துறைமைத்திறம் மற்றும் நெறிமுறைகளில் ஓர் திடமான கலாச்சாரத்தினை உறுதிப்படுத்துமாறு மூலதனச் சந்தை பங்குபற்றுனர்கள் வேண்டப்பட்டுள்ளார்கள். இந்தத் துறையில், நிலைத்திருக்கக்கூடிய உறவினை உருவாக்கி பராமரிப்பதற்கு நம்பிக்கை தவிர்க்கமுடியாததுடன் எவ்வித சட்ட அல்லது முறைமைப்படுத்தல் தேவைப்பாடும் நிறுவனங்கள் வாடிக்கையாளருடன் கட்டியெழுப்பும் நம்பிக்கையை உருவாக்கவோ பதிலீடு செய்யவோ முடியாது.

மூலதனச் சந்தையின் வளர்ச்சியானது ஒட்டுமொத்தமாக சந்தையில் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை பிரதிபலிக்கின்றது. நம்பிக்கை குறைபாடானது எவ்வாறு உலகத்தைச் சுற்றியுள்ள பல சந்தைகளை பாதித்துள்ளது என்பதை நாம் கண்டுள்ளதுடன் பல எண்ணிக்கையிலான நெருக்கடிகளையும் நாம் கண்கூடாகப் பார்த்துள்ளோம். அனேகமான சமயங்களில் இந்நிகழ்வுகளின் உள்ளார்ந்த காரணியாகக் காணப்படுவது சிறந்து ஆளுகை மற்றும் நெறிமுறைகள் இன்றிக்காணப்படுதல், துர்நடத்தை மற்றும் குறுங்கால இலாபத்தினால் இயக்கப்படும் தொழில்சார்தரமின்மை போன்ற நிகழ்வுகளுடன் தொடர்புபட்டிருப்பதுடன் இவை சந்தைகள் மற்றும் நிதியியல் முறைகளுக்கு மிகவும் அவசியமான நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றில் கடுமையான விளைவுகளை உருவாக்கும்

பொதுமக்களது நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை மீளப்பெறுவதற்கு தனிநபர் பங்குபற்றுனர்களது நடவடிக்கைகளுக்கு ஓர் திடமான நெறிமுறை பரிமாணம் அவசியமாகின்றது என நாம் நம்புகின்றோம். சிறந்த நடத்தையானது வெறுமனே சட்டமாக்கப்பட்டு முறைமைப்படுத்தப்படமுடியாது. அது கம்பனிகளினால் ஊக்குவிக்கப்பட்டு அகவயப்படுத்தப்படல் வேண்டும். எமது மூலதனச் சந்தையின் முக்கியத்துவமானது, அனைத்து பங்காளிகளுக்கிடையேயும் பொறுப்புக்கூறல் மற்றும் தனியுரிமை கலாச்சாரம் போன்றவற்றால் எமது முறைமைப்படுத்தல் மற்றும் ஆளுகை கட்டமைப்பானது வலுப்படுத்தப்பட்டால் மாத்திரமே உறுதிப்படுத்தப்படும்.

எனவே, முறைமைப்படுத்துபவர்கள் எங்கிருந்தாலும் இதேபோன்ற சிக்கல்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள். முறைமைப்படுத்துபவர் என்ற ரீதியில் எமது இலக்கானது நியாயமான, செயற்திறனான மற்றும் வெளிப்படையான சந்தைகளை உறுதிப்படுத்தும் நிலையில் இருப்பதாகும். முதலீட்டாளர்களை பாதுகாக்கும் எந்தவிதமான முனைப்பிலும் இது மையமாகக் காணப்படல் வேண்டும். இந்த பங்களிப்பினை பயனுறுதிமிக்க விதத்தில் மேற்கொள்வதற்கு இ.பி.ப.ஆ. எந்தளவுக்கு சுயாதீனமாக்கப்பட முடியுமோ அந்தளவுக்கு சுயாதீனமாக்கப்பட்டு செயலகமானது எவ்வித வெளியார் செல்வாக்குமின்றி அதன் பொறுப்பாண்மையினை நியாயமாகவும் பக்கச்சார்பின்றியும் மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படல் வேண்டும்.

இதன் காரணமாக, இ.பி.ப.ஆ. பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட ஓர் வசதியளிக்கக்கூடிய முறைமைப்படுத்தல் கட்டமைப்பினைப் பின்பற்றும். முதலீட்டாளர்களின் பாதுகாப்பு, நடுவர் சேவைகளில் வினைத்திறன், நியாயமான மற்றும் ஒழுங்குமுறையான சந்தைகள் என்பவற்றுடன் முறைசார் இடர்நேர்கைகளை கட்டுப்படுத்துதல் மற்றும் இணக்கப்பாட்டு கலாச்சாரத்தினை தீவிரமாக ஊக்குவித்தல் என்பனவாகும். எமது கொள்கைகளை உருவாக்குவதில் நாம் வெளிநாட்டு முதலீட்டுத் தேக்கங்களை கவர்வதற்கு முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச ரீதியில் பிரசித்திபெற்ற மற்றும் சிபாரிசு செய்யப்படும் நியமங்களான ச.பி.ஆ.ஒ. க்கு எதிராக நாம் எம்மை திறன்மதிப்பு செய்தல் வேண்டும்.

இ.பி.ப.ஆ. அதனால் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களிடையே சிறந்த வணிக நடத்தைகளை ஊக்குவிப்பதற்கு கவனஞ்செலுத்தும். இது சரியான ஆளுகை பொறிமுறை மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளும் இருப்புகளுடனும் சரியான மற்றும் பொருத்தமான நிறுவனங்களினால் முதலீட்டாளர்களது தேவைகள் முன்னுரிமையளிக்கப்பட்டு முகாமைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு நாம் முயற்சிக்கின்றோம். அதே சமயத்தில், இ.பி.ப.ஆ. பயனுறுதிமிக்க சந்தை கண்காணிப்பிற்காக தொழில்நுட்பத்தை நிரம்பிய விதத்தில் பயன்படுத்தும். இதன் மூலம் தவறான செயல்களை நேரத்துடன் இனங்கண்டு தற்காப்பு வழிமுறைகளை மேற்கொள்வதற்காக அனைத்து முறைமைப்படுத்தப்படுபவர்களையும் தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கு சந்தைப் பங்குபற்றுனர்களது நடத்தையில் பலமான மேற்பார்வையினை இ.பி.ப.ஆ. மேற்கொள்ளும். ஏதேனும் மீறுகைகள் கண்டுபிடிக்கப்பட்டால், நாம் உடனடி நடவடிக்கையை மேற்கொள்வோம். ஏனெனில் விரைவாக செயற்படத் தவறினால் அது நெறிமுறையற்ற நடத்தையை ஊக்குவிக்கும்.

எமது முறைமைப்படுத்தல் மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தி பொறுப்பாண்மையினை அடைவதற்கு நாம் எமது ஊழியர்களை செயலூக்கப்படுத்தும் நோக்கிலும் அவர்களது கடமைகளை சிறந்த முறையில் செய்வதற்கு தேவையான அறிவினை வழங்குவதற்காகவும் எமது ஊழியர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதை நோக்கி நாம் கருமமாற்றுகின்றோம். மூலதனச் சந்தையினை மேலும் பலப்படுத்துவதற்கு இந்த வருடத்தில் நாம் மேற்கொண்ட முன்னேற்றங்கள் இ.பி.ப.ஆ. இன் முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களது விடாமுயற்சி, கடப்பாடு மற்றும் நிபுணத்துவம் இன்றி சாத்தியப்பட்டிருக்காது.

நிறைவாக, நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தலைவர், ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள், கொ.ப.ப., மூலதனச் சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் ஏனைய பங்காளிகள் ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். 2014 இல் மேற்கொண்ட பங்களிப்புக்காக நான் முன்னைய தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எமது முறைமைப்படுத்தல் மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தி பொறுப்பாண்மையினை நிறைவேற்றுவதற்கு அனைத்து பங்காளிகளிடமிருந்தும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் உறுதுணையை நான் எதிர்பார்க்கின்றேன்.



**வஜிர விஜேகுணவர்தன**
*பணிப்பாளர் நாயகம்*

23 மே 2015

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

*2015 மே 20 இல் உள்ளவாறு*



1. திரு. அர்ஜூன ஹேரத்
2. திரு. சுரேஷ் ஷா
3. திரு. எஸ்.ஆர்.ஆட்டிகல
4. திரு. ரனெல் டி. விஜேசிங்க
5. திரு. திலக் கருணாரத்ன
6. திரு. டி.என்.சிறிவர்தன
7. திரு. பி.சமரசிறி
8. திரு. ரஜீவ் அமரசூரிய
9. திருமதி. டில்சானி விஜேவர்தன
10. திருமதி. மரீனா பர்னாந்து



### திரு. திலக் கருணாரத்ன

கொழும்பு ஆனந்தா கல்லூரியில் அவரது நடுத்தரக் கல்வியை நிறைவு செய்ததன் பின்னர் அவர் அப்போதைய இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு கெம்பஸ்க்கு நுழைந்து இரசாயன சாஸ்திரத்தில் இளமானி பட்டத்தைப் பெற்றார். முதுமானி யுகத்திற்கு முன்னர், அவர் வணிக முகாமைத்துவத்தில் பட்டப்படிப்பிற்கு பின்னரான டிப்ளோமா ஒன்றை பெற்றுக்கொண்டார். இவர் ஓர் பட்டய இரசாயன விஞ்ஞானியாவார். திரு. கருணாரத்ன அவர்கள் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஜப்பான், இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் ஏனைய நாடுகளில் சந்தைப்படுத்தல் மற்றும் பொது முகாமைத்துவத்தில் பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றுள்ளார். இவர் அத்துடன், ஜப்பானில் **AOTS** உச்ச முகாமைத்துவ கற்கைத்தொடர் 1991, ஓர் மூலோபாய முகாமைத்துவ கற்கைத்தொடர் (**IIM** அலஹாபாத் இந்தியா 1993) மற்றும் 1997 இல் இங்கிலாந்திலுள்ள ரீடிங் பல்கலைக்கழகத்தில் உயர்ந்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் **AIT** ஆகியவற்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்தார்.

திரு. கருணாரத்ன அவர்கள் ஓர் ஒப்படை அதிகாரியாக அப்போதைய **RCyAF** இல் தனது தொழிலை ஆரம்பித்து பின்னர் ஓர் பல்தேசிய கம்பனியில் முகாமைத்துவ பயிற்சியாளராக சேர்ந்து ஓர் குறுகிய காலப்பகுதியில் சிரேஷ்ட முகாமையாளராக உயர்வு பெற்றார். இதன் பின்னர் இவர் தனது சொந்த வணிகத்தை ஆரம்பித்து 35 வருடங்களின் பின்னர் தனது துறையில் ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவராகக் காணப்பட்டார். இவர் பிலாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகத்தில் (**PRI SL**) சந்தைப்படுத்தல் திறமைக்காக ஓர் விசேட விருதினை வென்றார். இவர் வணிக சாதனைகள் மற்றும் சமூக சேவைக்கு பல விருதுகளைப் பெற்ற ஒருவராவார்.

1983 இல் ஸ்கந்திநேவிய நாடுகளுக்கு இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் அனுசரணையில் முதலீட்டு ஊக்குவிப்பு தூதுக் கோஷ்டியின் ஒரு அங்கத்தவராக திரு. கருணாரத்ன காணப்பட்டார். 2000 ஆம் ஆண்டுவரை 12 வருடங்களுக்கு இவர் ஓர் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்து தனியார் துறைக்கு மீண்டும் சேர்வதற்காக அவராகவே பதவி விலகினார். இவர் இலங்கை பணிப்பாளர் நிறுவகத்தின் வாழ்நாள் அங்கத்தவராதுடன், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர், லயன்ஸ் இயக்கத்தின் முன்னாள் பிரதி மாவட்ட ஆளுனர், தற்போது ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும் ஆவார். இவர் 2008 இலிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சபை அங்கத்தவரும், பிரிட்ஜ் விளையாட்டின் ஆளுகை அங்கமான இலங்கை பிரிட்ஜ் சம்மேளனத்தின் தலைவராக 2009 முதல் 2011 வரை பதவி வகித்தார். இவர் ஓர் விருப்பமிக்க பிரிட்ஜ் விளையாட்டு வீரராவார். இவர் வன விலங்குகளும் பறவைகளும் சேர்ந்த உயிரினங்களில் ஆர்வமிக்கவரும் ஓர் சுற்றுச்சூழல் பாதுகாப்பாளரும் ஆவார்.

### திரு. டி.என்.ஆர். சிறிவர்தன

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பூகோளவியலில் இளமானி (மேன்மை) பட்டத்தையும் இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பட்டத்தையும் (**LLB**) பெற்றுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் எல்.எல்.எம். பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பதிவுசெய்யப்பட்ட மாணவரும் ஆவார். இவர் தொழில் ரீதியாக ஓர் வழக்கறிஞர் ஆவார். இவர் 1988 இல் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் ஓர் கம்பனிகள் சோதனைகாரராக சேர்ந்து பதிவாளர் நாயகமாக (கடமை பொறுப்பு) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் பதவிவழி அங்கத்தவராகவும் இலங்கை காப்புறுதிச் சபையினதும் பதவிவழி அங்கத்தவராவார்.

### திரு. அர்ஜுன ஹேரத்

அர்ஜுன அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் தலைவரும் எர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் ஆலோசனைச் சேவைகளுக்கு தலைமை வகிக்கும் ஓர் பங்காளரும் ஆவார். இவர் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் தலைவரும் ஆசிய பசிபிக் கணக்காளர்களின் ஐக்கியத்தின் பணிப்பாளரும் ஆவார். இவர் நியதிச்சட்ட கணக்கீட்டு நயங்கள் குழு மற்றும் நியதிச்சட்ட கணக்காய்வு நியமங்கள் குழு ஆகியவற்றின் அங்கத்தவருமாவார். இவர் சர்வதேச கணக்காளர்கள் சம்மேளனத்தின் தொழில்சார் கணக்கீட்டு ஒழுங்கமைப்பு அபிவிருத்திக் குழுவிலும் அங்கத்தவராக சேவையாற்றுகின்றார். அர்ஜுன அவர்கள் ஓர் பட்டயக் கணக்காளர், இளமானி பட்டதாரி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதியியல் பொருளியலில் முதுமானி பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் ஸ்ரெட்ச்க்லைட் பல்கலைக்கழகத்தின் முதுமானி பட்டதாரியுமாவார்.

### திரு. ரஜீவ் அமரசூரிய

திரு. ரஜீவ் அமரசூரிய அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் இளமானி (**LLB Hons**) பட்டத்தைக் கொண்டுள்ளதுடன் ஓர் வழக்கறிஞருமாவார். இவர் முகாமைத்துவக் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (**CIMA) (UK**) சமூக அங்கத்தவரும் ஓர் உலகளாவிய முகாமைத்துவ பட்டயக் கணக்காளரும் (**CGMA**) ஆவார்.

திரு.அமரசூரிய அவர்கள் உயர் நீதிமன்றம் மற்றும் இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் முன்னர் வழக்கமான தொழில்நடத்துனராக கடமையாற்றுவதுடன் ஓர் கூட்டாண்மை மற்றும் சட்ட ஆலோசகருமாவார்.

2013 இல், திரு. அமரசூரிய அவர்களுக்கு முகாமைத்துவ பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் (**CIMA**) 40 வயதுக்கு குறைந்த மிகவும் பிரபலமான **CIMA** அங்கத்தவராக **CIMA** நட்சத்திர தங்க விருது வழங்கப்பட்டது. இவர் இலங்கை சட்டக் கல்லூரியினால் 2003 இல் நடாத்தப்பட்ட வழக்கறிஞர் இறுதிப் பரீட்சையில் உயர் நிலையை அடைந்து தங்கப் பதக்கம் பெற்றார்.

திரு. அமரசூரிய அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பீடத்தில் வரிச் சட்டத்தில் விஜயம்செய்யும் விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் இலங்கைச் சட்டக் கல்லூரியிலும் ஓர் பரீட்சகராக கடமையாற்றியுள்ளார். இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தின் 2015 தேசிய சட்டக் கருத்தரங்கின் தலைமையாகவும் 2014 தேசிய சட்டக் கருத்தரங்கில் அடிப்படை உரிமை நிறை அமர்வில் தலைவராகவும் இருந்துள்ளார். திரு. அமரசூரிய அவர்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர் சங்கத்தின் தற்போதைய தலைவருமாவார்.

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தொடர்ச்சி.

### செல்வி. டில்சானி விஜயவர்தன

செல்வி. டில்சானி விஜயவர்தன அவர்கள் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞராவதுடன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில், வர்த்தகச் சட்டத்தில் விசேடத்துவம், முதுமானி பட்டத்தையும் (LLM) பெற்றவருமாவார். சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வில் இலங்கையில் தகுதி முறையில் முதல் பத்து ஸ்தானத்தினுள் வந்ததுடன் அரசாங்கத்தின் “மஹாபொல அனுசரணை” வழங்கப்பட்டது. இலங்கையின் சட்டக் கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் தகுதி அடிப்படையில் இவர் முதல் 2% க்குள் அடிங்கினார். கே. கணகீஸ்வரன், ஜனாதிபதி சட்டவுரைஞர், அவர்களது ஆலோசனை அறையில் 18 வருடங்களுக்கு மேலாக உயிர்ப்புள்ள சட்டத்துறை பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். இவர் கூட்டாண்மை, வங்கியியல், மற்றும் அறிவுசார் சொத்து மற்றும் காப்புறுதி, வர்த்தக நடுத்தீர்ப்பு உள்ளடங்களான வர்த்தக சட்ட விடயங்கள் போன்றவற்றில் முதன்மை மற்றும் மேன் முறையீட்டு

வழக்காடல்களில் தனித்திறன் பெற்றுள்ளார். அத்துடன் கூட்டாண்மை, வங்கியியல், பிணையங்கள், காப்புறுதி மற்றும் ஏனைய வர்த்தக விடயங்களில் சட்ட அபிப்பிராயங்களை வரைதல் மற்றும் சீரமைத்தல் என்பவற்றிலும் ஈடுபட்டுள்ளார். இவர் கூட்டாண்மைச் சட்டம், வங்கியியல் மற்றும் நடுத்தீர்ப்பு தொடர்பான விடயங்களில் சட்ட ஆலோசனையையும் வழங்கியுள்ளார். இவர் சிங்கப்பூரிலுள்ள ஓர் முன்னணி சட்ட நிறுவனமான “சூக் லின் அன்ட் பொக்”, வழக்குரைஞர்கள் மற்றும் மன்றாடியார்கள், இல் தொழில் அனுபவத்தையம் பெற்றுள்ளார். டில்சானி அவர்கள் பல மன்றங்களில், நடுத்தீர்ப்பு, அறிவுசார் சொத்து, கம்பனிச் சட்டம் மற்றும் வர்த்தகச் சட்டத்தின் பல்வேறு தோற்றங்கள் போன்ற தலைப்புகளில் பல கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். 2014 இல் இவர் ஜனாதிபதி சட்டவுரைஞர் கே. கணகீஸ்வரனுடன் கூட்டுச்சேர்ந்து 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளை ஆராயும் “கம்பனிகள் சட்டம்” எனும் புத்தகத்தை எழுதினார்.

### திருமதி. மெரினா பர்னாந்து

திருமதி. மெரினா பர்னாந்து அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பட்டத்தையும் பொதுச் சட்டத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் டிசம்பர் 1993 இல் வழக்குரைஞராக அனுமதிக்கப்பட்டார்.

இவர் தற்போது வர்த்தகச் சட்டத்தின் அனைத்து பிரிவுகளிலும் சட்ட ஆலோசனைச் சேவையை வழங்குகின்றார்.

2004 ஜனவரியில் இவர் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்டம் மற்றும் அமுலாக்கல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ஜுன் 2007 இல் இவர் இ.பி.ப.ஆ. இன் பிரதிப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டு இப்பதவியில் 2007 முதல் 2009 வரை சேவையாற்றினார்.

ஜுன் 2007 முதல் ஜுன் 2008 வரையான காலப்பகுதியில் இவர் இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகத்தின் பணியிலிருந்தார்.

இவர் பின்வரும் முறைமைப்படுத்தல் முன்னெடுப்புகளில் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவா்த்தனை ஆணைக்குழுவினை வழிநடத்தினார்.

- பிணையங்களாக்குதலை முறைமைப்படுத்துவதற்கான சட்டத்தின் உருவாக்கம் (வர்த்தமானி, மார்ச் 2009)
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை நியமங்களது அறிமுகம்
- எல்லைக் கடன் வழங்குனர்கள், முதலீட்டு முகாமையாளர்கள் மற்றும் கடன் தரப்படுத்தல் முகவர்களுக்கான முறைமைப்படுத்தலது அறிமுகம்

காப்புறுதித் துறைக்கு நியமிக்கப்பட்ட முறைமைப்படுத்துபவராக இ.பி.ப.ஆ. நியமிக்கப்பட்ட காலப்பகுதியில் இவர் இலங்கை காப்புறுதிச் சபையின் சட்டம் மற்றும் அமுலாக்கல் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

இ.பி.ப.ஆ. இல் இவரது நியமனத்திற்கு முன்னர் இவர் ஓர் தனிப்பட்ட சட்டத்துறை வழக்குரைஞராகவும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கும் மற்றும் முற்றிலும் உரித்துவத்தைக் கொண்ட கொ.ப.ப. இன் துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்பகத்திற்கும் சட்ட ஆலோசகராகவும் கடமையாற்றினார்.

### திரு. எஸ்.ஆர்.ஆட்டிகல

திரு. எஸ். ஆர். ஆட்டிகல அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஓர் உதவி ஆளுனராவதுடன் தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளராக கடமையாற்றுகின்றார். இவர் நாணய மற்றும் இறைவரிக் கொள்கை ஆகிய பிரிவுகளில் 23 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. ஆட்டிகல அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் வோர்விக் பல்கலைக்கழகத்தில் அளவியல் அபிவிருத்தி பொருளாதாரத்தில் முதுமானி பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞானத்தில் இளமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திறைசேரியின் பிரதிச் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் திரு. ஆட்டிகல அவர்கள் நிதி திட்டமிடல் அமைச்சின் இறைவரிக் கொள்கை திணைக்களம் மற்றும் அரச நிறுவனங்கள் திணைக்களம் ஆகியவற்றின் பணிப்பாளர் நாயகமாக செயலாற்றியுள்ளார். இவர் அரசாங்கத்தின் முயற்சியான இறைவரி ஒருங்கிணைப்பு செயல்முறைக்கு கணிசமானளவு பங்களிப்பை மேற்கொண்டுள்ளார்.

திரு. ஆட்டிகல அவர்கள் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளராகவும் பதில் தலைவராகவும் இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையில் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இலங்கை துறைமுக அதிகார சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதிச் சபை போன்ற முக்கியமான அரச நிறுவனங்களின் சபைகளில் சபை அங்கத்தவராக திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

தற்போது திரு. ஆட்டிகல அவர்கள் பிராந்திய அபிவிருத்தி வங்கி, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் வானூர்தி சேவைகள் மற்றும் செவன நிதியம் என்பவற்றில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

### திரு. சுரேஷ் ஷ்சா

திரு. சுரேஷ் ஷ்சா அவர்கள் சிலோன் பெவரேஜர்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. மற்றும் லயன் புரவரி (சிலோன்) பி.எல். சி. ஆகியவற்றின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் ஆவார். இவர் கார்சன் கம்பர்பெச் பி.எல்.சி., புக்கிட் டாரா பி.எல்.சி. மற்றும் இலங்கை வணிக அபிவிருத்தி மையம் ஆகியவற்றின் பணிப்பாளரும் ஆவார்.

இவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தற்போதைய தலைவரும் மற்றும் இலங்கை தொழில்தருநர் சம்மேளனத்தின் பிரதித் தலைவரும் ஆவார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் சமூக அங்கத்தவரும் ஆவார்.

### திரு. ரணில் திஸ்ஸ விஜேசிங்ஹ

திரு. ரணில் விஜேசிங்க அவர்கள் ஓர் பட்டயக் கணக்காளராவதுடன் இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் சமூக அங்கத்தவராவார். அத்துடன் இவர் ஐக்கிய அமெரிக்க குடியரசின் பென்சில்வேனியாவிலுள்ள பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் பன்முக நிறுவனங்கள் மற்றும் அரசியல் இடர்நேர்கை பகுப்பாய்வு என்பவற்றில் பல்கலைக்கழகத்தின் பொது மற்றும் சர்வதேச விடயங்களது பட்டதாரி கல்லூரியில் விசேட கற்கையை தொடர்ந்ததுடன் பல தென்கிழக்கு ஆசிய நாடுகளது தேசிய பொருளாதார மூலோபாயங்கள் மற்றும் செயல்திட்டங்களில் ஆய்வினையும் மேற்கொண்டுள்ளார். இதன் அடிப்படையில் இவர் தேசிய பொருளாதார கொள்கை பேச்சுவார்த்தைக்கு விரிவாக பங்களிப்பாற்றியுள்ளதுடன், பல மதிப்பார்ந்த ஆலோசனை குழுக்களில் சேவையாற்றும்போது இவை நிறுவன மறுசீரமைப்புக்கான முதலீட்டு மற்றும் நிதிசார் ஊக்குவிப்புகள் மற்றும் மூலோபாயங்களை வடிவமைத்துள்ளன.

KPMG இல் பயிற்றுவிக்கப்பட்டார். தகமையின் பின்னரான இவரது அனுபவமானது இலங்கையின் பட்டியலிடப்பட்டுள்ள மிகப்பெரிய பன்முகப்படுத்தப்பட்ட பொதுக்கம்பனியான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் குழுமம், பஹாமாஸில் டெலொய்ட் மற்றும் இலங்கையின் பிரைஸ்வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸில் ஆலோசனைப் பிரிவின் தலைவர் மற்றும் பங்காளர் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இவர் துணிகர முதலீடு மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஆயோஜனா நிதி முகாமைத்துவக் கம்பனியின் தலைவராகவும் லங்கா வென்சர்ஸ் நிறுவனத்தின் நிறுவுனர் பணிப்பாளராகவும் நெஷனல் வெல்த் கோப்பரேஷனின் நிறுவுனர் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் ஓர் முறைமைப்படுத்துபவராகவும், முதலாவது நுகர்வோர் விடயங்கள் மன்றம் மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை என்பவற்றில் சேவையாற்றியுள்ளார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஓர் சுயாதீன சர்வதேச ஆலோசகராக இவர் ஆப்கானிஸ்தான், இந்தியா, ஆர்மேனியா, கிர்கிஸ்தான் மற்றும் அஸர்பஜான் ஆகிய நாடுகளில் அரசத் துறைக்கு பணிகளை நடாத்தியுள்ளார்.

மூன்றரை தசாப்த காலப்பகுதியில், இவர் தனித்தன்மையான கலப்பு அனுபவத்தையும் இலங்கை மற்றும் பல வெளிநாடுகளில் வெளிப்பாட்டையும் கொண்டுள்ளதுடன் தனிப்பட்ட தொழில்சார் பழக்கம் மற்றும் தனியார் தொழில்துறைக்கு இடையேயான தொழில் அனுபவத்தில் ஓர் சிறப்புமிக்க சமநிலையையும் கொண்டுள்ளார். அத்துடன் இலங்கை மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களில் அரசு துறையில் ஆலோசனை மற்றும் முறைமைப்படுத்தல் பங்களிப்பிலும் சமநிலையைக் கொண்டுள்ளார்.

இவர் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் முன்னாள் தலைவராவார். இவர் 23 தேசங்களை உள்ளடக்கிய ஆசிய மற்றும் பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பினதும் முன்னாள் தலைவராவார். 40 வருட காலப்பகுதியில் இந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இலங்கையர் இவர் ஆவார்.

இவர் தற்போது ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ் பி.எல்.சி. இல் பணிப்பாளராகவும், அதன் கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும் கடமையாற்றுகின்றார். பெப்ரவரி 2015 இல் இவர் இலங்கை வங்கியின் ஓர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு அதன் கணக்காய்வுக் குழுவுக்கு தலைமை தாங்குவதுடன் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழு அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

### திரு. பி. சமரசிரி

திரு. பி. சமரசிரி அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஓர் பிரதி ஆளுனராவார். பிரதி ஆளுனராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் இவர் இலங்கை மத்திய வங்கியில் உதவி ஆளுனர், நாணயச் சபையின் செயலாளர், இணக்கப்பாட்டு அதிகாரி, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் போன்ற சிரேஷ்ட பதிவிகளை வகித்துள்ளார். கடந்த நான்கு வருடங்களாக இலங்கை வங்கியாளர்கள் நிறுவகத்தின் பிரதித் தலைவர் பதவியை வகிப்பதுடன், இலங்கை காப்புறுதிச் சபையின் அங்கத்தவர், கடந்த ஐந்து வருடங்களாக பெப்ரவரி 2015 வரை இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

திரு. சமரசிரி அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியலில் இளமானி பட்டத்தையும் (BA Hons.) ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் கன்சாஸ் பல்கலைக்கழகத்தில் பொருளியிலில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். திரு. சமரசரி அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் புள்ளிவிபரங்கள், பொருளாதார கொள்கைகள், வங்கிகள் மற்றும் வங்கிகளல்லாத நிதி நிறுவனங்களது முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை, நிதியியல் முறை ஸ்திரத்தன்மை, கூட்டாண்மை ஆளுகை, நாணய முகாமைத்துவம், அந்நிய செலாவணிக் கொள்கைகள், நிதியியல் நுண்ணறிவு மற்றும் பிராந்திய அபிவிருத்தி ஆகிய பிரிவுகளில் 33 வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. சமரசரி அவர்கள் பின்வரும் இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்படட மூன்று புத்தகங்களை சிங்கள மொழியில் எழுதியுள்ளார். “நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள், வங்கி மற்றும் பொருளாதாரம்”, “அடிப்படை பொருளாதாரக் கொள்கைகள்” மற்றும் “பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள்” என்பனவாகும். இவர் பொருளாதாரம் மற்றும் நிதியியல் தலைப்புகளில் பல பிரசுரங்கள் மற்றும் பத்திரிகைகளில் பல்வேறு கட்டுரைகளை பிரசுரித்துள்ளார்.

## சிரேஷ்ட முகாமைத்துவம்

*2015 மே 20 இல் உள்ளவாறு*



1. வஜிர விஜேகுணவர்தன (பணிப்பாளர் நாயகம்)
2. தம்மிக பெரேரா (பிரதிப் பணிப்பாளர் நாயகம்)
3. அயந்தி ஜயரத்ன (பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்)
4. சுரனா பர்னாந்து (பணிப்பாளர் மேற்பார்வை)
5. துசாரா ஜயரத்ன (பணிப்பாளர் வெளிவாரி உறவுகள் மற்றும் கண்காணிப்பு)
6. ரொஹான் செனவிரத்ன (ஆலோசகர் விசேட திட்டங்கள்)
7. அயந்தி அபேவிக்ரம (பணிப்பாளர் சட்டம் மற்றும் வலியுறுத்தல்)
8. உஷா சிவகுருநாதன் (உதவிப் பணிப்பாளர் மேற்பார்வை)
9. சிந்தக மென்டிஸ் (பணிப்பாளர் புலனாய்வு)
10. ஹர்சன பீரிஸ் சூரியபெரும (பணிப்பாளர் கூட்டாண்மை அலுவல்கள்)

*சமூகமளிக்காதவர்*

இன்திகாப் சமீம் (பணிப்பாளர் ஆய்வு மற்றும் கொள்கை)




1 2 3 4 5 6 7 8 9 10

# பொருளியல் மீளாய்வு

### உலகப் பொருளாதாரம்

2014 ஆம் ஆண்டினை ஓர் திடமான சாத்தியமான உய்த்துணர்வுடைய ஆண்டாக வரையறுக்கக்கூடிய அதேவேளை அது குறைவான எதிர்பார்ப்புகளையுடைய ஓர் ஆண்டாகவும் வரையறுக்கப்படலாம். உலகளாவிய பொருளாதாரமானது படிப்படியான மீளெழுச்சிப் பாதையில் 2014 இல் ஓரளவு விரைவான வேகத்தில் விரிவடைந்தது. ஐரோப்பிய வலயத்தில் காணப்பட்ட மிதமான மறுமலர்ச்சி மற்றும் சீனா மற்றும் ஜப்பான ஆகிய நாடுகளில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியானது இந்தியாவில் ஏற்பட்ட வளர்ச்சியின் நிமித்தம் சமப்படுத்தப்பட்டு உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிந்தது.

### G20 பொருளாதாராங்கள்

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒழுங்கமைப்பானது 20 பாரிய பொருளாதாரங்களை உள்ளடக்கிய குழுவின் ஒன்றுசேர்த்த மொத்த உள்ளூர் உற்பத்தியானது 2014 இல் 3.4% ஆல் விரிவடைந்தது. இது 2013 இன் 3.2% வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது ஓர் சிறிய வளர்ச்சியைக் காட்டியது. G-20 பொருளாதாரங்கள் ஒன்று திரட்டிய அடிப்படையில் உலகளாவிய பொருளாதார உற்பத்தியில் அண்ணளவாக 90% த்திற்கு பங்களிப்பு செய்தது.

2013 இல் ஐரோப்பிய வலயத்தில் காணப்பட்ட 0.5% பொருளாதாரச் சுருக்கத்திலிருந்து 0.9% பொருளாதார உற்பத்தியின் வளர்ச்சியானது முன்னேற்றத்திற்கு துணைபுரிந்தது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் பொருளாதார வளர்ச்சியானது சிறிய மாற்றத்தையும், சீனாவினது வளர்ச்சியானது 7.8% இலிருந்து 7.4% ஆகக் குறைவடைந்தும் காணப்பட்டது. இந்தியாவும் ஐக்கிய இராச்சியமும் பொருளாதார வளர்ச்சியில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்ததுடன் ஜப்பானது பொருளாதாரமானது தீவிரமாக குறைவடைந்தது. (உருவம் 1)

### பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் ஒழுங்கமைப்பு (OPEC) மற்றும் எண்ணெய் விலைகள்

மேலும் இவ்வருடமானது உலகளாவிய பத்திரிகைத் தலைப்புகளில் இடையிடையே வந்த சில முக்கிய அபிவிருத்திகளையும் கொண்ட வருடமாக பண்பிடப்படமுடியும். BRICS (பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா) உள்ளடங்களான வெளித்தோன்றும் பொருளாதாரங்கள் மற்றும் பாரிய பொருளாதாரங்களில் காணப்பட்ட எதிர்பாராத பலவீனமான கேள்வியின் காரணமாக எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. OPEC நாடுகளின் தீர்மானமான நடப்பு நிலைமையினை பராமரித்தல் மற்றும் OPEC அல்லாத குறிப்பாக ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் தொடர்ச்சியான அதிகரித்த உற்பத்தியானது அடுத்துள்ள காரணியாக காணப்பட்டது.

அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் நெருக்கடிக்கு முன்னரான ஏற்றத்தின்போது வியாபித்திருந்த மரபுகள் மற்றும் உயர்ந்த தனியார் மற்றும் பொதுக் கடன்களின் மூலமான பின் விளைவுகள் தொடர்ந்தும் மீளெழுச்சி வாய்ப்புகளுக்கு ஓர் பின்னடைவாகக் காணப்பட்டது. மறுபுறத்தில், வெளித்தோன்றும் சந்தைகள் ஓர் சீராக்கல் நிலையினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதாவது அமெரிக்க மத்திய வங்கியினால் பண நிரம்பல் அதிகரிக்கப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற மூலதன உள்வருகைகளின் நலன்களை அனுபவித்த பின்னர் மூலதன வெளிச்செல்கைகளுக்கு முகங்கொடுக்கவேண்டியிருந்தது.

### பாரிய பொருளாதாரங்களில் பல்திசை விரிவாக்கம்

வளர்ச்சி சதவீதமானது எவ்வாறாயினும் பாரிய பொருளாதாரங்களில் பல்திசை விரிவாக்கங்களை மறைத்திருந்தது. உலகளாவிய நிதியியல் சந்தைகள் நியாயமான விலையிடப்பட்ட உரித்துடைமைகளுடன் மிதப்புடன் காணப்பட்டதுடன் ஓரளவு மாறும்தன்மையுடன் சேர்ந்து பரப்புகள் அமுக்கப்பட்டன. அத்தகைய பிரஸ்தாபங்களின் மத்தியிலும் நிலைமையானது முதலீடுகளில் தெளிவாகத் தெரியத்தக்க எழுச்சியைக் காண்பிக்கவில்லை. முக்கியமாக அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில், மொத்த உள்ளூர் உற்பத்தியின் சதவீதமாக முதலீட்டு ஈவானது முடக்கிக் காணப்பட்டது. வட்டி வீத பரப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இடர்நேர்கை பரப்புகள் வெளித்தோன்றும் சந்தைப் பொருளாதாரங்களில் மேல்நோக்கிய சாய்வுக்கான நாட்டத்தை காட்டியது. இதற்கு வேறுபாடாக நீண்ட கால அரசாங்க முறிகளில் விளைவானது பாரிய அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் வீழ்ச்சியினைத் தொடர்ந்தது.

உருவம் 1: பொருளாதார வளர்ச்சி வீதங்கள்

| | 2013<br>% | 2014<br>% |
|---|---|---|
| உலகளாவிய உற்பத்தி | 3.4 | **3.4** |
| அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் | 1.4 | **1.8** |
| ஐக்கிய அமெரிக்கா | 2.2 | **2.4** |
| ஐரோப்பிய வலயம் | -0.5 | **0.8** |
| ஜப்பான் | 1.6 | **-0.1** |
| ஐக்கிய இராச்சியம் | 1.7 | **2.6** |
| வெளித்தோன்றும் மற்றும் அபிவிருத்தியடையும் ஆசியா | 7.0 | **6.8** |
| ரஷ்யா | 1.3 | **0.6** |
| சீனா | 7.8 | **7.4** |
| இந்தியா | 6.9 | **7.2** |
| ஆசியான் - 5 | 5.2 | **4.6** |

*சர்வதேச நாணய நிதியம் - உலக பொருளாதார கண்ணோட்டம்*

### உள்நாட்டு பொருளாதாரம்

இலங்கையைப் பொறுத்தவரையில் 2014 ஆம் ஆண்டானது ஏனையவற்றுக்கிடையில் ஓர் திடமான சாத்தியமான பாரியபொருளாதார நுட்ப வேறுபாட்டுடன் இடையிடையே பரந்து காணப்பட்ட ஓர் ஆண்டாக ஆனால் வளர்ச்சியை கடினமாக்கும் வெளிவாரி காரணிகளால் இணைந்து காணப்பட்டது. ஒரு புறத்தில் யுத்தத்தின் பின்னரான அடித்தளத்தின் மேல் அமைக்கப்பட்ட வளர்ச்சி உத்வேகம் தொடர்ந்து ஆசிய பிராந்தியத்திலேயே வேகமாக வளர்ச்சியடையும் பொருளாதாரங்களில் ஒன்றாக இலங்கை காணப்பட்டது. மறுபுறத்தில்,

உருவம் 2: இலங்கையின மெய்யான மொ.உ.உ.வளர்ச்சி




உருவம் 3: வணிகம் மேற்கொள்வதற்கான தொல்லையற்ற சுட்டி 2014




உருவம் 4: பணவீக்கம்




உருவம் 5: வட்டி வீதங்கள்




அத்தகைய திடமான சார்பான நாட்டத்தின் மத்தியிலும் சவால்கள் மற்றும் அக்கறைகள் தொடர்ந்து இருந்தன. பலவீனமான வெளிவாரி நிலைமை, சிறிதளவு சென்மதி நிலுவை நிலைமை மற்றும் தொடர்ந்து நாணயத்தில் அழுத்தத்தை பிரயோகிக்கும் நீடித்த வர்த்தகப் பற்றாக்குறை என்பவற்றுடன் இணைந்து இடைவிடாத நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் முக்கிய அக்கறைகளாக இருந்தன.

### மொ.உ.உ. வளர்ச்சி மற்றும் துறைகள்

இலங்கையின் மொத்த உள்ளூர் உற்பத்தியானது (மொ.உ.உ.) 2013 இல் பதிவுசெய்யப்பட்ட 7.2% இலும் பார்க்க ஓரளவு மேம்பட்டு 2014 இல் 7.4% வளர்ச்சியை அடைந்தது. இது யுத்தத்தின் பின்னர் செயற்படுத்தப்பட்ட உயர்ந்த போக்கையுடைய வளர்ச்சியுடன் அமைவாகக் காணப்பட்டது. இலங்கையின் வளர்ச்சி சதவீதமான 7.4%, வெளித்தோன்றும் பொருளாதாரங்களது 6.8%, இந்தியாவின் 7.2% மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ஆசியான) 4.6% இலும் பார்க்க அதிகமாகக் காணப்பட்டது. பாரிய பொருளாதாரத்தின் முதன்மை இயங்குசக்தியான சேவைத் துறையானது ஒட்டுமொத்த மொத்த உள்ளூர் உற்பத்திக்கு 58 % பங்களிப்பை அளித்ததுடன் உல்லாசத் துறை மற்றும் ஹோட்டல் வர்த்தகம் ஆகியவற்றிலான மேம்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் துணையுடன் 6.5% வளர்ச்சியை அடைந்தது. பொருளாதாரமானது எழுச்சியடையும் உல்லாசத்துறை எண்ணிக்கையின் நலன்களை அனுபவித்ததுடன் அதிகரித்த கட்டுமாண நடவடிக்கைகள் தற்போது மொ.உ.உ. இன் 10.0% பங்களிப்பை வழங்குகின்றது. (உருவம் 2)

### மொ.உ.உ. பருமன் மற்றும் அளவு

மொ.உ.உ. அமெரிக்க டொலர்களில் 2014 இல் **USD** 75 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2013 இல் **USD** 67 பில்லியனாக இருந்தது. இதற்கும் மேலாக, தனிநபருக்கான மொ.உ.உ. **USD** 3,600 எல்லையைக் கடந்து உயர்ந்த அடுக்கு நடுத்தர வருமான பொருளாதார களம் நோக்கிய நாட்டின் முன்னேற்றத்தை உறுதிசெய்கின்றது. இது இலங்கை மத்திய வங்கியின் 2020 இலக்கான **USD** 7,000 தனிநபர் வருமான குறிக்கோளினுள் காணப்படுகின்றது.

### உலக வங்கி தரவரிசை

உலக வங்கி வகைப்படுத்தலின்படி, இலங்கையானது உலகளாவிய போட்டித்தன்மை சுட்டியினுள் 65 ஆம் நிலையில் காணப்பட்டது. ஆனால் வணிகம் மேற்கொள்ளுவதற்கான தொல்லையற்ற சுட்டியினுள் 2013 இல் காணப்பட்ட 81ஆம் தரத்திலிருந்து 2014 இல் 85 ஆம் இடத்திற்கு இறங்கியுள்ளது. அரச கடன்களில் தரப்படுத்தல் முகவர்களின் தரமானது விச் இனால் **BB-** ஆகவும் எஸ் அன்ட் பி இனால் **B+** ஆகவும் முதலீட்டுத் தரமின்றி காணப்பட்டாலும் திடமான கண்ணோட்டம் உடையதாகக் காணப்படுகின்றது. (உருவம் 3)

### பணவீக்கம்

பணவீக்கமானது தொடர்ந்தும் ஒற்றை எண்ணாக தொடர்ச்சியாக 71 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு.) டிசம்பர் 2014 இல் சென்ற வருடத்திலிருந்து தாழ்வான 2.1% ஆக காணப்பட்டது. வழங்கல் காரணிகள் மற்றும் பாதகமான காலநிலை நிலைமைகள் காணப்பட்டபோதிலும் எரிபொருள் விலையில் காணப்பட்ட செங்குத்தான வீழ்ச்சி மற்றும் குறைவான பண்டங்களது விலைகள் ஒற்றை எண் பணவீக்க இலக்கத்திற்கு பெருமளவு உறுதுணையளித்தது. (உருவம் 4)

# பொருளியல் மீளாய்வு தொடர்ச்சி.

உருவம் 6: தனியார் துறைக்கான வங்கிகளின் கடனளிப்பு




## நாணயக் கொள்கை மற்றும் வட்டி வீதங்கள்

இலங்கை மத்திய வங்கியின் இயலுமையூட்டும் சூழலுக்கு அமைவாக நாணயக் கொள்கையானது தொடர்ந்தும் கடன்கொடுத்துதவத்தக்க வகையில் காணப்பட்டதுடன் வளர்ச்சிக்கான ஓர் கால்வாயாக செயலாற்றியது. 2014 இல் வட்டி வீதங்கள் மேலும் வீழ்ச்சியடைந்து தனியார் துறைக்கான கடனளிப்புக்கு மற்றும் மறைமுகமாக மொ.உ.உ. இன் மேம்பாட்டுக்கும் முதன்மை இயக்கியாகச் செயற்பட்டது. மேலும், கடன்கள் மற்றும் வைப்புகளுடன் ஒப்பிடும்போது அரசாங்கப் பிணையங்களுக்கான வட்டிவீதங்கள் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்தது. மட்டக்குறியான 364 நாட்கள் திறைசேரி உண்டியலது விளைவானது டிசம்பர் 2014 இல் ஓர் திடமான 6.0% ஆகக் காணப்பட்டதுடன் இது 2013 டிசம்பரில் காணப்பட்ட 8.29% இலிருந்து 229 அடிப்படை புள்ளிகள் சரிவாகும். இதற்கும் மேலாக 2014 இல் 5 வருட திறைசேரி முறிகளது விளைவானது 250 அடிப்படை புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது. (உருவம் 5)

## கடன் வளர்ச்சி

எவ்வாறாயினும், இத்தகைய பொருளாதார உந்துதல் காரணிகளுக்கு மத்தியிலும், தனியார் துறைக்கான வங்கிகளது கடனளிப்பானது 2014 இல் சிறிதளவு முன்னேற்றத்துடன் ஓர் பின்தங்கிய குறிகாட்டியாக தொடர்ந்திருந்தது. 2013 இல் தனியார் துறைக்கான கடனளிப்பானது 7% ஆல் வளர்ச்சியடைந்ததுடன் இச்சதவீதமானது 2014 இல 9% ஆல் மேம்பட்டு M2b வளர்ச்சியானது உறுதியாக நிலைத்திருந்தது. (உருவம் 6)

## வர்த்தக நிலுவை மற்றும் சென்மதி நிலுவை

பொருளாதார அணிகளில் வர்த்தக நிலுவையானது 2013 இல் காணப்பட்ட USD 7.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது USD 8.2 பில்லியனால் விரிவடைந்தது. வெளிவாரியளவில் சில முக்கிய முன்னேற்றங்கள் காணப்பட்டன. ஏற்றுமதி வர்த்தகத்தில் ஓர் மீளெழுச்சியானது, குறைவான இறக்குமதி வளர்ச்சி மற்றும் சேவைகள் கணக்கிற்கான உள்வருகைகளுடன் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த சென்மதி நிலுவையானது USD 1 பில்லியன் இலக்கைக் கடந்து 2014 ஆம் ஆண்டின் இறுதியில் USD 1.37 பில்லியனாகக் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் இது USD 0.98 பில்லியனாகக் காணப்பட்டது. பல வருடங்களாகத் தொடர்ந்து காணப்படும் வழக்கம் போன்று வர்த்தகப் பற்றாக் குறையினை குறிவைப்பதில் பாரிய குறைநிரப்பியாக உள்வாரி பண அனுப்புதல்கள் தொடர்ந்தும் செயலாற்றியது. நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையில் காணப்பட்ட குறைப்பு உலகளாவிய முறிகள் வழங்கலுடன் இணைந்து வெளிவாரி ஒதுக்க நிலைமையினை மீள் நிரப்புவதற்கு துணைபுரிந்தது. இதற்கும் மேலாக அதிகரித்த பணியாளர்களது உள்வாரி பண அனுப்புதல்கள் மற்றும் உல்லாசத் துறை உட்பாய்ச்சல்களும் துணைபுரிந்தன. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் அமெரிக்க டொலர்களில் USD 8.5 பில்லியனிலிருந்து 2014 இல் USD 9.8 பில்லியனாக முன்னேற்றமடைந்தது. வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களுக்கான இறக்குமதி அளவில் முன்னைய ஆண்டில் காணப்பட்ட 5.7 மாதங்களிலிருந்து 2014 இல் 6.1 மாதங்களாக முன்னேற்றமடைந்தது.

## அந்நிய செலாவணிச் சந்தை

உள்ளூர் அந்நிய செலாவணிச் சந்தையானது இவ்வருடத்தில் ஓரளவு திடமாகக் காணப்பட்டதுடன் அமெரிக்க டொலருக்கு எதிராக 130 – 132 எனும் குறுகிய வீச்சுல் வர்த்தகம் செய்யப்பட்டது. இலங்கை ரூபாயானது 2014 இல் 0.79% மாத்திரமே வீழ்ச்சியடைந்து தகாத பெறுமதித் தேய்வின்றி திடமாகக் காணப்பட்டது. கலப்பு நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாயானது யூரோ, ஜப்பானிய யென் மற்றும் ஐக்கிய இராச்சிய ஸ்டெர்லிங் பவுண் என்பவற்றுக்கெதிராக பெறுமதியுயர்ந்தது.

# மூலதனச் சந்தை மீளாய்வு

## பரந்த சந்தைச் சிறப்புக்கட்டங்கள்

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது, ஏனைய வெளித்தோன்றும் சந்தைகளில் வியாபித்திருந்த மாறுபட்ட அளவுகளிலான ஸ்திரமற்ற தன்மையின் மத்தியில், 2014 ஆம் ஆண்டில் சிறப்புற இயங்கி சாதகமான செயற்திறன்களைப் பதிவு செய்தது. 2013 ஆம் ஆண்டு சந்தை சாதகமான களத்தினுள் கடந்து சென்ற ஆண்டாக வகைப்படுத்தப்பட்டிருப்பின், 2014 ஆம் ஆண்டினை சந்தை மேலெழும் முதலீட்டாளர் மனோபாவத்துடன் இணைந்து அதிக சக்தியையும் வேகத்தையும் பெற்றுக்கொண்ட ஆண்டாகக் கருதப்படுகின்றது. (உருவம் 7)

இதற்கும் மேலாக, அனைத்து பங்கு விலைச்சுட்டி 7,000 எல்லையைக் கடந்தும் அடிப்படையாக நிறையிடப்பட்ட எஸ். அன்ட் பி. ஸ்ரீலங்கா 20 சுட்டியானது இதனைப் பின்பற்றி 4,000 வாயிலைக் கடந்தும் ஓர் சாதனைமிக்க ஆண்டாகக் காணப்பட்டது. பரவலான சந்தைப் பருமன் குறிகாட்டியான, அதாவது, சந்தை மூலதனவாக்கத்தின் பெறுமதி ரூபா 3,104 பில்லியனை எட்டி மொத்த உள்ளூர் உற்பத்தியின் 31% க்கு சமனாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்களது மனோபாவமானது தொடர்ந்தும் சாதகமாகக் காணப்பட்டதுடன் தொடர்ச்சியாக 3 வருடங்களுக்கு உள்வந்த பணமானது முக்கியமான திரவத்தன்மை அதிகரிப்பினை வழங்கியது. மேம்படுத்தப்பட்ட பாரிய பொருளாதார காரணிகள், உயர்வடையும் கம்பனிகளின் உழைப்பு மற்றும் திடமான ஐந்தொகை நிலைமைகள் என்பவை இந்தச் சாதகமான விளைவுகளுக்கு பெரிதும் துணைபுரிந்தன. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் நாணயமாற்று வீதமானது தேவையற்ற பெறுமதி இறக்கமின்றி ஸ்திரமாகக் காணப்பட்டதுடன் சந்தைக்கான திரவத்தன்மை வினையூக்கியாகவும் செயற்பட்டது. மேலும் தினசரிச் சராசரிப் புரள்வானது 2013 ஆம் ஆண்டின் பெறுமதியுடன் ஒப்பிடும்போது உயர்வடையும் போக்கினை வெளிப்படுத்தி 70% ஆல் அதிகரித்தது.

## சந்தை விளைவுகள்

வரலாற்று ரீதியான தாழ்ந்த வட்டி வீத பரிபாலனத்தின் உறுதுணையுடன் 2014 இல் சந்தையின் விளைவானது மெச்சத்தக்க வகையில் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் மிகக் குறைந்த

உருவம் 7: அ.ப.வி.சு. எதிர் திறைசேரி உண்டியல் வீதங்கள்




உருவம் 8: சந்தை விளைவுகள் 2014




உருவம் 9: சந்தை விளைவுகள்



# மூலதனச் சந்தை மீளாய்வு தொடர்ச்சி.

சுட்டி வளர்ச்சியான 4.78 % உடன் ஒப்பிடும்போது 2014 இல் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது ஓர் தெளிவான 23.5% விளைவைக் கொடுத்தது. கொழும்புப் பங்குச் சந்தையானது மோர்கன் ஸ்டான்லியினால் தற்போது பரவலான வெளித்தோன்றும் சந்தை வகுப்பின் உபபிரிவான எல்லைப்புறச் சந்தை வகையாக பங்களாதேஷ், வியட்நாம் மற்றும் பாகிஷ்தான் என்பவற்றுடன் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது. (உருவம் 8)

அ.பி.வி.சு. ஆனது மிகவும் லாவகமாக 4.71% வளர்ச்சியை அடைந்த MSCI எல்லைப்புறச் சுட்டியை மற்றும் பிராந்திய ரீதியில் 1.97% எதிர்மறையான விளைவினைப் பதிவு செய்த பரவலான வெளித்தோன்றும் சந்தைச் சுட்டியை விஞ்சியது. கொ.ப.ப. எல்லைப்புறச் சந்தைகளான வியட்நாம் (8.1%) ஐ இலகுவாகவும், ஜக்கார்த்தா (22.3%) மற்றும் பிலிப்பைன்ஸ் (18%) ஆகிய சந்தைகளை ஓரளவாகவும் செயற்திறனில் விஞ்சியது. 2014 இல் வெளித்தோன்றும் சந்தைகளில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வாகக் கருதப்படுவது ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் எல்லைப்புறச் சந்தைக் குழுமத்திலிருந்து வெளித்தோன்றும் சந்தைச் சுட்டிக்கு முன்னேற்றமடைந்ததாகும். (உருவம் 9)

### உரித்துடைமை மற்றும் கடன் மூலமாக திரட்டிய நிதி

2013 இல் வியாபித்திருந்த முடக்கப்பட்ட சூழலுடன் ஒப்பிடும்போது திடமான முதலீட்டாளர் மனோபாவத்தினால் துணையளிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டில் முதன்மைச் சந்தையானது ஒப்பீட்டளவில் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. 2013 இல் திரட்டப்பட்ட குறைந்த தொகையான ரூபா 494 மில்லியனுடன் ஒப்பிடும்போது 5 புதிய பட்டியலிடல்களூடாக மொத்தமாக ரூபா 2,694 மில்லியன் திரட்டப்பட்டது. (தொகுதிக்கடன்கள்) ஊடாக திரட்டப்பட்ட புதிய நிதி ரூபா 54,234 மில்லியன் ஆகும். இதற்கும் மேலாக உரிமை வழங்கல்களூடாக கம்பனிகளில் ஐந்தொகைகள் மொத்தமாக ரூபா 8,099 மில்லியனை பெற்றுக்கொண்டன. மீளாய்வாண்டில் வியாபித்திருந்த அபூர்வமான தாழ்ந்த வட்டி வீதங்களுக்கு மத்தியில் கம்பனிகள் தமக்குத் தேவையான நிதிக்கு மூலதனச் சந்தையை நாடுவதற்கு மேற்கொண்ட தீர்மானமானது குறிப்பிடத்தக்கதாகும்.

### வெளிநாட்டு நிலைமையும் சந்தைப் பெறுமதியிடலும்

வெளிநாட்டுப் பங்குபற்றலானது, வெளிநாட்டுக் கொள்வனவுகள் அமெரிக்க டொலர்கள் 805 மில்லியனை எட்டி குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. 2013 இன் அமெரிக்க டொலர்கள் 647 மில்லியன் கொள்வனவுத் தொகையிலிருந்து இது ஓர் சாதகமான அதிகரிப்பாகும். எவ்வாறாயினும் வெளிநாட்டு விற்பனைகள் அநேகமாக இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டதுடன் மற்றும் சில மூலோபாயக் கொள்வனவுகள் அமெரிக்க டொலர்கள் 637 மில்லியனை எட்டி ஓர் சாதகமான வித்தியாசமாக அமெரிக்க டொலர்கள் 168 மில்லியன் காணப்பட்டது. இந்த உள்வருகைத் தொகையானது மெச்சத்தக்கதாக இல்லாவிட்டாலும் அது சாதகமான வெளிநாட்டு முதலீட்டாளர் மனோபாவத்திற்கு துணைபுரிகின்றது.

சந்தைப் பெறுமதியிடல் விகிதாசாரங்களும் பொருத்தமான எல்லைப்புற சந்தை விஸ்தீரணத்திற்குள் உழைப்பின் 19 மடங்காகக் காணப்பட்டது. 2013 இல் விலை உழைப்பு விகிதமானது உழைப்பின் 15.9 மடங்காகக் காணப்பட்டது. (உருவம் 10)

உருவம் 10: சந்தைப் பெறுமதியிடல்கள்




### துறைசார் செயற்திறன்

தகவல் தொழில்நுட்பத்துறை தவிர்ந்த அனைத்து ஏனைய துறைகளும் சாதகமான விளைவுகளைப் பதிவுசெய்தன. மொத்தமாக 12 துறைகள் 20% மான அல்லது அதற்கு அதிகமான விளைவைக் கொடுத்தன. சக்தி மற்றும் வலு எனப்படும் துறையானது 55% வளர்ச்சியினைக் கொடுத்து சிறந்த செயற்திறனுடைய துறையாகக் காணப்பட்டது. இதனைப் பின்தொடர்ந்து உற்பத்தி மற்றும் தொலைத்தொடர்புத் துறைகளது செயற்திறன் காணப்பட்டது. சந்தையின் பிரதிநிதி என்றழைக்கப்படும் பன்முகப்படுத்தல் துறையானது 19% விளைவை வழங்கியதுடன் மற்றொரு முக்கிய துறையான வங்கியியல் மற்றும் நிதியியல் துறையானது மந்தமான தனியார் துறை கடன் வளர்ச்சிச் சூழலிலும் 40% விளைவைக் கொடுத்தது.

### நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறைக்கும் 2014 ஆம் ஆண்டு ஓர் குறிப்பிடத்தக்க ஆண்டாகும். பிடித்து வைத்தல் வரியின் நீக்கமானது துறையில் ஆர்வம் அதிகரிப்பதற்கு ஓர் வினையூக்கியாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டில் காணப்பட்ட தேறிய சொத்தின் பெறுமதியான ரூபா 54,034 மில்லியனுடன் ஒப்பிடும்போது டிசம்பர் 2014 இல் காணப்பட்ட நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறையின் தேறிய சொத்தின் பெறுமதியான ரூபா 127,356 மில்லியன் ஓர் கடினமான அதிகரிப்பாகும். நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் எண்ணிக்கையும் 2013 இல் காணப்பட்ட 62 இலிருந்து 2014 இல் 74 ஆக அதிகரித்தது. அதேசமயம் வருடத்தோடு வருடம் ஒப்பிடும்போது அலகுடைமையாளர்களின் எண்ணிக்கையானது 29,648 இலிருந்து 10%ஆல் அதிகரித்து 32,619 ஆக உயர்வடைந்தது.

# முகாமையாளர்கள்





1. சுனெத் பெரேரா (முகாமையாளர், மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்சி)
2. மதுகயனி பலபிட்டிய (முகாமையாளர், புலனாய்வு)
3. சர்மிளா பண்டிதரத்ன (முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்)
4. ரன்மினி ஜயதிலக்க (முகாமையாளர், தகவல் முறைகள்)

## ஊழியர்கள்


சஜீவனி பக்மீதெனிய


சவுமி கொடிப்பிலி


ஷீனா குணரத்ன


மன்ஜுளா சந்திரரத்ன


டி எம் ஜி பிரியந்த


லக்ஷிமி விக்கிரமநாயக்க


பிரபாஷினி சமரக்கோன்


சுகத் அள்விஸ்


அசோகா கே தயாரத்ன


ஆர் கே வசந்த சுனிமல்


மேகலா ஜயபால


அனுலா விஜேசிங்க


பிரதிபானி ஹேரத்


ரக்கித்த பண்டார


பி எம் நிரோஷிகா உதயங்கனி


மஹேஷ் அபேசேகர


தக்ஷிலா பிரான்சிஸ்


ரஜ்மி மானதுங்க


சுஹாதினி விக்கிரமசிங்க


பிம்பா கமாத்திகே


வை டி சந்தமாலி


புத்தினி ஹேரத்


நிமல் குமாரசிங்க


ஜே கே பிரியதர்ஷினி


சாமரி எரங்க மந்திரிரத்ன


சி எரந்ததி வைத்யசேகர


தனேஷா ராஜபுர


பிரீனிகா நிலக்ஷி பெரேரா


சமந்தி குணவர்தன


இந்திக எஸ் ஜயவீர

## ஊழியர்கள் தொடர்ச்சி.


யொஹான் எதிரிசிங்க


ஏ சி டயஸ்


நிசன்சலா யு ஹேரத்


ஜி டி கபில குமார


எல் சிவநேசராஜா


எம் எம் இம்ரான்


ரோஷினி பீரிஸ்


தனிஷ்கா திலக்கரத்ன


லலிந்த தயாரத்ன


தாரக்க குலதிலக்க


கிரிஷ்டோபல் சில்வா


கிரிஷாந்தி முத்துதந்திரிகே


சாலினி பெரேரா


ஜூலீ அலகக்கோன்


குமாரி சிரிவர்தன


நிஷோகா ஜயதுங்க


நுஹ்ரலா தேவதாசன்


லக்ஷ்மி அதபத்து


ஹேரன் கிரிஷாந்தி பர்னாந்து


எஸ் டி தர்மசிறி


எம் ஜயசேகர


பி டபிள்யு எல் பியதிஸ்ஸ


சந்திரன் நாகேந்திரன்


டபிள்யு ஆரியரத்ன


அநுர பெரேரா


டி பத்தும் நிரோஷன


சந்தருவன் விஜேரத்ன


பி டி பத்மராணி


கே எம் ரஞ்சிதி


ஜி ஆர் சரத் ஜயசிங்க

*சமூகமளிக்காதோர்: ஏஷிணி பண்டார, பிரியந்த ஹேரத், ஒலிவி சொலங்காரச்சி*

# செயற்பாட்டு மீளாய்வு

## முறைமைப்படுத்தல்

மூலதனச் சந்தைகளது முறைமைப்படுத்தலானது செயற்திறன் மிக்கதாகவும், வெளிப்படையாகவும் மற்றும் பக்கச்சார்பின்றி செயற்படவும் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை தூண்டுவதற்கும் வசதியளிக்கின்றது. இதற்கும் மேலாக, இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் நியாயாதிக்கம் சந்தைப் பங்குபற்றுனர்கள், நிறுவனங்கள் மற்றும் சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் சாதனங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

## உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்

இ.பி.ப.ஆ. பின்வரும் மூலதனச் சந்தை நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதுடன் அவர்களுக்கு உரிமங்கள் மற்றும் பதிவீடுகளை வழங்குகின்றது. (உருவம் 11)

உருவம் 11: சந்தைப் பங்குபற்றுனர்களது உரிமமளித்தல் மற்றும் பதிவீடு

| சந்தை இடையீட்டாளர்கள் | உரிமமளிக்கப்பட்ட / பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | 2014 இல் வழங்கப்பட்ட உரிமங்கள் / பதிவீடுகள் |
|---|---|---|
| பங்குப் பரிமாற்றகங்கள் | 01 | 0 |
| பங்குத்தரகுக் கம்பனிகள் | 35 | 05 |
| பங்கு வர்த்தகக் கம்பனிகள் | 14 | 08 |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி | 14 | 01 |
| நிதியங்களின் முகாமைத்துவக் கம்பனிகள் நிதியங்கள் | 74 | 14 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 38 | 03 |
| எல்லைக் கடன் வழங்குனர்கள் | 32 | 01 |
| ஒப்புரவாளர்கள் | 10 | 0 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 03 | 0 |
| தீர்வக இல்லம் | 01 | 0 |

## கொள்கை முன்னெடுப்புகள்

இ.பி.ப.ஆ. அதன் ஆதிக்க வரம்பினுள் உள்ள அனைத்து முறைமைப்படுத்தப்படுபவர்களையும் முறைமைப்படுத்துவதற்கான நடைமுறையிலுள்ள சட்ட வடிவமைப்பினை மேம்படுத்துவதற்காக கொள்கை முன்னெடுப்புகளை பொறுப்பேற்கின்றது.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திற்கான திருத்தங்கள்

இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான பிரேரிக்கப்பட்ட திருத்தங்கள், 2013 இல் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு தேவையான நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. மந்திரி சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் பிரேரிக்கப்பட்ட திருத்தங்களை மீளாய்வு செய்வதற்காக அமைச்சு திறைசேரியின் பிரதிச் செயலாளர் திரு. சஜித் ஆட்டிகல தலைமையிலான ஓர் விசேட குழுவினை நியமித்தது. விசேட குழுவானது மூன்று பகுதிகளை நிறைவு செய்து இவ்வருடத்தில் நான்காம் பகுதியினை ஆரம்பித்தது. இலங்கையின் மூலதனச் சந்தை அடுத்த கட்டத்திற்கான அபிவிருத்திக்கு நகரும் அதேவேளை முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு வசதியளிப்பதற்கு அவசியமான சட்ட வடிவமைப்பினை இத்திருத்தங்கள் நிர்வகிக்கின்றன.

நிதி திட்டமிடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட மீளாய்வு குழுவானது 13 கூட்டங்களை நிறைவு செய்து 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பிரேரிக்கப்பட்ட திருத்தங்களின் பகுதி நான்கு வரை மீளாய்வு செய்துள்ளது.

## கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையை (கொ.ப.ப.) பரஸ்பரமற்ற உரித்துடைமை பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுவதற்கான நகல் சட்டமூலம்

சட்ட வரைஞரினால் சமர்ப்பிக்கப்பட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பரஸ்பரமற்ற உரித்துடைமை பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுவதற்கான சட்டமூலத்தின் இறுதி நகலானது நிதி திட்டமிடல் அமைச்சிற்கு அவர்களது தகவல்களுக்காக மற்றும் அவசியமான நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. தற்போது சிங்கள மற்றும் தமிழ் நகல்கள் சட்ட வரைஞரினால் நிறைவுசெய்யப்பட்டவண்ணமுள்ளன. அரசியலமைப்புடன் இணங்கற் சான்றிதழும் மீளாய்வாண்டில் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு சட்டமா அதிபரினால் அனுப்பிவைக்கப்பட்டது.

## பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவை

நீதியரசர் சலீம் மர்சூவ் அவர்களது தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலின் கீழ் புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் நகலினை இ.பி.ப.ஆ. முடிவுறுத்தியது. முடிவுறுத்தப்பட்ட நகலின் பிரதியானது சட்ட வரைஞரினால் வர்த்தமானியிடப்படுவதற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கு முன்னர் இறுதியான பொது ஆலோசனைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் முக்கிய அம்சங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது :

- ஆணைக்குழுவுக்கு பின்வருவன தொடர்பாக ஆலோசகர்களாக செயலாற்றுவதற்கு ஓர் பொறுப்பேற்கு குழாமினை அறிமுகப்படுத்துதல். பொறுப்பேற்புகளில் எழக்கூடிய சிக்கலான விடயங்கள் மற்றும் தீர்ப்பு வழங்கல், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கட்டுப்படுத்தும் நடைமுறை கூற்றுக்கள் மற்றும் வழிகாட்டிகள் என்பனவாகும் ;
- வாசகர் ஒருவர் விதிகள் மற்றும் அதன் நோக்கத்தினை மிகவும் தெளிவாக புரிந்துகொள்வதற்காக விதிக்கோவையின் தாத்பரியங்கள் மற்றும் பொறுப்பேற்புகள் சட்டத்தினை ஆளுகைப்படுத்தும் பொதுவான கொள்கைகளை தெளிவாக்குதல் ;
- ஓர் பொறுப்பேற்பு அல்லது இணைப்பு கொடைமுனைவின்போது ஓர் கொடைமுனைபவர் மற்றும் கொடைமுனைவுக்குரிய கம்பனியின் பணிப்பாளர்கள் சபை ஆகியோரிடமிருந்து தேவைப்படும் நடாத்தை நியமங்களை தெளிவாக

புரியும்வண்ணம் ஒழுங்குபடுத்துதல். இது ஓர் பொறுப்பேற்பு அல்லது ஓர் இணைப்பின்போது ஓர் கொடைமுனைவுக்குரிய கம்பனியின் சிற்றளவு பங்குதாரர்களது நலன்களை சிறப்பாக பாதுகாப்பதற்காக ஆகும்;

- கட்டாய பொறுப்பேற்பு கொடைமுனைவுகள் தொடர்பாக “தொடர் கொள்கை” க்கு தெளிவாக வசதியளித்தல் மற்றும் கொடைமுனை விலைக்கு வருவதற்கான பொறிமுறைகளை வழங்குதல் என்பனவாகும்˙

- ஓர் பொறுப்பேற்பு கொடைமுனையில் கொடைமுனைபவர் மற்றும் கொடைமுனைவுக்குரியவர் விதிக்கோவையுடன் அமைவுறுவதனை உறுதிப்படுத்தும் “இணக்கப்பாட்டு கணக்காய்வாளர்களை” அங்கீகரித்தல்˙

- ஓர் பொறுப்பேற்பு விலைகூறலின் கீழ் ஓர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் சிற்றளவு பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக ஒரு பொறுப்பேற்பு விலைக்கூறலின் வரையெல்லையை, வாக்குரிமையுள்ள “பங்குகள்” மாத்திரமன்றி வாக்குரிமையுள்ள “பங்குகளிலான நலன்களையும்” கையகப்படுத்துவதனை உள்ளடக்குவதற்காக பரவலாக்குதல்;

- சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கட்டாயக் கொடைமுனைவினை கைவிடுவதற்கான ஆணைக்குழுவின் தீர்மானிக்கும் அதிகாரத்தை பரவலாக்கி ஆணைக்குழுவினால் உகந்தது எனக் கருதப்படும் சூழ்நிலைகளில் கட்டாயக் கொடைமுனைவினை மேற்கொள்வதிலிருந்து கைவிடுவதுடன் நிர்வகிக்கப்படும் “தூய்மைபடுத்தல் தீர்மானங்கள்” எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தியுள்ளது ;

- இணைப்புகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல்˙

- இ.பி.ப.ஆ. சட்டத்தில் உரிய ஸ்தானமளிக்கப்பட்டுள்ள பொதுவான அதிகாரங்களுக்கு தப்பபிப்பிராயமின்றி விதிக்கோவையின் மீறல்கள் தொடர்பான ஆணைக்குழுவின் அதிகாரங்களை தெளிவுபடுத்துதல் ; மற்றும் இவையனைத்திற்கும் மேலாக

- ஆணைக்குழுவானது தாம் கடுமையாக, முறைகேடாக அல்லது ஓர் தேவையற்ற கட்டுப்பாட்டுடன், சுமையான அல்லது இல்லாவிடின் பொருத்தமற்ற விதத்தில் செயற்படுவோம் என்று கருதும்பட்சத்தில் விதிக்கோவை பிரயோகிக்கப்படுவதிலிருந்து ஏதேனும் திசைமாற்றம் அல்லது அகற்றிவிடுவதனை அனுமதிப்பதற்கான கட்டளையை பொருத்தமான சூழ்நிலைகளில் மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவுக்கு வசதியளித்தல். அத்தகைய ஏதேனும் திசைமாற்றம் அல்லது அகற்றிவிடுதல் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும்போது ஆணைக்குழுவின் கட்டளைக்கான காரணங்கள் பதிவுசெய்யப்பட்டு ஏற்றவாறு பிரசுரிக்கப்படல் வேண்டும்.

### சந்தை இடையீட்டாளர்களுக்கான விதிகளின் பிரசுரிப்பு

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 53 (2) இன் பிரகாரம் நடைமுறையிலுள்ள சந்தை பங்குபற்றுனர்களுக்கான விதிகளை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது. இ.பி.ப.ஆ. அங்கீகரிக்கப்பட்ட விதிகளது தொகுதியினை பிரசுரிப்பதற்காக சட்டவரைஞருக்கு அனுப்பிவைத்தது. இவ்விடயமானது இன்னும் நிலுவையிலுள்ளது.

## இ.பி.ப.ஆ. னால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

### ஆகக் குறைந்த பொது புழக்க விதிக்கோவை

இ.பி.ப.ஆ. பணிப்புரை SEC/LEG/13/12/37 ஊடாக இந்த நகல் விதிகள் 2014 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வந்தது. ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளுள் கொ.ப.ப. இனால் அனுப்பிவைக்கப்பட்ட நகல் விதிகள் ஒன்றிணைக்கப்பட்டது.

இந்த விதிகளின் விதி இலக்கம் 7.13.1 (d) இன் பிரகாரம் 2014 ஜனவரி 01 இல் உள்ளவாறான பொதுப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்கு பகிர்வினை இ.பி.ப.ஆ. பெற்றுக்கொண்டுள்ளது. இப்பணிப்புரைக்கு பொதுப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து 179 பதில்களை இ.பி.ப.ஆ. பெற்றுள்ளது. அனைத்து எஞ்சியிருக்கும் கம்பனிகளை இந்த விதிகளுக்கு அமைவாக அவர்கள் தொடர்பான அறிக்கைகளை 2014 மே 15 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி அறிவிக்குமாறு கொ.ப.ப. த்தை இ.பி.ப.ஆ. கேட்டுள்ளது.

### முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கான முறைப்படுத்தல் தலையீடுகள்

- வர்த்தகத்தினை இடைநிறுத்துதல் மற்றும் ஒரு பொது பட்டியிலிடப்பட்ட கம்பனியின் நடைமுறையல்லாத சொத்துக்கள் பாராதீனப்படுத்துவதனை தடுத்தல்

நடைமுறையல்லாத சொத்துக்கள் பாராதீனப்படுத்தப்படுவதை தடுப்பதற்காக டச்வுட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி.எல்.சி. க்கு இ.பி.ப.ஆ. னால் ஓர் பணிப்புரை விடுக்கப்பட்டதுடன் இக்கம்பனியின் பங்குகளிலான வர்த்தகமும் இ.பி.ப.ஆ. னது ஓர் புலனாய்வு நிறைவுறும்வரை முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக இடைநிறுத்தப்பட்டது. கம்பனியிலான புலனாய்வு நிறைவுற்றதன் பின்னரும் இப்பணிப்புரையானது முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக நீடிக்கப்பட்டது. கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்திற்கு கடன்வழங்குனர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் விண்ணப்பத்தின் கீழ் கம்பனியானது கலைக்கப்படவுள்ளது.

புலனாய்வு அறிக்கைகளின் கண்டுபிடிப்புகள் மற்றும் முதலீட்டாளர்கள் மேல் நிகழும் பாரதுாரமான விளைவுகளை கருத்திற்கொண்டு ஆணைக்குழுவானது கம்பனி கம்பனியினது ஏதேனும் ஆவணங்களை அகற்றுவதனையோ அல்லது அழிப்பதனையோ தடைசெய்யும் வண்ணம் ஓர் பணிப்புரையை வழங்குவதற்கு தீர்மானித்தது.

இ.பி.ப.ஆ. டச்வுட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. இன் பங்குகளிலான வர்த்தகத்தை கம்பனியானது அதன் இடைக்கால நிதிக் கூற்றுக்களை சந்தைக்கு வெளியிடும்வரை இடைநிறுத்துமாறு கொ.ப.ப. இனை பணித்தது. இத்தீர்மானத்தை எடுக்கும்போது இ.பி.ப.ஆ. ஏனையவற்றுக்கிடையில், கம்பனியானது இடைக்கால நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்காததனால்

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

கொ.ப.ப. இன் தவறுதல் பலகைக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதுடன் கம்பனியை கலைப்பதற்கு ஓர் ஒழித்துக்கட்டுநரை நியமிப்பதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என்பதனையும் கருத்திலெடுத்தது.

## முதலீட்டாளர்கள் சார்பில் நீதிமன்றத்தின் குறுக்கீடுகள்

டச்வுட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. க்கு எதிரான கலைக்கப்படல் நடவடிக்கையில் முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் இ.பி.ப.ஆ. குறுக்கிடுவதற்கான ஓர் முன்நிகழ்வற்ற நடவடிக்கையை எடுத்தது. இ.பி.ப.ஆ. கலைக்கப்படவிருக்கும் கம்பனியின் வணிக நடவடிக்கைகளில் நடாத்தப்பட்ட ஓர் புலனாய்வு தொடர்பான கண்டுபிடிப்புகளை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தது.

கம்பனியின் நடவடிக்கைகளில் நடாத்தப்பட்ட புலனாய்வு அறிக்கையின் பொழிப்பானது வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நீதிமன்றம் மற்றும் ஒழித்துக்கட்டுநருக்கு தகவலளிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது.

## வர்த்தகத்தினை ரத்து செய்தல்

பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையை மீறும் வகையில் அடம் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. னால் ஓர் பொறுப்பேற்பு கொடைமுனை நிலுவையிலுள்ளபோது பி.சி. பார்மா பி.எல்.சி. இன் பங்கு விற்பனையானது ரத்துசெய்யப்பட்டதுடன் கொழும்பு பங்கு பரிவர்த்தனையினை முன் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட விற்பனையின் காரணமாக பாதிப்படைந்த அனைத்து முதலீட்டாளர்களுக்கும் இழப்பீட்டை வழங்குமாறு கட்டளையிடப்பட்டது.

இதற்கமைய, கொ.ப.ப. இன் முன் அங்கீகாரமின்றி விற்பனை செய்ததன் விளைவாக நிலுவையிலுள்ள கட்டாயக் கொடைமுனைவானது காலாவதியதியானதனால் அடம் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. இனால் மேற்கொள்ளப்பட்ட பி.சி. பார்மா பி.எல்.சி. பங்கு விற்பனையை ரத்து செய்யுமாறு கொ.ப.ப. பணிக்கப்பட்டது.

## ஏனைய பணிப்புரைகள்

### சந்தை இடையீட்டாளர்கள்

பதிவீடு கிடைக்கப்பெற்று ஆறு மாதங்களுக்குள் முதலீட்டு முகாமையாளர்களை அவர்களது செயற்பாட்டினை ஆரம்பிக்குமாறு இ.பி.ப.ஆ. பணித்தது. இது சிலர் முதலீட்டு முகாமையாளர்கள்ளாகக் கடமையாற்றுவதற்கான பதிவீட்டினை பெற்றிருந்தபோதும் செயற்பாட்டினை ஆரம்பிக்காமல் இருப்பதனை கண்டுபிடித்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்டதாகும்.

## நிதியியல் கூட்டிணைப்புத் திட்டத்திற்கு வசதியளித்தல்

வங்கிகளும் நிதி நிறுவனங்களும் கூட்டிணைப்பதனை வசதிசெய்யும்பொருட்டு குறுக்கிடுதல் பலகையில் உள்ள விலை நிர்ப்பந்தங்களை அகற்றுவதற்கான ஓர் பணிப்புறுத்தல். அவசியமானவிடத்து, ஒவ்வோர் விடயத்துக்கமைய நிதியியல் கூட்டிணைப்புத் திட்டத்தின் வரம்பினுள் வரும் பங்குக் கொடுக்கல் வாங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள 5% அடிமட்ட விலை வரையறையினை அகற்றுமாறு கொ.ப.ப. க்கு இ.பி.ப.ஆ. பணித்தது.

## நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி துறையின் அபிவிருத்தி

இலங்கையில் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறையினை விரிவாக்குவதற்கு வசதியளிக்கும்பொருட்டு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் அனைத்து முகாமைத்துவக் கம்பனிகளும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் கட்டாயமாக ஆகக்குறைந்தது 50 அலகுடைமையாளர்களை பேணுமாறு பணிக்கப்பட்டார்கள்.

ஆரம்ப பொது வழங்கல்களில் (ஆ.பொ.வ.) மிகை மதிப்பிடப்பட்ட மற்றும் குறை மதிப்பிடப்பட்ட பங்குகளினால் உருவாக்கப்படும் எதிர்மறையான தாக்கத்தினை குறைத்தல்

ஓர் ஆ.பொ.வ. கொடைமுனைவு விலை அடிப்படையில் இ.பி.ப.ஆ. இன் பணிப்புறுத்தல் - ஓர் முன்விவரணக்கோவையில் ஆரம்ப பொது வழங்கலொன்றின் பங்குகளின் கொடைமுனைவு விலையின் அடிப்படை தொடர்பாக வெளிப்படுத்துவதனை கட்டாயமாக்கும் ஓர் பணிப்புறுத்தல் கொ.ப.ப. க்கு வழங்கப்பட்டது. இப்பணிப்புறுத்தல் வழங்குவதற்கான காரணியாக காணப்பட்டது என்னவெனில் ஓர் ஆ.பொ.வ. இல் குறைமதிப்பிடப்பட்ட அல்லது மிகைமதிப்பிடப்பட்ட கொடைமுனைவு விலையின் நிமித்தம் ஏற்படும் எதிர்மறையான தாக்கத்தை குறைப்பதற்காகும்.

## பொது உரித்துடைமையின் வரைவிலக்கணம்

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் தொடர்ந்தும் காணப்பட்ட "பொது உரித்துடைமையின்" வரைவிலக்கணத்தை இணக்கம் செய்யுமாறு ஓர் பணிப்புறுத்தல் விடுக்கப்பட்டது - இதற்கமைய ஆகக்குறைந்த பொதுப் புழக்கப் பராமரிப்புப் பணிப்புறுத்தலில் வழங்கியுள்ள "பொது உரித்துடமை வரைவிலக்கணத்தை பொது உரித்துடமைக்கான பொது வரைவிலக்கணமாக ஏற்றுக்கொண்டு ஒன்றிணைக்குமாறும் இதற்கமைய பொதுவல்லாத பங்குதாரர் வரைவிலக்கணத்தை திருத்துமாறும் கொ.ப.ப. பணிக்கப்பட்டது. இந்தப் பணிப்புறுத்தலானது ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பின்வருவனவற்றை சந்திப்பதற்காக வழங்கப்பட்டது. பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் ஆகக் குறைந்த பொதுப் புழக்க விதிகள் மற்றும் பூட்டி வைத்தல் விதிகளில் பொது உரித்துடைமை தொடர்பாக கடைப்பிடிக்கப்படும் வெவ்வேறு வரைவிலக்கணங்களுக்கு ஏற்ப பொது உரித்துடைமையின் எண்ணிக்கை மற்றும் சதவீத கணிப்பின்போது எழக்கூடிய நடைமுறை சிக்கல் என்பவற்றுக்காகும்.

## பட்டியலினின்று அகற்றுதல்

இ.பி.ப.ஆ. இன் விதி இலக்கம் 5 (4) இன் தெளிவாக்கப் பணிப்புறுத்தல் - வர்த்தக இடைநிறுத்தலை தொடரவேண்டிய தேவைப்பாடு தொடர்பாக ஆணைக்குழு கம்பனியின் பட்டியலினின்று அகற்றப்படுதலை அங்கீகரிக்கும்போது மனமுவந்த பட்டியலினின்று அகற்றுவதில் இ.பி.ப.ஆ. இன் விதிகளில் விதி இலக்கம் 5 (4) இனை தெளிவாக்கி ஓர் பணிப்புறுத்தல் வழங்கப்பட்டது.

### அங்கீகாரங்கள்

### உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்கள்

ம.வை.தி. இன் சிபாரிசிற்கமைய இ.பி.ப.ஆணைக்குழுவானது உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு கொ.ப.பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. இவ் அங்கீகாரமானது அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கைச் சட்டம் மற்றும் இலங்கையின் பிணையங்கள் தொடர்பான சட்டம் ஆகியவற்றிற்கு அமைவுறுதலைப் பொறுத்தே வழங்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. 171 உலக, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியது.

### பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியதிகளது நிர்வகிப்பு

2014 ஆம் ஆண்டானது கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக ஓர் சாதனையான 20 பொறுப்பேற்புகள் (இவற்றுள் இரண்டு மனமுவந்த பொறுப்பேற்புகளாகும்) இடம்பெற்றன. 20 பொறுப்பேற்புகளுள் எட்டு வங்கி / நிதியியல் நிறுவனங்கள் கூட்டிணைப்பு தொடர்பானவையாகும். மீளாய்வுக் காலப்பகுதியில் பின்வரும் பொறுப்பேற்புகள் இ.பி.ப.ப. ஆல் நிர்வகிக்கப்பட்டன. (உருவம் 12)

உருவம் 12: பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியமங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்

| பொறுப்பேற்பவர் | பொறுப்பேற்கப்படுபவர் | கொடையின் வகை | கொடைமுனைவின் இறுதியில் காணப்படும் உரித்துவம் |
|---|---|---|---|
| அடம் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் | பி சி பார்மா பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 32.556% |
| சொவ்ட் லொஜிக் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. மற்றும் சொவ்ட் லொஜிக் ரீடேல் பிரைவேட் லிமிட்டட் | ஒடெல் பி.எல்.சி. | கூட்டு கட்டாயக் கொடைமுனை | 93.2% |
| ஹேய்லீஸ் பி.எல்.சி. | அலுவெப் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 62.51% |
| அடம் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட் | பி சி எச் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 53.51% |
| கொமர்ஷல் கிரடிட் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | டிரேட் வைனான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 98.34% |
| திரு. ஜி. ரமணன் | இன்டஸ்ட்ரியல் அஸ்பால்ட்ஸ் (சிலோன்) பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 66.66% |
| கார்கில்ஸ் பேங்க் லிமிட்டட் | கெப்பிட்டல் எலயன்ஸ் வைனான்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 75.70 |
| ஏ சி எல் கேபல்ஸ் பி.எல்.சி. என்டிபி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி மற்றும் ட்ரய்டன் பார்ட்னர்ஸ் பிரைவேட் லிமிட்டட் | ரேஸஸ் எனர்ஜி பி.எல்.சி. (முன்னர் ஹேமாஸ் பவர் பி.எல்.சி. என தெரியப்பட்டது) | கூட்டுக் கட்டாயக் கொடைமுனை | 75.24% |
| ரிச்சர்ட் பீரிஸ் வைனான்ஸ் லிமிட்டட் | சிலவ் வைனான்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 85.49% |
| நவலோக கொன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி பிரைவேட் லிமிட்டட் | மிலெனியம் ஹவுசிங் டெவலப்பர்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 68.75% |
| எசோசியேட்டட் மோட்டார் வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. | ஆர்பிக்கோ வைனான்ஸ் கம்பனி பி.எல். சி. | கட்டாயக் கொடைமுனை | 93.806% |
| எஸ்.ஜி. ஹோல்டிங்ஸ் குளோபல் பிரைவேட் லிமிட்டட் | எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பி.எல். சி. | கட்டாயக் கொடைமுனை | 51.48% |
| டெப்ரோபேன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | லங்கா சென்சரி இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. | மனமுவந்த கொடைமுனை | 80.76% |
| கலாநிதி. டி.செந்தில்வேல் | ஓரியன்ட் கார்மன்ட்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 39.832% |
| சீனியர் மார்க்கட்டிங் சிஸ்டம்ஸ் ஏசியா பிரைவேட் லிமிட்டட் | ஈ செனலிங் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 87.29% |
| கல்ச்சர் வைனான்சியல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் | யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பி.எல். சி. | பொறுப்பேற்கப்படும் கம்பனியின் 2% வரை ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டாயக் கொடைமுனை | 70% |
| தேசோதய டெவலப்மன்ட் வைனான்ஸ் கம்பனி லிமிட்டட் | ஜோர்ஜ் ஸ்டுவார்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 75.54% |
| மட்ஹுஊட் வைனான்ஸ் லிமிட்டட் | ஏசியா எஸட் வைனான்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 51% |

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

| பொறுப்பேற்பவர் | பொறுப்பேற்கப்படுபவர் | கொடையின் வகை | கொடைமுனைவின் இறுதியில் காணப்படும் உரித்துவம் |
|---|---|---|---|
| கார்கிள்ஸ் (சிலோன்) பி.எல்.சி. | கொத்மலே ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | மனமுவந்த கொடைமுனை | 97.13% |
| கொமர்ஷல் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | பிரக் லங்கா வைனான்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடைமுனை | 94.35% |

## இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

கொ.ப.ப. இல் பட்டியலிட விரும்பும் அனைத்துப் பொதுக் கம்பனிகளும் ஓர் பரிமாற்றகத்தில் பட்டியலிடுவதற்கு ஒரு வருட காலத்திற்கு முன்னர் யாரேனும் நபருக்கு பங்குகளை ஒதுக்கியிருப்பின் அதற்கான எழுத்துமூல முன்னனுமதியை ஆணைக்குழுவிடமிருந்து பெற்றாலன்றி அப்பங்குகளை பட்டியலிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. இவ்வருடத்தில் பின்வரும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. (உருவம் 13)

உருவம் 13: இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

| | கம்பனியின் பெயர் |
|---|---|
| 1 | ஸ்டான்டட் கிரடிட் வைனான்ஸ் லிமிட்டட் |
| 2 | கோரல் ரொக் ஹோட்டல் லிமிட்டட் |
| 3 | ஆர்பிக்கோ இன்சூரன்ஸ் லிமிட்டட் |
| 4 | சிங்ஹே ஹொஸ்பிட்டல் லிமிட்டட் |
| 5 | லக்கி லங்கா மில்க் ப்ரோசஸிங் கம்பனி லிமிட்டட் |

## இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்படும் பட்டியலிடப்படா பிணையங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆணைக்குழுவின் அங்கீகாரமானது பின்வரும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. (உருவம் 14).

உருவம் 14: பட்டியலிடப்படா பிணையங்களை வழங்குவதற்கான வழங்கப்பட்ட அங்கீகாரங்கள்

| வழங்குனரின் பெயர் | வழங்கலின் தன்மை | பிணையத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட தொகை | காலம் |
|---|---|---|---|---|
| நேஷன் லங்கா வைனான்ஸ் பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகள் | ரூபா 700 மில்லியன் | - |
| நேஷன் லங்கா வைனான்ஸ் பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியிலிடப்படா பங்காணைப் பத்திரங்கள் | மாற்றலிலிருந்து திரட்டக்கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 674 மில்லியன் | 4 வருடங்களுக்குள் உபயோகிக்கப்படல் வேண்டும் |
| யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியிலிடப்படா பங்காணைப் பத்திரங்கள் | மாற்றலிலிருந்து திரட்டக்கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 3,492.5 மில்லியன் | 6 வருடங்களுக்குள் உபயோகிக்கப்படல் வேண்டும் |

## தளத்திற்கப்பாலான பங்குக் கொடுக்கல் வாங்கல்களுக்கான அங்கீகாரம்

மீளாய்வாண்டில் 533 அசாதாரணமான மாற்றல்களுக்கும் 162 பங்குத் தானங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எல்லைக் கடன் வர்த்தகம், நிதி முகாமைத்துவம், பட்டியலிலிருந்து நீக்கல் மற்றும் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டுத்தேக்கங்களை மறுசீரமைத்தல் ஆகியவற்றில், உரித்துவ நலன் மாறாதவாறு, அசாதாரணமான மாற்றல்கள் இடம்பெற்றன.

## கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 ஏற்பாடுகளுக்கமைய விட்டுவிடல்கள்

தனிப்பட்ட ஏற்பாட்டின் மூலம் பங்குகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளது விண்ணப்பங்களை இ.பி.ப.ஆ. செய்முறைப்படுத்துகின்றது. தற்போது வழங்கப்பட்டுள்ள பங்குகளில் இத்தகைய தனிப்பட்ட ஏற்பாட்டின் ஊடாக வழங்கப்படும் பங்குகள் வழங்கலின் பின்னர் உடனடியாக 20% க்கு அதிகரிக்கும்போது இவ்விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டில் பின்வரும் விடுவிப்புகள் செய்முறைப்படுத்தப்பட்டன.

- ஓர் தனிப்பட்ட ஏற்பாட்டின் ஊடாக கொமர்ஷல் கிரடிட் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. இல் உத்தேசித்த முதலீடு - கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (b) மற்றும் (c) விடுவிக்குமாறு வேண்டுகோள்.

  பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (b) மற்றும் (c) னை விட்டுவிடுமாறு கொமர்ஷல் கிரடிட் அன்ட் வைனான்ஸ் பி.எல். சி. இ.பி.ப.ஆ. க்கு ஓர் விண்ணப்பத்தினை மேற்கொண்டது. இது ஓர் தனிப்பட்ட ஏற்பாட்டினூடாக கிரியேஷன் இன்வெஸ்ட்மன்ட்ஸ் ஸ்ரீலங்கா எல்.எல்.சி. என்றழைக்கப்படும் ஓர் தனியார் உரித்துவ நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் உத்தேச முதலீடான ரூபா 1.68

பில்லியன் (அண்ணளவாக ருளுனு 12.9 மில்லியனாகும்) தொடர்பிலானதாகும்.

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (b) மற்றும் (c) க்கு அமைய குறிப்பிட்ட விட்டுவிடுதலுக்கு ஆணைக்குழு அங்கீகரித்தது. பொருத்தமான பங்குதாரர் அங்கீகாரம் மற்றும் முறைமைப்படுத்தல் அங்கீகாரத்தின் கீழ் இ.பி.ப.ஆ. இன் அங்கீகாரம் கொமர்ஷல் கிரடிட் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. க்கு அறிவிக்கப்பட்டது.

- நேஷன் லங்கா வைனான்ஸ் பி.எல்.சி - பங்குகளது தனிப்பட்ட ஏற்பாடு மற்றும் பட்டியலிடப்படா தொகுதிக்கடன்களின் வழங்கல்

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (b) மற்றும் 5.4 (c) க்கு அமைய குறிப்பிட்ட விட்டுவிடுதலுக்கு நேஷன் லங்கா பி.எல்.சி க்கு ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இது இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்டுள்ள மைய மூலதனத் தேவைப்பாடுகளைப் பராமரிப்பதற்கும் அதன் கடன் வழங்கல் செயற்பாட்டினை சந்திக்கும் நோக்கத்துடனும் லக்ஷம்பேர்க் சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட ஓர் கம்பனியான ஜெம் க்ளோபல் ஈல்ட் வன்ட் எல்.எல்.சி. எஸ்.சி.எஸ் (ஜெம்) னால் மேற்கொள்ளப்படவிருக்கும் உத்தேச முதலீடு தொடர்பிலானதாகும்.

இரண்டு நிபந்தனைகளுக்கமைய ஆணைக்குழுவானது குறித்த விண்ணப்பத்திற்கான அங்கீகாரத்தை கம்பனிக்கு வழங்கியது.

- யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பி.எல். சி. இல் சாத்தியமான முதலீடு

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 மற்றும் 5.10.1 (iii) மற்றும் (iv) க்கு அமைய யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பி.எல்.சி.க்கு இ.பி.ப.ஆ. பின்வருவனவற்றிற்காக விட்டுவிடுதலுக்கு அங்கீகாரம் வழங்கியது. 20% க்கும் அதிகமான உத்தேசித்த தனிப்பட்ட ஏற்பாடு மற்றும் 6 வருட காலத்திற்கான 15% க்கும் அதிகமான பங்காணைப் பத்திரங்களது வழங்கல். இவ் அங்கீகாரமானது யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு, நிதியத்திற்கு தேவையான முறைமைப்படுத்தல் அங்கீகாரம் மற்றும் பிரேரிக்கப்படும் முதலீட்டிற்கு பங்குதாரர்களது அங்கீகாரம் என்பவற்றுக்கு அமைய வழங்கப்பட்டது.

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (c) க்கு அமைய ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) பி.எல்.சி. இனது உத்தேசித்த கடனை உரித்துவமாக மாற்றுவதில் விட்டுவிடுதலுக்கான விண்ணப்பம்.

ஆணைக்குழுவானது கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (c) இல் பின்வரும் விட்டுவிடலுக்கு அங்கீகாரம் வழங்கியது. 80% இலங்கை அரசாங்கத்தின் கடன் மற்றும் ஹோட்டல் நிலக் குத்தகை வாடகை என்பனவற்றை மந்திரி சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் தீர்ப்பனவு செய்வதற்காக ஓர் தனிப்பட்ட ஏற்பாடாக திறைசேரிச் செயலாளருக்கு 1,766,389,577 ஹோட்டல் டெவலப்பர்ஸ் சாதாரண பங்குகளுக்கான உத்தேசித்த வழங்கலுக்காகும்.

ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) பி.எல்.சி. (HDL) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (c) இன் கீழ் இன்னுமோர் விட்டுவிடுதலுக்கு விண்ணப்பித்தது. மந்திரி சபையின் தீர்மானத்திற்கமைய 31 டிசம்பர் 2013 இல் நிலுவையிலுள்ள எஞ்சிய ரூபா 2.35 பில்லியன் இலங்கை அரசாங்கத்திற்கான கடனை உரித்துடைமையாக மாற்றுவதற்காகும்.

ஆணைக்குழுவானது கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (c) இல் பின்வரும் விட்டுவிடலுக்கு அங்கீகாரம் வழங்கியது. 31 டிசம்பர் 2013 இல் நிலுவையிலுள்ள எஞ்சிய இலங்கை அரசாங்கத்தின் கடனான ரூபா 2,350,299,678 க்குப் பதிலாக முழுவதும் செலுத்தப்பட்ட 235,029,968 சாதாரண பங்குகளை ஓர் தனிப்பட்ட ஏற்பாடாக திறைசேரிச் செயலாளருக்கு வழங்குவதற்காகும்.

## கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டில், கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் பின்வரும் திருத்தங்களுக்கு ஆணைக்குழு அங்கீகாரமளித்தது.

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளது 7 மற்றும் 9 ஆம் பிரிவுகளுக்கான திருத்தங்கள்:

அ) பட்டியலிடப்பட்ட ஓர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பங்குகளில் பணிப்பாளர்கள் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியினது வர்த்தகங்கள் தொடர்பானவை; மற்றும்

ஆ) தொடர்புடைய தரப்பினரது கொடுக்கல் வாங்கல்களில் (RPT) புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 2.2.1 (e) க்கான திருத்தங்கள்

கடன் பத்திரங்கள் பட்டியலிடப்படுவதற்கான தரப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 2.2.1 (e) க்கான திருத்தங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. இங்கு நடைமுறையிலுள்ள விதியானது ஓர் கடன் பிணையத்தில் அப்பிணையத்தின் காலவரையறையில் வழங்குனர்கள் அதன் தரப்படுத்தலில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொண்டிருப்பின் அனைத்து தரப்படுத்தல்களையும் வெளிப்படுத்தல் வேண்டும் என்று மாற்றியமைக்கப்பட்டது. இவ்விதியானது அனைத்து திருத்தியமைப்புகளையும் அதாவது ஓர் கடன் பிணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள தரப்படுத்தலில் உயர்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய திருத்தங்களை கட்டாயமாக வெளிப்படுத்தவேண்டும் என்று கோருகின்றது.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## கொ.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகளுக்கான திருத்தங்கள்

**பங்குத்தரகர் விதிகளில் விதி இலக்கம் 5.2 க்கான திருத்தங்கள்:** பங்குத்தரகு நிறுவனங்களுக்கு பிரயோகிக்கப்படும் திரவத்தன்மை தேவைப்பாடு தொடர்பான பங்குத்தரகர் விதிகளின் பிரிவு 5.2 க்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது.

இதற்கும் மேலாக, இ.பி.ப.ஆ. முதன்மை வர்த்தகர்கள் கொ.ப.ப. இல் கடன் பிணையங்களில் வர்த்தகம் மேற்கொள்வதற்கு வசதியளிக்கும்பொருட்டு பங்குத்தரகர் விதிகளுக்கான நகல் திருத்தங்களை மீளாய்வு செய்கின்றது.

## கொ.ப.ப. இன் மத்திய வைப்புத் திட்ட முறைக்கான (ம.வை.தி.) திருத்தங்கள்

- 'நிலுவையை உறையச்செய்', 'பூட்டப்பட்ட நிலுவை' மற்றும் 'நிலுவை கட்டுறா' எனும் வரைவிலக்கணங்களை ஒன்றிணைப்பதற்காக விதி 1 க்கான திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

- அங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் கணக்கு உரிமையாளர்களின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகங்களை T+1 ஆம் நாளில் 14.30 மணித்தியாலங்களில் உறுதிப்படுத்தவோ அல்லது நிராகரிக்கவோ காப்பக வங்கிகள் கடப்பாடுடையன என விதி இலக்கம் 6 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

- கொ.ப.ப. இன் ம.வை.தி. விதிகளில் விதி இலக்கம் 11 மற்றும் 13 க்கான திருத்தங்கள்

  பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளில் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ள இலத்திரணியல் கூற்று வசதியினை கருத்திற்கொண்டு அதன் கணக்கு உரிமையாளர்களுக்கு இலத்திரணியல் கூற்றுக்களை வழங்குதல்

  வாடிக்கையாளர் கணக்குகள் தொடர்பான தகவல்களை கணக்கு உரிமையாளர்களுக்கு குறுஞ்செய்தி அறிவிப்பு மூலம் அனுப்புவதற்கு

  ம.வை.தி. னால் வழங்கப்படும் சேவைகளுக்கு ம.வை.தி. கணக்கு உரிமையாளரிடமிருந்து நேரடியாக கட்டணங்களை அறவிடல்

பின்வரும் தேவைப்பாடுகளுக்கு கீழ்ப்பட்டு முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கான ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்குவதற்கான தீர்மானம் கொ.ப.ப. க்கு அறிவிக்கப்பட்டது.

- இலத்திரணியல் கூற்றுக்களை ஏற்றுக்கொள்வதற்கு ம.வை.தி. கணக்கு உரிமையாளரிடமிருந்து சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

- விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புகொள்ளல் முகவரிக்கு மின்னஞ்சல் முகவரி தொடர்பாக ஒப்பாய்வு செய்வதற்காக ஓர் உறுதிப்பாட்டினை அனுப்புதல்

- 'பங்குபற்றுனர்களுக்கான ம.வை.தி. வழிகாட்டியில்' மேற்கூறிய மாற்றங்களை ஒன்றிணைத்து திருத்தியமைப்பதற்கு

  குறிப்பிட்ட விதிகளில் விதி இலக்கம் 11.2 க்கு கொ.ப.ப. மேலும் திருத்தங்களை பிரேரித்தது. கணக்கு உரிமையாளரை கண்டுபிடிக்கமுடியாதவிடத்து ஓர் வாடிக்கையாளர் கணக்கில் அமுல்படுத்தப்படும் இடைநிறுத்தலை அகற்றும்போது கணக்கு உரிமையாளரிடமிருந்து பங்குத்தரகர் பங்குபற்றுனருக்கு செலுத்தவேண்டிய பணத்தை மீளப்பெறுவதற்கு முன்னர் பங்குத்தரகர் பங்குபற்றுனர் கணக்கு உரிமையாளரை கண்டுபிடிப்பதற்கு போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

- ம.வை.தி. னால் வழங்கப்படும் சேவைகளுக்கான ஓர் கட்டண கட்டமைப்பின் அறிமுகம்

  கொ.ப.ப. ம.வை.தி. னால் வழங்கப்படும் நானாவித சேவைகளுக்காக அறிமுகப்படுத்தவிருக்கும் மேலதிக கட்டண கட்டமைப்பினை இ.பி.ப.ஆ. க்கு அறிவித்தது. இது அதன் பங்காளிகளுக்கு சேவையளிக்கும்போது ம.வை.தி. னால் ஆட்படும் செலவினங்களை அறவிடும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் ம.வை.தி. னால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக ஓர் கட்டண கட்டமைப்பினை அமுல்படுத்துவதன் மூலமாக ம.வை. தி. வருமானப் பாய்ச்சல்களை பன்முகப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

### பட்டியலிலிருந்து அகற்றுவதற்கான விண்ணப்பங்கள்

இ.பி.ப.ஆ. விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலிலிருந்து அகற்றல் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய மீளாய்வாண்டில் 04 கம்பனிகள் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டன.

- குருவிட்ட டெக்ஷ்டைல் மில்ஸ் பி.எல்.சி.
- பேருவள வோக் இன் பி.எல்.சி.
- ஆசிரி சென்ரல் ஹொஸ்பிட்டல்ஸ் பி.எல்.சி.
- என்.டி.பி. கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.

### மேற்பார்வை மற்றும் இணக்கப்பாடு

மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலின் அடிப்படை நோக்கமானது மூலதனச் சந்தையில் ஸ்திரத்தன்மையினை ஊக்குவிப்பதாகும். உரிமமளிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் முறிவானது நிதியியல் முறை முழுவதும் இடர்நேர்கைகளை கடத்துமாகையால் இ.பி.ப.ஆ. சந்தையில் இடர்நேர்கைகளை கண்காணித்தும், குறைத்தும் முகாமைப்படுத்துகின்றது. இடர்நேர்கை முகாமைத்துவத்தினை ஊக்குவிப்பதற்காக இ.பி.ப.ஆ. சந்தை இடையீட்டாளர்களுக்கு ஆகக்குறைந்த உள்வருகை நியமங்களையும், மூலதனம் மற்றும் ஏனைய விவேகமுள்ள தேவைப்பாடுகளையும், இடர்நேர்கையின் கிரமமான முகாமைத்துவத்தையும் தவறுதல் மற்றும் முறிவின் விளைவுகள் ஆகியவற்றில் கவனஞ்செலுத்துகின்றது.

## பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் மேற்பார்வை

முதலீட்டாளர்களுக்கு ஓர் நியாமான மற்றும் திறைமைமிக்க சந்தையை வழங்கி பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக பட்டியலிடப்பட்ட கம்பனிகளை முறைமைப்படுத்துவது ஓர் முக்கியமான பாகமாகும். பிணையங்கள் சந்தையில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் நிறுவும்பொருட்டும் தொழில்சார் நியமங்கள் பராபரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் பட்டியலிடப்பட்ட

கம்பனிகள் முக்கியமான தகவல்களை உடனுக்குடன் பரப்பவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, பட்டியலிடப்பட்ட கம்பனிகள் நிதியாண்டு நிறைவடைந்து 5 மாதங்களுக்குள் அவற்றின் பங்குதாரர்களுக்கும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கும் (கொ.ப.ப.) வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்து அமைவுறா விடயங்கள் தொடர்பாக கம்பனிகளுக்கு அறியப்படுத்துகின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பதிலளிப்பானது மிகவும் சாதகமாகக் காணப்படுகின்றது. வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்வதில் இ.பி.ப.ஆ. பின்வரும் விடயங்களில் கவனஞ்செலுத்துகின்றது.

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள், இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளுக்கு அமைவுறுதல்
- நிதியியல் எடுத்துக்காட்டல்கள்
- தலைவரின் அறிக்கை
- கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள்
- பணிப்பாளர்களின் அறிக்கை
- கணக்காய்வாளர்களின் அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதியியல் தரவுகள்

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. 109 பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நிதியியல் கூற்றுக்களில் மீளாய்வினை ஆரம்பித்து 106 கம்பனிகளில் மீளாய்வு முடிவுறுத்தப்பட்டு 71 கருத்துக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

### சந்தைப் பங்குபற்றுனர்களது மேற்பார்வை

#### பங்குத் தரகுக் கம்பனிகள்

முதலீட்டாளர் பாதுகாப்பினை பலப்படுத்தி மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் நம்பிக்கையை கட்டியெழுப்பும் முகமாக இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் கடமையானது உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர்களது நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் செயற்பாட்டு இயலுமை ஆகியவற்றை கண்காணிப்பதையும் மேற்பார்வை செய்வதையும் உள்ளடக்குகின்றது.

தளத்திலான பரிசீலனைகள் பங்குத்தரகுத் துறையினை ஓர் இடர்நேர்கை அடிப்படையூடாக உயர்ந்த தொழில்சார் நியமங்களை அடைவதற்கு வழிகாட்டுவதில் கவனஞ்செலுத்தப்பட்டன. இவை பின்வரும் வெவ்வேறு இடர்நேர்கை பிரிவுகளை உள்ளடக்கியது. விவேகம், திரவத்தன்மை, நிதியியல், கடன், சட்டம் மற்றும் செயற்பாட்டு இடர்நேர்கைகளுடன் பிரயோகத்திலுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவுறுவதற்கான அழுத்தத்தினையும் கொண்டுள்ளது.

தளத்திற்கப்பாலான மீளாய்வுகள் தேறிய மூலதனம் மற்றும் போதுமானளவு வாடிக்கையாளர் நிதியினைப் பராமரித்தல் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடு போன்ற முதன்மையான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் பங்குத் தரகுக் கம்பனிகளது இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதில் கவனஞ்செலுத்தப்பட்டது. மேலும், பிரயோகத்திலுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் அமைவுறாமை மற்றும் முறிவடைதல் போன்ற இடர்நேர்கைகளை ஏற்படுத்தக்கூடிய கம்பனிகள் மற்றும் நடவடிக்கைகளை கண்டறிவதையும் நோக்காகக் கொண்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில், முறைமைப்பாட்டு தேவைப்பாடுகளை மீறிய கம்பனிகள் ஓர் நியாயமான காலப்பகுதிக்குள் அமைவுறுதலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டன.

பிணையங்கள் துறை பங்குபற்றுனர்களில் நிதியியல் மதிநுட்ப அலகினால் அமுல்படுத்தப்பட்டுள்ள பணம் சலவை செய்வதற்கு எதிரான ஒழுங்குவிதிகள் /நியமங்களில் பங்குத் தரகுக் கம்பனிகளது உயர்ந்த மட்டத்திலான அமைவுறலுக்கு நாம் தொடர்ச்சியாக வசதியளித்து பலப்படுத்தினோம்.

வீழ்ச்சியடையும் வட்டி வீதங்களின் நலன்களை முதலீடு செய்யும் பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்காக எல்லைக் கடன் வர்த்தக வட்டிவீதங்களை கொள்கை வட்டிவீதங்களுடன் ஒழுங்கமைக்குமாறு இ.பி.ப.ஆ. பங்குத்தரகுக் கம்பனிகளை வேண்டியது.

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டில் பங்குத் தரகுத் துறையின் மொத்தப் புரள்வானது அதிகரித்தது. பின்வரும் அட்டவணையானது பங்குத்தரகுக் கம்பனிகளின் செயற்திறன் பற்றிய ஒப்பீட்டு புள்ளிவிபரங்களை வழங்குகின்றது. (உருவம் 15)

உருவம் 15: பங்குத் தரகுத் துறையின் சிறப்புக்கூறுகள்

| | 2014 | 2013 | சதவீத வேறுபாடு |
|---|---|---|---|
| புரள்வு | **3,087,228** | 1,745,186 | 76.9 |
| தேறிய தரகு | **2,833,873** | 1,541,338 | 83.9 |
| செயற்பாட்டு இலாபம் / (நட்டம்) | **794,562** | (619,374) | 228.3 |
| ஏனைய வருமானம் | **510,000** | 810,282 | (37.1) |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்/ (நட்டம்) | **727,606** | (711,484) | 202.3 |
| வரிக்குப் பிந்திய தேறிய இலாபம் / (நட்டம்) | **604,053** | (711,091) | 184.9 |
| மொத்தச் சொத்துக்கள் | **11,333,864** | 10,265,557 | 10.4 |
| மொத்தப் பொறுப்புக்கள் | **4,924,007** | 4,462,858 | 10.3 |
| தேறிய மூலதனம் | **4,966,033** | 4,742,514 | 4.7 |

** 31 டிசம்பர் 2014 /2013 இல் உள்ளவாறு.*

*மூலம்: இ.பி.ப.ஆ. க்கு சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள்*

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் முறைமைப்படுத்தல் மதிப்பீடு

2014 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இல் வெற்றிகரமாக ஓர் கணக்காய்வினை மேற்கொண்டது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் அதன் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் ஆளுகை மற்றும் கட்டுப்பாடுகளது நிலைமை பற்றி மதிப்பிடுவதற்காக முறைமைப்படுத்தல் மதிப்பீட்டிற்கு ஓர் முழுமையான அணுகுமுறை அவசியமாயிருந்தது.

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறை

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டில் நிதியங்களின் தேறிய சொத்துக்களின பெறுமதியானது கணிசமான அளவு வளர்ச்சியைப் (135%) பிரதிபலித்து நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி ஓர் சாதகமான போக்கினை வெளிப்படுத்தியது.

இ.பி.ப.ஆ. முதலாவது டொலர் நாணயத்தில் செயற்படும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிக்கும் பதினான்கு ஏனைய நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களுக்கும் இவ்வாண்டில் உரிமமளித்தது. இதற்கு மேலாக, 2014 ஆம் ஆண்டில் ஒரு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனியும் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளரும் சந்தையுள் உள்வந்தார்கள்.

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் முகாமைத்துவத்தின் கீழுள்ள நிதியங்களில் சிற்றளவு பங்களிப்பினை அதிகரிப்பதை ஊக்குவிக்கும் நோக்கில் இ.பி.ப.ஆ. அனைத்து நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளுக்கும் எவ்வேளையிலும் அவர்களது நிதியங்களில் ஆகக் குறைந்தது 50 அலகு உடைமையாளர்களை பராமரிக்குமாறு ஓர் பணிப்புரையை விடுத்தது. முகாமைத்துவக் கம்பனிகள் ஆரம்ப வழங்கல் காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 50 அலகு உடைமையாளர்களை பெற்றுக்கொள்ளுமாறு பணிப்புறுத்தப்பட்டார்கள்.

பின்வரும் பரவலான இடர்நேர்கை பிரிவுகளை உள்ளடக்கிய இடர்நேர்கை அடிப்படையிலான தளத்திலான பரிசீலனைகளை முகாமைத்துவக் கம்பனிகளில் இ.பி.ப.ஆ. இவ்வாண்டில் மேற்கொண்டது. இவற்றின் நிதியியல் பலத்தின் போதுமான தன்மையினை மதிப்பிடுவதற்காக விவேகம், செயற்பாடு மற்றும் முகாமைத்துவக் கொள்கைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகளுக்கு அமைவுறல், ஆளுகை, தகவல் முறைகள் மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளது தேவைப்பாடுகள் என்பனவாகும்.

முகாமைத்துவக் கம்பனிகள் இ.பி.ப.ஆ. இனால் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தேறிய மூலதனத் தேவைப்பாடுகளை பராமரித்திருப்பதனையும் அவை நிதியியல் ரீதியாக திடமாக காணப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக் கூற்றுக்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இதற்கும் மேலாக நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் மாதாந்த அறிக்கைகள், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகள், பொருத்தமான நம்பிக்கைப் பொறுப்புறுதிகள் மற்றும் நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி விதிக்கோவை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டங்களில் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் திரவத்தன்மை மற்றும் வெளிப்பாடு மட்டங்கள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக ஆராயப்பட்டன.

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்கள்

2014 டிசம்பர் 31 இல் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 127 பில்லியனாக (அண்ணளவாக) காணப்பட்டது. கீழ்காணும் வரைபடமானது தேறிய சொத்தின் பெறுமதியின் அடிப்படையில் ஒவ்வொரு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனியினதும் சந்தைப் பங்களிப்பினை பிரதபலிக்கின்றது. (உருவம் 16)

உருவம் 16: 31 டிசம்பர் 2014 இல் உள்ளவாறான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தை பங்களிப்பு



## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் ஒட்டுமொத்த நிலைமைகள்

2013 மற்றும் 2014 ஆகிய வருடங்களில் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் செயற்திறனின் ஒப்பீட்டளவு புள்ளவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 17)

உருவம் 17: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் ஒட்டுமொத்த நிலைமைகள்

| | 31.12.2014 இல் | 31.12.2013 இல் | % மாற்றம் |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் எண்ணிக்கை | **74** | 62 | 19% |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதி (ரூபா மில்லியன்) | **127,356** | 54,304 | 135% |
| அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை | **32,619** | 29,648 | 10% |
| வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை (மில்லியன். அண்ணளவாக) | **9,772** | 4,134 | 136% |
| உரித்துடைமைகளில் முதலீடு (ரூபா மில்லியன்) | **14,591** | 9,453 | 54% |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு (ரூ.மில்லி.) | **60,897** | 17,825 | 242% |
| ஏனைய சாதனங்களில் முதலீடு** (ரூ.மில்லியன்) | **52,202** | 27,000 | 93% |

*** வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்புகள் முதலியன*

*மூலம்: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்*

## சந்தை இடையீட்டாளர்கள்

மூலதனச் சந்தையில் சந்தைப் பங்குபற்றுனர்களாக கடமையாற்றுவதற்கு எல்லைக் கடன் வழங்குனர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள் மற்றும் தீர்வக இல்லம் ஆகியவற்றுக்கு பதிவீடுகளை அளிப்பதற்கு இ.பி.ப.ஆ. க்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பலதரப்பட்ட விதிகளை அமைத்தும் மற்றும் ஏனைய முன்னெடுப்புகளூடாகவும் இ.பி.ப.ஆ. முதலீட்டாளர்கள் நலனை பாதுகாக்கும் அதேசமயம் சந்தையின் வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையினை ஊக்குவிப்பதற்காக தொடர்ச்சியாக அதன் முறைமைப்படுத்தலை சீரமைத்தது.

2014 ஆம் ஆண்டில், இதுநாள்வரைக்கும் வணிக செயற்பாடுகளை ஆரம்பிக்காத முதலீட்டு முகாமையாளர்களது பதிவீட்டினை புதுப்பிப்பதன் இடர்நேர்கையினை இ.பி.ப.ஆ. மதிப்பீடு செய்தது. 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டதன் ஏற்பாடுகளுக்கமைய பதிவீடு செய்யப்பட்ட அனைத்து முதலீட்டு முகாமைத்துவக் கம்பனிகளுக்கும் ஓர் பணிப்புரை வழங்கப்பட்டது. இது பணிப்புரை வழங்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் வணிகத்தை ஆரம்பிக்குமாறு பணிப்புறுத்தப்பட்டது. ஆறு மாதங்கள் நிறைவடைந்ததன் பின்னர் இ.பி.ப.ஆ. அனைத்து பதிவீடு செய்யப்பட்ட முதலீட்டு முகாமையாளர்களது காரியாலயத்திற்கும் அவர்களது வணிகத் திட்டங்கள் மற்றும் செயற்பாட்டு நிலைமை தொடர்பாக மதிப்பிடுவதற்காக விஜயம் செய்தது. அவதானிப்புகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட பணிப்புரைக்கமைய வணிகச் செயற்பாடுகளை ஆரம்பிக்க இயலாத முதலீட்டு முகாமையாளர்களுக்கு மேலும் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டின் இறுதியில், அனைத்து முதலீட்டு முகாமையாளர்களும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவுற்றிருந்தார்கள். மேலும், மேற்குறிப்பிட்ட பணிப்புரைக்கமைய, இ.பி.ப.ஆ. சட்டத்தின் கீழ் ஓர் புதிய பதிவீட்டினை பெற்றுக்கொள்ளும் நோக்கமுள்ள ஒரு கம்பனி அதன் பதிவீடு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் வணிகத்தை ஆரம்பித்தல் வேண்டும் என்ற தேவைப்பாடு காணப்படுகின்றது. எனவே, இந்த வழிமுறையானது வணிகத்தை ஆரம்பிப்பதற்கு பதிவீட்டினை பெற்றுள்ள ஆனால் அவசியமான ஒழுங்கான முறைகள் மற்றும் செயலாக்கிகள் இல்லாது பதிவீட்டினை பெறுவதிலிருந்து கம்பனிகளை ஊக்கங்கெடுக்கும். இதன் மூலமாக கம்பனிகள் முதலீட்டு முகாமையாளர் பிரிவின் கீழ் கடமையாற்றுவதற்கு பெற்றுக்கொண்ட பதிவீட்டினை துஷ்பிரயோகம் செய்வதிலிருந்து தடுக்கும்.

2014 இல் இலங்கை மத்திய வங்கியின் சராசரி நிறையிடப்பட்ட முதன்மை கடனளித்தல் வட்டி வீதத்தின் வீழ்ச்சியிலிருந்து பெற்ற சாதகமான பொருளாதார நிலைமைகளுக்கு பதிற்செயலாக இ.பி.ப.ஆ. எல்லைக் கடன் வழங்குனர்களை எல்லைக் கடன் வர்த்தகத்திற்கான கடனளித்தல் வட்டி வீதத்தினை சீராக்குமாறு வற்புறுத்தியது. இது வீழ்ச்சியடைந்த வட்டி வீதங்களின் நன்மைகளை வாடிக்கையாளருக்கு மாற்றியது. இவ்வருடத்தின் இறுதிப்பகுதியில் எல்லைக்கடன் வழங்குனர்களுடன், எல்லைக் கடன் வழங்கல் தொடர்பான பிரதான முறைமைப்படுத்தல் அக்கறைகளுக்கு அழுத்தமளிக்கவும் மற்றும் இத்துறையினை மேலும் பலப்படுத்துவதற்கு அவர்களது கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை பெற்றுக்கொள்வதற்காக இ.பி.ப.ஆ. ஓர் கலந்தாய்வு கூட்டத்திற்கு வசதியளித்தது. (உருவம் 18)

## செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

உருவம் 18: ஏனைய சந்தை இடையீட்டாளர்களின் நிதியியல் சிறப்புக்கூறுகள் (31 டிசம்பர் 2014 இல் உள்ளவாறானது)

| பிரிவு | மொத்த வருமானம் ரூபா | பகுதிவாரியான வருமானம் (இ.பி.ப.ஆ. சட்டத்தின் கீழ் பதிவீடு செய்யப்பட்ட வணிகங்களிலிருந்து) | வரிக்கு முந்திய மொத்த தேறிய இலாபம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா |
|---|---|---|---|---|---|
| எல்லைக் கடன் வழங்குனர் | 176,556,203 | 169,349,554 | (80,076,019) | 1,180,001,061 | 344,394,477 |
| முதலீட்டு முகாமையாளர் | 528,671,984 | 299,974,359 | 361,527,645 | 5,059,907,948 | 1,051,087,521 |
| ஒப்புரவாளர் | 2,632,607,000 | - | 2,718,912,000 | 17,532,866,000 | 126,472,000 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 130,136,218 | 117,603,718 | 19,985,630 | 300,298,990 | 74,873,797 |
| பல்நோக்கு நிறுவனங்கள்** | 558,705,350 | 342,485,764 | 267,925,051 | 4,992,901,614 | 1,077,002,381 |
| மொத்தம் | 4,026,676,755 | 929,413,395 | 3,288,274,307 | 29,065,975,613 | 2,673,830,176 |

*மூலம்: இ.பி.ப.ஆ. க்கு சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள்*

*இலங்கை மத்திய வங்கியினால் முறைமைப்படுத்தப்படும் உரிமமளிக்கப்பட்ட வங்கிகள், பதிவீடு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விசேட குத்தகைக் கம்பனிகள் தொடர்பான தகவல்கள் ஓர் நியாயமான துறைசார் நிலைமையினை சமர்ப்பிப்பதற்காக விலக்கப்பட்டுள்ளது.*

***பல்நோக்கு நிறுவனங்கள் என்பன பதிவீடு வழங்கப்பட்ட ஒன்றுக்கும் மேற்பட்ட முறைமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பதவீடு செய்யப்பட்ட நிறுவனங்களாகும்.*

### கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் வலியுறுத்தல்

#### சந்தைக் கண்காணிப்பு

இ.பி.ப.ஆ. இன் ஆணையில் ஓர் அங்கமாக ஓர் பயனுறுதிமிக்க, திறமைமிக்க மற்றும் வெளிப்படையான மூலதனச் சந்தையினை அபிவிருத்திசெய்வதுடன் வர்த்தக நடவடிக்கைகளில் நாணயம் மற்றும் நேர்மை என்பவற்றை ஆழப்பதியவைப்பதற்கு கடப்பாடுடையதாக காணப்படும்வேளை கொ.ப.ப. இல் இடம்பெறும் வர்த்தக நடவடிக்கைகளை பயனுள்ளவிதத்தில் கண்காணிப்பதற்கும் மற்றும் இ.பி.ப.ஆ. சட்டத்தினை மீறும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களை கண்டுபிடிப்பதற்கும் அவற்றைத் தவிர்ப்பதற்கும் இ.பி.ப.ஆ. பொறுப்பாளியாயுள்ளது.

உள்ளுறைபவர் வர்த்தகம், சந்தைக் காயாளுகை மற்றும் வேறு ஏதேனும் சந்தை துர்நடத்தை / முறைகேடான செயல் என்பவற்றை குறிப்பிடும் அசாதாரணமான விலை அல்லது புரள்வினது அசைவுகளை இனங்கண்டு விசாரிப்பதற்காக நாளாந்த சந்தை நடவடிக்கைகளை இ.பி.ப.ஆ. கண்காணிக்கின்றது.

அதி நவீன கண்காணிப்பு முறைமையொன்றின் பயன்பாட்டு உதவியுடன், உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் சந்தைக் கையாளுகை என்பவற்றை உள்ளடக்கிய சந்தை துர்நடத்தைகளைக் குறிப்பிடக்கூடிய அசாதாரணமான விலை மற்றும் புரள்வினது அசைவுகளை நாம் இனங்கண்டு விசாரிக்கின்றோம். கண்காணிப்பு முறையானது ஏதேனும் சந்தேகத்திற்கிடமான வர்த்தக நடவடிக்கைகளை அறிக்கையிடும். கண்டுபிடிப்பொன்று மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கண்காணிப்புக் குழுவிற்கு ஓர் ஆலோசனைக் கோரலை தயாரிப்பதனூடாக பொருத்தமான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இக்கண்காணிப்புக் குழுவானது சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்டிருப்பதுடன் ஆணைக்குழுவுக்கு இறுதிப் பரிந்துரையினை மேற்கொள்வதற்கு முன்னர் ஓர் முற்றுமுழுதான புலனாய்வின் அவசியத்தினை கூட்டாக தீர்மானிப்பார்கள். இ.பி.ப.ஆ. இல் மேலதிகத் தரவுகள் மற்றும் பகுப்பாய்வுக் கருவிகள் கிடைக்கக்கூடியதாக இருப்பதனால் பாரிய அளவிலான கண்காணிப்பு கரிசனைகள் எழுப்பப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் நாம் பல்வேறு சிக்கல்களில் 18 கண்காணிப்பு ஆலோசனைக் கோரல்களை தயார்செய்ததுடன் அவை பின்வரும் சந்தேகத்திற்கிடமான சந்தை தவறுகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. (உருவம் 19)

உருவம் 19: கண்காணிப்பு ஆலோசனைக்கோரல்கள்

| கண்காணிப்பு ஆலோசனைக்கோரல் | எண்ணிக்கை |
|---|---|
| உள்ளுறைபவர் வர்த்தகம் | 06 |
| முன்னோடுதல் | 03 |
| சந்தைக் கையாளுகை | 10 |
| ஏனையவை | 02 |

இதற்கும் மேலாக நாம் கொ.ப.ப. இடமிருந்து 15 கண்காணிப்பு ஆலோசனைக் கோரல்களைப் பெற்றோம். கொ.ப.ப. அதன் சொந்த இணையான சுயாதீன கண்காணிப்பு நடவடிக்கைகளை நடாத்துகின்றது.

முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது கண்காணிப்பு ஆலோசனைக் கோரல்களில் எண்ணிக்கையானது ஓரளவு குறைந்தது. இதற்கான பிரதான காரணம் கண்காணிப்பு கரிசனைகளின் முக்கிய வரிசைப்படுத்தலும் மற்றும் மிகவும் முக்கியமான மற்றும் கணிசமான சந்தை விளைவினை ஏற்படுத்தக்கூடிய அவதானிப்புகள் மாத்திரமே இறுதியாக ஆலோசனைக் கோரலாக வருவதனாலாகும். ஏனையவை “கண்காணிப்பு கரிசனைகள்” என வகைப்படுத்தப்படுகின்றன. இ.பி.ப.ஆ. ஒழுங்கற்ற பங்கு விலை மற்றும் தொகை அசைவுகள் மற்றும்

அசாதாரணமான வர்த்தகப் பாங்குகள் ஆகியவை தொடர்பாக 350 கண்காணிப்பு கரிசனைகளை மேற்கொண்டது.

முற்று முழுதான ஆலோசனைக் கோரல் அறிக்கைகள் தேவைப்படாத "கண்காணிப்புக் கரிசனைகளுள்" சில மேலதிக கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்விற்கு வகைப்படுத்தப்பட்டன. கவனிப்பெற்கென குறிப்பிடப்பட்ட பின்னர் ஓர் புதிய /குறிப்பிட்ட போக்கு வெளிவருகின்றதா மற்றும் முற்றுமுழுதான ஆலோசனைக் கோரல் தேவைப்படுகின்றதா என்பதை அவதானிப்பதற்காக சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் மற்றும் பங்குகள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றன.

மீளாய்வாண்டில், இ.பி.ப.ஆ. பொறுப்பதிகாரி / பிரதிப் பணிப்பாளர் நாயமகம் அவர்களினால் தலைமைத்துவம் வகிக்கும் குழுவானது கண்காணிப்பு ஆலோசனைக் கோரல்கள் மற்றும் ஏனைய கண்காணிப்பு விடயங்களை கலந்தாலோசிப்பதற்காக அண்ணளவாக 09 தடவைகள் சந்தித்துள்ளது. மீளாய்வாண்டில், பல்வேறு சந்தேகத்திற்கிடமான சந்தை முறைகேடான செயல்களில் சில வர்த்தகர்கள், தரகர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சந்தைப் பங்குபற்றுனர்களுக்கு எதிராக பல்வேறு வலியுறுத்தல் நடவடிக்கைகளை குழுவானது தீர்மானித்தது.

குழுவானது சிறிய தவறாளிகளை அழைப்பித்து எதிர்காலத்தில் அத்தகைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருக்குமாறு எச்சரிக்கை விடுத்துள்ளது. குழுவின் கட்டளையின் பேரில் சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தைகளில் ஈடுபட்டுள்ள தரப்பினரிடமிருந்து எழுத்துமூல விளக்கங்கள் கோரப்பட்டு அவர்களது பதில்கள் குழுவுக்கு அறிக்கையிடப்பட்டது.

அவசர கவனிப்பு தேவையான சிறிய விடயங்களில் வாய்மூல தெளிவாக்கத்தினை பெற்றுக்கொள்ளும்பொருட்டு கண்காணிப்புப் பிரிவு தரகர்களை அழைக்கும்போது ஓர் இடாப்பு பராமரிக்கப்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில், நேரத்துடனான விசாரணைகள் முறையற்ற வர்த்தக நடவடிக்கைகள் மேலும் நீடித்திருப்பதனை தவிர்த்துள்ளது.

## புலனாய்வுகள்

மூலதனச் சந்தையின் முறைமைப்படுத்துபவர் என்ற ரீதியில் இ.பி.ப.ஆ. இன் பங்களிப்பில் முக்கியமான தோற்றமாக புலனாய்வுகள் அமைகின்றன. சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தை சந்தர்ப்பங்களில் விரைவான மற்றும் பயனுறுதியான புலனாய்வுகளை நடாத்துவதானது, ஓர் ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தையைப் பேணுவதற்கு உதவுவதுடன் முதலீட்டாளர் நம்பகத்தன்மையை ஊக்குவித்து அதனூடாக இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்குப் பங்களிக்கின்றது.

இ.பி.ப.ஆ. சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள பொறுப்பாணைக்கு அமைய இ.பி.ப.ஆ. 2014 ஆம் ஆண்டில் சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தை விடயங்களில் புலனாய்வுகள் மேற்கொள்வதினை தொடர்ந்ததுடன் அது தொடர்பாக பொருத்தமான வலியுறுத்தல் நடவடிக்கையினை சிபாரிசு செய்தது. அதேசமயம் சந்தையில் உயர்ந்த தரத்திலான தொழில்சார் நடாத்தை மற்றும் கூட்டாண்மை ஒழுக்கத்தை வளர்ப்பதற்கும் சந்தை இடையீட்டாளர்கள், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களது எதிர்கால அத்துமீறல்களையும் தடுக்கக்கூடியதாயுள்ளது.

2014 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. னால் சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தைகள், சந்தை /விலைக் கையாளுகை உள்ளடங்களாக, உள்ளுறைபவர் வர்த்தகம், முன்னோடுதல் போன்றவற்றில் புலனாய்வுகள் நடாத்தப்பட்டன. குறிப்பிட்ட சில புலனாய்வுகள் 2014 இற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கும் மேலாக 2012 ஆம் ஆண்டில் ஆரம்பித்து அதே ஆண்டில் முடிவுற்ற ஓர் புலனாய்வு தொடர்பாக மதிப்பிற்குரிய சட்டமா அதிபரிடமிருந்து ஓர் அபிப்பிராயம் பெறப்பட்டதுடன் இது மீளாய்வாண்டில் நிலுவையாயுள்ளது.

மீளாய்வாண்டானது இ.பி.ப.ஆ. சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள்/ஒழுங்குவிதிகள் என்பவற்றின் கீழ் மேற்கொண்ட தவறுகள் / ஒழுங்கீனங்கள் தொடர்பாக இ.பி.ப.ஆ. இனால் பல முக்கியமான வலியுறுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டது. இது தொடர்பில் முக்கியமாகக் கருதப்பட்டது என்னவெனில் இரண்டு பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் இடம்பெற்ற சந்தேகத்திற்கிடமான சந்தை/விலை கையாளுகை மற்றும் / அல்லது உள்ளுறைபவர் கொடுக்கல் வாங்கலில் நடாத்தப்பட்ட இரண்டு புலனாய்வுகளின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு 5 நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும். பிணையங்கள் சட்டத்தின் வரம்பு மீறலுக்கும் மேலாக மேற்குறிப்பிட்ட புலனாய்வுகளில் ஒன்றில் இனங்காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்ட மீறல் ஒன்று அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பட்டியலிடப்பட்ட கம்பனி ஒன்றின் வணிக நடவடிக்கைகளில் இ.பி.ப.ஆ. னால் நடாத்தப்பட்ட இன்னுமோர் புலனாய்வுக்கு ஏற்ப, பிரச்சனைக்குரிய பட்டியலிடப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்கள் /உத்தியோகத்தர்களாக கடமையாற்றிய 20 நபர்களுக்கும் கம்பனிக்கும் வழக்கறிவித்தல் வழங்கப்பட்டது. இக்குறிப்பிட்ட புலனாய்வு தொடர்பான விபரங்கள் சட்ட நடவடிக்கை யாருக்கு எதிராக மேற்கொள்ளபடல் வேண்டும் என்பதனை இனங்காண்பதற்காக மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

ஒரு பட்டியலிட்ட கம்பனியின் பங்குகளில் சந்தேகத்திற்கிடமான உள்ளுறைபவர் கொடுக்கல் வாங்கலில் நடாத்தப்பட்ட இன்னுமோர் புலனாய்வினைத் தொடர்ந்து பிரச்சனைக்குரிய பட்டியலிடப்பட்ட கம்பனியின் தலைவருக்கு கடுமையான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கும் மேலாக, ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியுடன் தொடர்புடைய ஓர் நிறுவனம் தொடர்பான ஓர் விடயத்தில் உயர்நீதி மன்றத்தின் ஓர் கட்டளையினைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட நிறுவனம் தொடர்பான சட்ட இயல்பில் ஓர் புலனாய்வு நடாத்தப்பட்டு இதன் கண்டுபிடிப்புகள் உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும், சந்தேகத்திற்கிடமான பணச் சலவையில் நிதியியல் நுண்ணறிவு அலகினால் (நி.நு.அ.) நடாத்தப்பட்ட ஒரு புலனாய்வு தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் நி.நு.அ. இற்கு உதவிக்கரம் நீட்டப்பட்டது.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

2014 டிசம்பர் இறுதியில் குறிப்பிட்ட புலனாய்வுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலவரம் ஆகியவற்றின் விளக்கங்கள் மற்றும் ஓர் சுருக்கமான விபரம் கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 20)

உருவம் 20: புலனாய்வுகளின் விபரங்கள்

| புலனாய்வுகளின் தன்மை | புலனாய்வுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை /தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| உள்ளுறைபவர் வர்த்தகம் 1 | 3 | 2013 ஆம் ஆண்டின் இறுதியில் சந்தேகத்திற்கிடமான உள்ளுறைபவர் வர்த்தகத்தில் மூன்று புலனாய்வுகள் நிலுவையிலிருந்தன.<br>• 2014 ஆம் ஆண்டில் இத்தகைய உள்ளுறைபவர் வர்த்தகப் புலனாய்வொன்றின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக்கொண்டு ஓர் தனிநபருக்கு கடுமையான முன்னெச்சரிக்கைக் கடிதமொன்று வழங்கப்பட்டது.<br>• 2014 ஆம் ஆண்டில் சந்தேகத்திற்கிடமான உள்ளுறைபவர் வர்த்தகத்தில் இன்னுமோர் புலனாய்வொன்று பின்வரும் காரணத்திற்காக எவ்வித வலியுறுத்தல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது முடிவுறுத்தப்பட்டது. குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக உள்ளுறைபவர் வர்த்தகத்தில் ஓர் விடயத்தினை சட்டரீதியாக நிலைநிறுத்துவதற்கான ஆவணங்கள் / சாட்சியங்கள் காணப்படாததனாலாகும்.<br>• டிசம்பர் 2014 இல் சந்தேகத்திற்கிடமான ஓர் உள்ளுறைபவர் வர்த்தகத்தில் மற்றைய புலனாய்வானது முடிவுறுத்தப்பட்டு இது தொடர்பான அறிக்கையானது தொகுக்கப்பட்ட வண்ணமுள்ளது. |
| சந்தை / விலை கையாளுகை 2 | 2 | 2013 ஆம் ஆண்டின் இறுதியில் சந்தேகத்திற்கிடமான சந்தை /விலைக் கையாளுகையில் ஓர் புலனாய்வானது நிலுவையிலுள்ளது.<br>• மேற்கூறப்பட்ட இப்புலனாய்வானது 2014 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டு இப்புலனாய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், இரண்டு நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.<br>• 2014 ஆம் ஆண்டில், இரண்டு பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் சில முதலீட்டு ஆலோசகர்களினால் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்களில் ஓர் புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டது. டிசம்பர் 2014 இல் இக்குறிப்பிட்ட புலனாய்வானது நடந்தவண்ணமுள்ளது. |
| சந்தை / விலைக் கையாளுகை மற்றும் /அல்லது உள்ளுறைபவர் வர்த்தகம் | 3 | 2014 ஆம் ஆண்டில் சந்தேகத்திற்கிடமான சந்தை /விலைக் கையாளுகை மற்றும் / அல்லது உள்ளுறைபவர் வர்த்தகத்தில் மூன்று புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.<br>• அத்தகைய ஓர் புலனாய்வினைத் தொடர்ந்து மூன்று நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், இவ்விடயமானது மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு இதற்காக அனுப்பிவைக்கப்பட்டது.<br>• சந்தேகத்திற்கிடமான சந்தை /விலைக் கையாளுகை மற்றும் / அல்லது உள்ளுறைபவர் வர்த்தகத்தில் மற்றைய இரண்டு புலனாய்வுகள் 2014 இல் ஆரம்பிக்கப்பட்டு நடந்தவண்ணமுள்ளது. |
| முன்னோடுதல் 3 | 01 | 2013 ஆம் ஆண்டின் இறுதியில் சந்தேகத்திற்கிடமான முன்னோடுதலில் ஓர் புலனாய்வு நிலுவையிலிருந்தது. இக்குறிப்பிட்ட புலனாய்வானது 2014 இல் முடிவுறுத்தப்பட்டு இது தொடர்பான அறிக்கையானது தொகுக்கப்பட்ட வண்ணமுள்ளது. |
| ஒரு பங்குத்தரகுக் கம்பனியினால் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்கள் தொடர்பான சந்தேகத்திற்கிடமான முறைகேடான நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வு | 01 | இது தொடர்பான புலனாய்வானது 2012 இல் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயலகத்தினால் சிபாரிசு செய்யப்பட்டவாறும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் அறிவுறுத்தப்பட்டவாறும் இவ்விடயம் தொடர்பாக மதிப்பிற்குரிய சட்டமா அதிபரிடமிருந்து ஓர் முறைப்படியான அபிப்பிராயத்திற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.<br><br>2014 டிசம்பரில் இம்முறைப்படியான அபிப்பிராயமானது இன்னும் நிலுவையிலுள்ளது. |

*1. ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளில், அக்குறிப்பிட்ட கம்பனியின் பிணையங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படாத விலை உணர்திறன் தகவல்களை வைத்திருக்கும் சமயம் வர்த்தகம் மேற்கொள்ளல்.*

*2. ஓர் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் பிணையங்களது விலை அல்லது வர்த்தகம் தொடர்பாக ஓர் பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தோற்றப்பாட்டினை உருவாக்குதல்.*

*3. ஒரு வாடிக்கையாளருக்கு குறித்த கம்பனியின் பிணையங்களில் கணிசமான அளவு கொள்வனவு அல்லது விற்பனைக்கு முன்னர் ஒரு கம்பனியின் பிணையங்களில் வர்த்தகத்தினை மேற்கொண்டு அதன் பின்னர் இலாபமடையும் நோக்கத்துடன் அக்குறிப்பிட்ட பிணையங்களில் வர்த்தகம் செய்தல்.*

| புலனாய்வுகளின் தன்மை | புலனாய்வுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை /தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| முறைப்பாடுகள் | 02 | 2013 ஆம் ஆண்டில் ஒரு பங்குத்தரகுக் கம்பனிக்கெதிராக முதலீட்டாளர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இரண்டு புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இக்குறிப்பிட்ட புலனாய்வுகள் 2014 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு இது தொடர்பான அறிக்கைகளானது 2014 டிசம்பரில் தொகுக்கப்பட்ட வண்ணமுள்ளது. |
| ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் வணிக விவகாரங்கள் தொடர்பான புலனாய்வு | 01 | 2013 இல் ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் வணிக விவகாரங்கள் தொடர்பான ஓர் புலனாய்வானது ஆரம்பிக்கப்பட்டு இக்குறிப்பிட்ட புலனாய்வானது டிசம்பர் 2014 இல் நிறைவு செய்யப்பட்டது.<br><br>இப்புலனாய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், பிரச்சனைக்குரிய பட்டியலிடப்பட்ட கம்பனியில் பணிப்பாளர்கள் மற்றும் /அல்லது உத்தியோகத்தர்களாக கடமையாற்றிய 20 நபர்கள் மற்றும் கம்பனிக்கும் வழக்கறிவித்தல் வழங்கப்பட்டது. இக்குறிப்பிட்ட புலனாய்வு தொடர்பான விபரங்கள் சட்ட நடவடிக்கை யாருக்கு எதிராக மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை இனங்காண்பதற்காக மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. |
| ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியினால் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியமத்தின் சந்தேகத்திற்கிடமான மீறுதல் தொடர்பான புலனாய்வு | 01 | 2014 ஆம் ஆண்டில், பட்டியலிடப்பட்ட கம்பனி ஒன்றினால் ஓர் சந்தேகத்திற்கிடமான பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியமத்தின் மீறல்கள் தொடர்பாக ஓர் புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டது. 2014 டிசம்பரில் இக்குறிப்பிட்ட புலனாய்வானது நடந்த வண்ணமுள்ளது. |

## முறைப்பாடுகள்

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. பொதுப்பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக 25 முறைப்பாடுகளை கையாண்டதுடன் இவற்றில் 23 தீர்த்துவைக்கப்பட்டன.

## வழக்காடல்கள்

### மெக்பெக் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் இ.பி.ப.ஆ. வழக்கு இலக்கம் HCMCA 217/2007

இ.பி.ப.ஆ. விதிகளுக்கு முரணாக சில முக்கியமான தகவல்களை உடனடியாக வெளிப்படுத்தாமைக்காக குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நான்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் அறிவுபடைத்த நீதிவான் அவர்களது தீர்ப்புக்கும் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கும் எதிராக மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். மாகாண மேல்நீதிமன்றத்தின் அறிவுபடைத்த நீதிபதி அவர்கள் இவ்விடயத்தில் ஓர் இணக்கமாக மூன்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பாக நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை உறுதிப்படுத்தி இரண்டு குற்றச்சாட்டெண்களுக்கும் தலா ரூபா 3.3 மில்லியனை குற்றப்பணமாக விதித்தார். அறிவுபடைத்த நீதிவான் அவர்களால் சுமத்தப்பட்ட சிறைவாசத் தண்டனையானது ஒதுக்கிவைக்கப்பட்டது. குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு இரண்டிற்கும் எதிரான 6ஆம் குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளரது மேன்முறையீடானது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

### இ.பி.ப.ஆ. எதிர் திரு. பி.ஏ.ஜயசேகர மற்றும் ஏனைய 8 நபர்கள் வழக்கு இலக்கம் S/64721/2006

இ.பி.ப.ஆ. ஆல் நவலோக ஹொஸ்பிட்டல் பி.எல்.சி. பங்குகள் தொடர்பான சந்தைக் கையாளுகைக்காக கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஒன்பது நபர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சட்டமா அதிபரின் அனுமதியுடன் ஏழு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு இ.பி.ப.ஆ. ஒத்திணங்கியதுடன் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டது. 09ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பாக வழக்கின் விளக்கமானது மீளாய்வாண்டில் நிலுவையாயிருந்ததுடன், 09 ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வேண்டுகோளுக்கிணங்க இ.பி.ப.ஆ. இக்குற்றத்திற்கு ரூபா 1.1 மில்லியனுக்கு ஒத்திணங்கி இப்பணமானது இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டது.

### பி.பி. சன்ஜீவ மிஹிர குமார மற்றும் பி.பி. சுஜித் சமீர குமார எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனையோர் (CA (W) 265/2013)

ஓர் பங்குத்தரகுக் கம்பனி மற்றும் ஓர் எல்லைக் கடன் வழங்குனரின் வாடிக்கையாளர்களான இரண்டு முதலீட்டாளர்களினால் (மனுதாரர்கள்) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட ஓர் ஆணை விண்ணப்பமானது (CA (W) 265/2013) இ.பி.ப.ஆ. க்கு வழங்கப்பட்டது. இரண்டு முதலீட்டாளர்களும் ஏனைவற்றுக்கிடையில், அவர்களது பங்குத்தரகர் மற்றும் அவர்களது எல்லைக் கடன் வழங்குனர் இவர்களது நலன்களுக்கு எவ்விதமான அக்கறையுமின்றி ஆரம்பத்தில் ரூபா 20 மில்லியனாக மதிப்பிடப்பட்ட அவர்களது பங்கு முதலீட்டுத் தேக்கத்தினை எல்லைக் கடன் வர்த்தக உடன்படிக்கையை நிறைவேற்றி பூச்சிய நிலுவையாக குறைத்தமைக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்கள்.

அனைத்து பிரதிவாதிகளும் அவர்களது ஆட்சேபனையை தாக்கல் செய்ததுடன் மனுதாரர்கள் அவர்களது எதிர்ப்பினைத் தாக்கல் செய்தார்கள். எவ்வாறாயினும், மீள்ய்வாண்டில் மனுதாரர்கள் அவர்களது விண்ணப்பத்தினை வாபஸ்பெற்றதுடன் நீதிமன்றமானது விண்ணப்பத்தினை

## செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

கிரயமின்றி தள்ளுபடி செய்தது. இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகள் பங்குத்தரகர் மற்றும் /அல்லது எல்லைக் கடன் வழங்குனரினால் மீறப்பட்டுள்ளதா என்பதை விசாரித்தறிவதற்காக இ.பி.ப.ஆ. ஓர் புலனாய்வினை நடாத்துகின்றது.

### இ.பி.ப.ஆ. எதிர் மிரமார் பீச் ஹோட்டல்ஸ் மற்றும் ஏனையோர் நீ.நீ. வழக்கு இலக்கங்கள் S/72082/2010 & S/72083/2010

31 மார்ச் 2008 மற்றும் 31 மார்ச் 2009 இல் நிறைவடைந்த நிதியாண்டுகளுக்கான இ.பி.ப.ஆணைக்குழுவின் விதி இலக்கம் 3(1) மற்றும் 17க்கு முரணாக கம்பனியின் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறியமைக்காக மிரமார் பீச் ஹோட்டல்ஸ் மற்றும் கம்பனியின் பணிப்பாளர்களுக்கெதிராக 2010 நவம்பர் 04 இல் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கம்பனியானது இவ்வாண்டில் 31 மார்ச் 2008 மற்றும் 31 மார்ச் 2009 இல் நிறைவடைந்த நிதியாண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை சந்தைக்கு வெளியிட்டது. இவ்விடயமானது கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் முன் நிலுவையிலுள்ளது.

### செலிங்கோ இன்சூரன்ஸ் ஊழியர்கள் பங்கு உரித்துடைமை நம்பிக்கைப் பொறுப்பு (CIESOT) - SC (FR) 191 / 2009

செலிங்கோ இன்சூரன்ஸ் ஊழியர்கள் பங்கு உரித்துடைமை நம்பிக்கை பொறுப்பினில் (CIESOT) இந்நம்பிக்கைப் பொறுப்பின் தன்மை மற்றும் இ.பி.ப.ஆ. சட்டம் அல்லது விதிகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஏதேனும் மீறப்பட்டுள்ளதா என்பதனை விசாரித்தறிவதற்காக ஓர் புலனாய்வினை நடாத்துமாறு இ.பி.ப.ஆ.வை உயர்நீதிமன்றம் பணித்தது. இ.பி.ப.ஆ. னால் நடாத்தப்பட்ட புலனாய்வு அறிக்கையானது உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

#### இ.பி.ப.ஆ. பின்வருவனவற்றை முடக்குமாறும் பணிக்கப்பட்டது,

(அ) PICTET AND CE இன் வர்த்தகக் கணக்கிற்குச் சொந்தமான சிலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. இன் பங்குகளை மறு அறிவித்தல் வரும்வரை; மற்றும்

(ஆ) CIESOT இன் வர்த்தகக் கணக்கிற்குச் சொந்தமான சிலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. இன் பங்குகளை மறு அறிவித்தல் வரும்வரை.

மேற்கூறப்பட்ட கட்டளைகள் கொ.ப.ப. மற்றும் மத்திய வைப்புத் திட்டமுறைமை (ம.வை.தி.) ஆகியவற்றினால் செயற்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் இதுபற்றி நீதிமன்றத்திற்கும் அறிவித்தது. இ.பி.ப.ஆ. இன் நிறைவு செய்யப்பட்ட புலனாய்வு அறிக்கையானது சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

### டச்வுட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி இன் கடன் கொடுத்தோரது ஒடுக்கல் விண்ணப்பத்தில் இ.பி.ப.ஆ. இன் தலையீடு - CHC/31/13/CO

கம்பனியின் வைப்பாளர் ஒருவர் தனது வைப்பிற்கான கொடுப்பனவினை கம்பனி தவறியதன் நிமித்தம் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் கம்பனியின் ஒடுக்கத்திற்கு இந்த ஒடுக்கல் விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார்.

ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் இ.பி.ப.ஆ. இந்த விடயத்தில் தலையிட்டு கம்பனி தொடர்பாக இ.பி.ப.ஆ. னால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி நீதிமன்றத்திற்கு அறிவித்தது. இது முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாப்பதற்காக அறிவிக்கப்பட்டதுடன் நீதிமன்றத்தின் தகவலறிவதற்காக புலனாய்வு அறிக்கையின் சாராம்சத்தையும் தாக்கல் செய்தது.

இ.பி.ப.ஆ. னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் நடவடிக்கைகள் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது.

- ஒடுக்கப்படுவதற்கு கோரப்படும் கம்பனியின் பணிப்பாளர்கள் மற்றும் கம்பனியின் குறிப்பிட்ட பணிப்பாளர்களுக்கு வழக்கறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.
- இடைக்கால நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்காததற்காக ஓர் வர்த்தக இடைநிறுத்தலை விதித்தது.
- இ)ஏனையவற்றுக்கிடையில் கம்பனியானது அதன் நடைமுறையற்ற சொத்துக்களை விற்பதனை நிறுத்திக்கொள்ளுமாறு விடுத்த பணிப்புறுத்தலை மீள அமுல்படுத்தியது.

கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றமானது இடைவரும் தரப்பினர் உட்பட அனைத்து தரப்பினரையும் கேட்டதன் பின்னர் மற்றும் அனைத்து தரப்பினரதும் எழுத்திலான சமர்ப்பணங்களை கருத்திற்கொண்டதன் பின்னர் 2014 ஜூன் 05 ஆம் திகதி கம்பனியினை ஒழித்துக்கட்டுமாறு ஒழித்துக்கட்டுநர் ஒருவரை நியமிக்குமாறு கட்டளை பிறப்பித்தது.

#### வலியுறுத்தல் செயற்பாடுகள்

ஆணைக்குழுவின் வழிகாட்டல் மற்றும் தீர்மானத்தின் பிரகாரம் வலியுறுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### முதலீட்டாளர்களுக்கு இழப்பீடு:

இ.பி.ப.ஆ. பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியமத்தின் ஏற்பாடுகளை ஓர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனி மீறியதன் நிமித்தம் எதிர்மறையாக பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கு இழப்பீட்டை வழங்குமாறு கம்பனியினை பணிப்புறுத்தியது.

இதற்கமைய, பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியினால் அண்ணளவாக ரூபா 1,227,761/= இழப்பீடாக முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டது.

#### குற்றப்பணம் விதித்தல்

சந்தை /விலை கையாளுகைக்கான சதித்திட்ட தவறை மேற்கொண்டு கொழும்பு கோட்டை நீதவான் மன்றத்தின் முன் நிலுவையிலுள்ள ஓர் விடயத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரது வேண்டுகோளின் பேரில் இத்தவறுக்கு ஒத்திணங்கும் பொருட்டு ஓர் முதலீட்டு ஆலோசகருக்கு ரூபா 1.1 மில்லியனை குற்றப்பணமாக இ.பி.ப.ஆ. விதித்தது. இவ்விடயமானது நீதவான் மன்றத்தின் ஒருங்கியல்புடன் ஒத்திணங்கப்பட்டதுடன் ஏனைய ஏழு கூட்டுக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கும் ஒத்த விண்ணப்பங்களில் ஒத்திணங்கப்பட்டது. இக்குற்றப்பணமானது இ.பி.ப.ஆ. இன் இழப்பீட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டது.

### ஓர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பணிப்பாளருக்கு எதிரான முன்னெச்சரிக்கை

பங்குகளது கொள்வனவைச் சூழப்பட்டுள்ள சூழ்நிலைகள் மற்றும் சில குறைத்தல் காரணிகள் மற்றும் இ.பி.ப.ஆ. க்கு மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணங்கள் மற்றும் எடுத்துக்கூறல்கள்

என்பவற்றை ஆணைக்குழு ஆழ்ந்த யோசனையின் பின்னர்; பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பணிப்பாளர் ஒருவருக்கு சாத்தியமான உணர்திறனான காலப்பகுதியில் அவரது பங்குக் கொள்வனவுக்கு எதிராக ஆணைக்குழுவானது முன்னெச்சரிக்கை விடுத்தது.

## வழக்கறிவித்தல்கள்

***ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக வெளிப்படுத்தாமை மற்றும் சந்தேகத்திற்கிடமான சந்தை /விலை கையாளுகைக்கு வழக்கறிவித்தல்***

இ.பி.ப.ஆ. இன் புலனாய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பணிப்பாளர்கள் மற்றும் /அல்லது அதிகாரிகளாக கடமையாற்றிய 20 நபர்களுக்கு மற்றும் கம்பனி உள்ளடங்களாக வழக்கறிவித்தல்கள் வழங்கப்பட்டன. இதன்பின்னர், ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பேரில், ஆவணங்கள் மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு அவரது ஆலோசனை மற்றும் அவசியமான நடவடிக்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

***ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பணிப்பாளர்களுக்கு ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் சந்தேகத்திற்கிடமான சந்தை /விலை கையாளுகை மற்றும் /அல்லது உள்ளுறைபவர் வர்த்தகத்திற்காக வழங்கப்பட்ட வழக்கறிவித்தல்***

பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் சந்தேகத்திற்கிடமான சந்தை /விலை கையாளுகை மற்றும் /அல்லது உள்ளுறைபவர் வர்த்தகத்திற்காக ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் மூன்று பணிப்பாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது. இதற்கமைய, இவ்விடயமானது மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு அவரது ஆலோசனை மற்றும் அவசியமான நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

***ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளில் சந்தேகத்திற்கிடமான சந்தை /விலை கையாளுகைக்கு எதிராக இரண்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட வழக்கறிவித்தல்***

ஆணைக்குழுவின் தீர்மானத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒரு கம்பனியின் பங்குகளில் வர்த்தகம் மேற்கொண்ட இரண்டு நபர்களுக்கு கம்பனியின் பங்குகளில் சந்தேகத்திற்கிடமான சந்தை /விலை கையாளுகைக்காக வழக்கறிவித்தல் வழங்கப்பட்டதுடன், இவ்விடயமானது மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு சந்தை /விலை கையாளுகை மற்றும் இ.பி.ப.ஆ. விதிகளின் விதி இலக்கம் 12 இனை மீறியமைக்காக வழக்கு தாக்கல் செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டது.

***பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவை 1995 (திருத்தியமைக்கப்பட்டது) மீறியமைக்கான எச்சரிக்கை***

- பொறுப்பேற்பு விலைக்கோரல் விடுக்கப்பட்ட ஒரு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பங்குகளை கொ.ப.ப. இன் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் விற்பனை செய்தமைக்காக ஒரு கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு பின்வருவனவற்றை கருத்திற்கொண்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. விற்பனையின் பின்னரான முறைமைப்படுத்தல் குறுக்கீடு, நிலவும் நிலையினை திருப்பியமைப்பதற்காக கம்பனியினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் குறிப்பிட்ட மீறலின் நிமித்தம் சந்தைக்கு எழுந்த எதிர்மறையான தாக்கத்தினை செல்லாததாக்குவதற்காக பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கு இழப்பீடு வழங்கியமை என்பனவாகும்.

- மற்றுமோர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் நான்கு முன்னாள் பணிப்பாளர்கள் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியமம் 1995 இன் கீழ் இலக்கு வைக்கப்பட்ட கம்பனியின் பங்குதாரர்களுக்கு கடமைப்பட்டுள்ள தமது கடப்பாடுகளை மீறியமைக்காக எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

***சட்ட முரண் செயல் அறிவித்தல்***

ஒரு கம்பனியின் பங்குதாரர்களுக்கு கடமைப்பட்டுள்ள சட்டக் கடப்பாடுகளை ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனி நிறைவேற்றத் தவறியமைக்காக ஓர் சட்ட முரண்செயல் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. இது பங்குதாரர்கள் அத்தருணத்தில் நிலுவையிலுள்ள கட்டாயக் கொடைமுனைவின் நன்மை தீமைகளில் தீர்மானம் மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் பொருட்டு பிரசுரிக்கப்பட்டது. இது 1995 ஆம் ஆண்டின் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையின் விதி இலக்கம் 12 (1) மற்றும் 13 (2) இனை மீறியமைக்காகும்.

***த வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. (த.வை.க.) இன் பங்குகளில் டெட்ரோபேன் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டினால் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்கள் தொடர்பான புலனாய்வில் மதிப்பிற்குரிய சட்டமா அதிபரின் சட்ட அபிப்பிராயத்திற்காக காத்திருத்தல்***

2012 இல் இ.பி.ப.ஆ. ஆல் எழுப்பப்பட்ட குறிப்பிட்ட விடயங்களை கணக்கிலெடுத்து மதிப்பிற்குரிய சட்டமா அதிபரிடமிருந்து கோரப்பட்ட அபிப்பிராயம் தொடர்பாக பல ஞாபகப்படுத்தல்களும், இந்த புலனாய்வு அறிக்கையின் கண்டுபிடிப்புகளும் மீளாய்வாண்டில் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### தவறுதல் பலகை

வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்காமைக்காக கொ.ப.ப. இன் தவறுதல் பலகைக்கு மாற்றல் செய்யப்பட்ட இரண்டு கம்பனிகளில் வர்த்தகத்தினை, கொ.ப.ப. இன் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடுகளுக்கு அமைவுறும்வரை, இடைநிறுத்துமாறு கொ.ப.ப. யை இ.பி.ப.ஆ. பணித்தது. இடைநிறுத்தப்பட்ட இரு கம்பனிகளும் டச்வுட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி மற்றும் மிரமார் பீச் ஹோட்டல் பி.எல்.சி என்பனவாகும். கொ.ப.ப. இன் தவறுதல் பலகைக்கு மாற்றல் செய்யப்பட்ட பிணையங்களை வழங்கிய பின்வரும் கம்பனிகளை இ.பி.ப.ஆ. மிகவும் நெருக்கமாக கண்காணித்தவண்ணமுள்ளது.

- லங்கா சிமென்ட் பி.எல்.சி
- சென்ரல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி
- ஈயுஜே இன்டர்நெஷனல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி.
- பி சி ஹவுஸ் பி.எல்.சி.
- பி சி பார்மா பி.எல்.சி
- பி சி எச் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## மூலதனச் சந்தை அபிவிருத்தி

மூலதனச் சந்தைகள் சேமிப்புகள் பயனுறுதிமிக்க நீண்டகால முதலீடுகளுக்கு செல்வதற்கு வாய்க்காலாக அமைவதுடன் எந்த பொருளாதாரத்தினதும் இருதயமாக காணப்படுகின்றது. இலங்கையின் மூலதனச் சந்தையினை மேலும் வளர்க்கும் நோக்கத்துடன் இ.பி.ப.ஆ. இவ்வருடத்தில் பின்வரும் முன்னெடுப்புகளுக்கு வசதியளித்தது:

### மத்திய எதிர் தரப்பினர் பொறிமுறையின் (ம.எ.த.) அமுலாக்கம்

- இலங்கையின் மூலதனச் சந்தையினது உட்கட்டமைப்பினை விருத்திசெய்வதற்காக இ.பி.ப.ஆ. அனைத்து நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஓர் பயனுறுதிமிக்க இடர்நேர்கை முகாமைத்துவ வடிவமைப்புடன் கூடிய ஓர் ஒன்றிணைக்கப்பட்ட ம.எ.த. பொறிமுறையின் நிறுவுதலை விரைவுபடுத்தியது. இது பங்குகள், அரசாங்கப் பிணையங்கள், கம்பனிக் கடன்கள் மற்றும் மூலாதாரப் பிணைக் கருவிகள் போன்றவற்றின் வர்த்தகத்திற்காகும். எனவே, இம்முன்னெடுப்பினை இயக்குவதற்காக அனைத்து பங்காளிகளையும் உள்ளடக்கிய ஓர் மதிப்பீட்டுக் குழுவினை நியமிக்கவும் இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு ஆலோசனை மற்றும் திட்ட முகாமைத்துவ சேவைக்கு அழைப்பு விடுப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் அங்கமான இயக்கக்குழுவானது மத்திய வங்கியின் ஆளுனர், இ.பி.ப.ஆ. இன் தலைவர் மற்றும் கொ.ப.ப. இன் தலைவர் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

- உள்ளூர் மற்றும் சர்வதேசத்தில் பிரசுரிக்கப்பட்ட ஆர்வத் தெரிவிப்புக்கு 15 தரப்பினர் பதிலளித்திருந்ததுடன் 7 தரப்பினர் மதிப்பீட்டுக் குழுவுக்கு முன்னிலைப்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேலதிக மதிப்பீட்டின் பின்னர், 3 தரப்பினர்கள், போர்ஸ் கன்சல்ட் எல்.எல்.பி., ஒலிவர் வைமன் மற்றும் பி.டி.ஏ. கன்சல்டிங் லிமிட்டட் ஆகிய நிறுவனங்கள் இறுதி மதிப்பீட்டு மற்றும் தெரிவுக்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட தரப்பினரால் அமுல்படுத்தப்பட்ட ம.எ.த. திட்டங்கள் மற்றும் மேற்கோளிடப்பட்ட தளங்களில் ஒன்றிலேனும் விஜயத்தை மேற்கொண்டு அவர்களது ஈடுபாடு என்பவற்றை சுயாதீனமாக நிச்சயப்படுத்திய பின்னர் பி.டி.ஏ. கன்சல்டிங் லிமிட்டட் நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டது. இது உலகளாவிய ரீதியில் மூலதனச் சந்தை தொடர்பான திட்டங்களில் விசேடநிபுணத்துவம் மிக்க ஐக்கிய இராச்சியத்தை அடித்தளமாகக் கொண்ட நிறுவனமாகும். ம.எ.த. வடிவமைப்பில் அவர்களது நிறைவான புரிந்துணர்வு மற்றும் முற்றுமுழுதான ம.எ.த. அமுலாக்கலில் அவர்களது சிறந்த அனுபவம் என்பவற்றை கருத்திற்கொண்டு இத்திட்டமானது அவர்களுக்கு வழங்கப்பட்டது.

- கொ.ப.ப. பி.டி.ஏ. உடன் ஓர் ஒப்பந்த உறவினை நிலைநாட்டுவதற்கு அவசியமான சட்ட ஒப்பந்தங்கள் /உடன்படிக்கைகள் மற்றும் ஓர் முத்தரப்பு உடன்படிக்கை என்பவற்றில் கைச்சாத்திடுவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் இ.ம.வ. ஆகிய பங்காளிகளினால் ஒவ்வொரு நிறுவனத்தினதும் கடப்பாடுகள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அமுலாக்கலானது 2015 இல் ஆரம்பமாகும்.

- இத்திட்டத்தின் நோக்கமானது தற்போதைய தீர்வக மற்றும் தீர்ப்பனவு ஏற்பாடுகளது மீளாய்வு, வணிகம், செயற்பாடு, சட்ட, இடர்நேர்கை முகாமைத்துவம், நிதியியல், வரி மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றில் இடைவெளிகளை இனங்கண்டு சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழு ஒழுங்கமைப்பினது சர்வதேச நியமங்கள் மற்றும் சர்வதேச தீர்ப்பனவுக்கான வங்கிக் கொள்கைகள் போன்ற சிறந்த நடைமுறைகள் என்பவற்றை உள்ளடக்கியது.

- பி.டி.ஏ. இன் வரையெல்லையின் கீழான திட்டத்தின் நோக்கங்கள் பின்வரும் வரம்புக்குள் காணப்படுவதுடன் அவை இவற்றிற்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை:
  * இணக்கப்பாடு கண்ட நேரம் மற்றும் வரவு செலவு அளவுருவினுள் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்பாட்டு தோற்றங்கள் என்பவற்றில் அழுத்தத்துடன் இலங்கையின் நிதியியல் சந்தைக்கு ஓர் முற்றும் செயற்படத்தக்க ம.எ.த. முறையினை அமுல்படுத்துதல்.
  * இடர்நேர்கை முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் ம.எ.த. முறைக்கு ஓர் நிதியியல் மாதிரியினை வடிவமைத்தல்.
  * சட்ட அமைப்புமுறையினை சிபாரிசு செய்வதுடன் ம.எ.த. முறையினை அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் மறுசீரமைப்பினை இனங்காணுதல்.
  * தீர்வக மற்றும் தீர்ப்பனவு முறைகளது உறுதியுடைமையை மேம்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர்களது நம்பகத்தன்மையை மேம்படுத்துதல்.
  * இலங்கையின் நிதியியல் சந்தையின் முதலிடக்கூடிய நிலைமையினை தரமுயர்த்துவதன் மூலம் சந்தையில் அதிகரித்த நடவடிக்கைகளுக்கு ஊக்குவித்தல்.

- பி.டி.ஏ. கன்சல்ட்டிங் லிமிட்டட்டிடமிருந்து 2015 மே மாதமளவில் ம.எ.த. முறையின் சட்ட அமைப்புமுறை மற்றும் தீர்ப்பனவு மாதிரியிலான சிபாரிசுடன் ஓர் ஆரம்ப அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது. பி.டி.எ. இனது சிபாரிசானது இயக்கக்குழு மற்றும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும். இயக்கக்குழு மற்றும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் திட்டத்தினது கட்ட வேலைகள் ஒரேநேரத்தில் ஆரம்பமாகும். 2016 நான்காம் காலாண்டில் திட்டத்தின் நிறைவு இலக்குவைக்கப்பட்டுள்ளது.

### கம்பனிகள் முறிகள் சந்தையின் அபிவிருத்தி

- கம்பனி கடன் முறி வழங்கலிலுள்ள பிடித்துவைத்தல் வரிக்கு அரசாங்கத்தின் விலக்களிப்புடன் 2013 மற்றும் 2014 இல் கம்பனிகள்

முறிகள் சந்தையினூடாக திரட்டிய நிதியானது எழுச்சியடைந்தது. கடந்த சில ஆண்டுகளாக இ.பி.ப.ஆ. னால் பிரசுரிக்கப்பட்ட முக்கியமான முன்னெடுப்புகள் மற்றும் பிரேரணைகள் கம்பனிகள் முறிகள் சந்தையின் அபிவிருத்திக்கு வசதியளித்தது. இதன் விளைவாக, 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் முறையே ரூபா 68.3 பில்லியன் மற்றும் ரூபா 49.1 பில்லியன் திரட்டப்பட்டது.

- கம்பனிகள் முறிகள் சந்தையினை மேலும் விருத்திசெய்யும் நோக்கில் இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இன் உள்ளீட்டுடன் சந்தையின் அகலத்தையும் ஆழத்தையும் பரவலாக்குவதற்கு ஓர் கொள்கைப் பத்திரிகையை உருவாக்கியது. முக்கியமான கொள்கை தீர்மானங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது.

  * முதன்மை வர்த்தகர்கள் (மு.வ.) மற்றும் ஏனைய சந்தை இடையீட்டாளர்களை கம்பனிகள் கடன் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டது. (8 மு.வ. ஏற்கனவே கொ.ப.ப. இல் கடனுக்கான வர்த்தக அங்கத்துவத்தினை பெற்றுள்ளார்கள்).
  * வழங்குனர்கள் இலகுவாக கம்பனிகள் முறிகள் சந்தையினை அணுகுவதற்கு வசதியளிக்கும்பொருட்டு வழங்கல் செயல்முறை மற்றும் கொ.ப.ப. இல் பட்டியலிடல் தேவைப்பாடுகள் என்பவை சீரமைக்கப்பட்டது.
  * கொ.ப.ப. அங்கத்துவர் விதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள இ.பி.ப.ஆ. தகமைக் கட்டமைப்பு உள்ளடங்களாக கம்பனிகள் கடன் பிணையங்களில் தரகு மற்றும் வர்த்தகத்திற்கான தகுதி வரைகூறுகள் நிறைவுசெய்யப்பட்டன.
  * கொ.ப.ப. இல் கம்பனிகள் கடன் பிணையங்களுக்கான வர்த்தகம் மற்றும் அறிக்கையிடல் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதன் அவசியம் நிறுவப்பட்டதுடன் அதற்கான தரமுயர்த்தல்கள் நடந்தவண்ணமுள்ளன.
  * கம்பனிகள் முறிகளுக்கான ஓர் துடிதுடிப்பான தீர்வக மற்றும் தீர்ப்பனவு முறையினை (மத்திய எதிர் தரப்பினர் கட்டமைப்பு) நிறுவுதல்
  * வழங்குனர்கள் ஆகக்குறைந்த விண்ணப்ப எல்லையாக ரூபா 1 மில்லியன் அல்லது அதற்குமேல் என்பதை சுமத்தியதனால் ஓர் ஆகக்குறைந்த விண்ணப்ப எல்லையாக ரூபா 10,000 அமுல்படுத்தப்பட்டது. இது கம்பனிகள் முறிகள் சந்தையில் காணப்படும் வரி விலக்களிப்பு நன்மைகள் சிற்றளவு பங்குபற்றுனர்களுக்கும் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்டது.
  * இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் விழிப்புணர்வினைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் அதிகளவு கம்பனி முறிகள் சந்தைத் தகவல்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.
  * இரண்டாந்தரச் சந்தை திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காக எதிர்தரப்பினரிடையே கம்பனி முறிகளில் மீள்கொள்வனவினை இயலுமைப்படுத்தியது.

- வழங்கல் முன்விவரணக்கோவையில் பொதுவான வெளிப்படுத்தல் அச்சுருவினை ஒன்றிணைத்தல்.

- துறைசார் உள்ளீடுகள் ஒன்றிணைக்கப்பட்டு வழங்கல் முன்விவரணக்கோவையில் தரப்படுத்தல் காரணவிளக்கத்தில் உள்ளடக்கப்படவேண்டிய வரைகூறுகள் முடிவுறுத்தப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் அமுல்படுத்தப்படும்.

- ஒட்டுமொத்த கம்பனி முறிகள் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்பாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு மேற்கொண்ட பிரதிநிதித்துவத்தினூடாக பட்டியலிடப்படா கம்பனி முறிகளது வழங்கல்கள் தொடர்பான தகவல்களை பிரசுரிப்பதற்கு இயலுமைப்படுத்தியது.

  * இதற்கமைய, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் தாக்கல் செய்யப்படும் பட்டியலிடப்படா கம்பனி முறிகள் வழங்கல்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய படிவம் 6 இன் பிரதிகள் அந்தந்த பட்டியலிடப்படா கடன் வழங்குனர்களினால், ரூபா 100 மில்லியனுக்கு அதிகமான வழங்கல்களுக்கு, பகிரங்கமாக வெளிப்படுத்தல்வேண்டும்.

### புதிய நிதியங்களை கவருதல் (உள்ளூர் மற்றும் வெளியூர்)

- நாட்டினுள் வெளிநாட்டு முதலீட்டுத்தேக்க முதலீடுகளை கவரும் முயற்சியாக மூலதனச் சந்தை வாய்ப்புகளை காட்சிப்படுத்தும் பொருட்டு இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் கூட்டுமுயற்சியாக 2014 ஆம் ஆண்டில் பல வெளிநாட்டு பயண இலக்குகளில் முதலீட்டாளர் மன்றங்களை நடாத்தியது.

### சிங்கப்பூர் முதலீட்டாளர் மன்றம் மற்றும் முன் நிகழ்வு

- சிங்கப்பூர் இலங்கை வணிக சங்கத்தின் கூட்டுமுயற்சியுடன் 2014 ஜனவரி 20 இல் டவர் கிளப், ரவல்ஸ் பிளேஸ், சிங்கப்பூரில் முதலீட்டாளர் மன்ற முன்நிகழ்வு இடம்பெற்றது. 41 இலங்கையர்கள் மற்றும் 38 இலங்கையரல்லாதோர் உள்ளடங்களாக மொத்தமாக 79 பங்குபற்றுனர்கள் இந்நிகழ்வில் சமூகமளித்திருந்தார்கள்.

- சிங்கப்பூர் முதலீட்டாளர் மன்றமானது ரிட்ஸ் கால்டன் ஹோட்டல், சிங்கப்பூரில் 2014 ஜனவரி 21 இல் இடம்பெற்றது. பதிவுசெய்த 214 நபர்களில் நிதி முகாமையாளர்கள், முதலீட்டு வங்கியாளர்கள், முதலீட்டு ஆய்வாளர்கள் மற்றும் உயர் மதிப்புடைய தனிநபர்கள் உள்ளடங்களாக 187 பேர் சமூகமளித்திருந்தார்கள்.

### இலண்டன் முதலீட்டாளர் மன்றம் மற்றும் உயர் ஸ்தானிகராலய நிகழ்வு இலண்டன் முதலீட்டாளர் மன்றம்

- இலண்டன் பங்குப் பரிவர்த்தனை மற்றும் புளூம்பேர்க் உடன் ஒன்றிணைந்து இலண்டன் முதலீட்டாளர் மன்றம் 2014 மே 30 இல் சவோய், இலண்டனில் இடம்பெற்றது. பதிவுசெய்த 152 நபர்களில், ஐக்கிய இராச்சிய நிதி முகாமையாளர்கள், முதலீட்டு வங்கியாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள்

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

உள்ளடங்களாக மொத்தம் 138 பேர் சமூகமளித்திருந்தார்கள். நிகழ்வுக்கு முன்னதாக இலண்டன் பங்குப் பரிவர்த்தனையில் சந்தை திறப்பு சடங்கில் உத்தியோகபூர்வ இலங்கைப் பிரதிநிதிகள் பங்குபற்றினார்கள்.

### உயர் ஸ்தானிகராலய நிகழ்வு

- பிரதான நிகழ்விற்கு முன்னைய தினமான 2014 மே 29 இல் உயர் ஸ்தானிகராலய வளாகத்தில் பிரித்தானிய பூர்வீகத்தைக் கொண்ட அபிப்பிராய தலைவர்களுக்கான வலையமைப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரித்தானிய பூர்வீகத்தைக் கொண்ட 40 அபிப்பிராய தலைவர்கள் சமூகமளித்திருந்தார்கள்.

### நியூ யோர்க் முதலீட்டாளர் மன்றம் மற்றும் நியூ யோர்க் பங்குப் பரிவர்த்தனைக்கு விஜயம்

*நியூ யோர்க் முதலீட்டாளர் மன்றம்*

- அமெரிக்க வர்த்தகச் சம்மேளனம் **(AMCHAM),** புளூம்பேர்க், வாஷிங்டன் டி.சி. இலிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் ஒன்றிணைந்து இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. 2014 செப்டம்பர் 04 இல் ஜே.டபிள்யு, மெரியட் எசெக்ஸ் ஹவுஸ் ஹோட்டல், நியூ யோர்க்கில் "இன்வெஸ்ட் ஸ்ரீலங்கா" என்ற முதலீட்டாளர் மன்றமானது வெற்றிகரமாக இடம்பெற்றது. பதிவுசெய்த 194 நபர்களில், நிதி முகாமையாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் உயர் மதிப்புடைய தனிநபர்கள் உள்ளடங்களாக மொத்தம் 146 பேர் சமூகமளித்திருந்தார்கள்.

### மூலதனச் சந்தை கருத்தரங்கு - கொழும்பு, ஸ்ரீலங்கா

- இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் கூட்டிணைந்து 2014 ஒக்டோபர் 09 இல் சினமன் லேக்சைட், கொழும்பில் மூலதனச் சந்தை கருத்தரங்கினை வெற்றிகரமாக விருந்தோம்பியது.
- கருத்தரங்கிற்கு பதிவுசெய்த 85 நபர்களில், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சலாந்து, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பாக்கிஷ்தான், ஹொங் கொங், நெதர்லாந்து, துபாய், பஹ்ரேன், ஜப்பான், மாலைதீவு மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து 71 சர்வதேச நிதி முகாமையாளர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றார்கள்.

### முதலீட்டாளர் மன்றங்களின் பின்னரான வெளிநாட்டு வர்த்தகப் பாய்ச்சல்களின் அசைவிலான பகுப்பாய்வு

- சர்வதேச மன்றங்களை விருந்தோம்பியதன் பின்னர் கொ.ப.ப. இடமிருந்து தரவுகள் பெறப்பட்டு வெளிநாட்டு வர்த்தக பாய்ச்சல்களின் அசைவினை மதிப்பிடுவதற்காக பகுத்தாய்வு செய்யப்பட்டது. முதலீட்டாளர் மன்றங்கள் இடம்பெற்ற நாடுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு அதிகரித்த வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கை மட்டங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் கணிசமான அளவு புதிய ம.வை.தி. கணக்குகள் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (உருவம் 21)

உருவம் 21: முதலீட்டாளர் மன்றங்களின் பின்னரான கொ.ப.ப. இல் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள்

| தேசம் | தேறிய பாய்ச்சல் (ரூ.மில்.) 2013 மற்றும் 2014 | | புதிய கணக்குகளின் எண்ணிக்கை - 2014 | புதிய கணக்குகளிலிருந்து தேறிய பாய்ச்சல்கள் (ரூ.மில்.) - 2014 |
|---|---|---|---|---|
| | 2013 | 2014 | | |
| இந்தியா | (106.7) | **218.7** | **24** | **268.5** |
| ஐ.அரபு இராச்சியம் | (134.9) | **43.0** | **7** | **43.8** |
| ஹொங் கொங் | (175.0) | **25.7** | **3** | **-** |
| சிங்கப்பூர் | (2,054.4) | **4,984.8** | **18** | **6,385.6** |
| ஐக்கிய இராச்சியம் | 101.0 | **4,332.6** | **27** | **451.6** |
| ஐக்கிய அமெரிக்கா | 2,308.9 | **7,078.6** | **27** | **62.6** |

*மூலம்: கொ.ப.ப.*

### ஓர் முழுமையான சந்தைப்படுத்தல் பிரச்சாரத்திற்கு வசதியளித்தமை

- இலங்கையின் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி சங்கத்தினால் (ந.அ.பொ.ச.) நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறைக்கான ஓர் நிலைநிறுத்தக்கூடிய சந்தைப்படுத்தல் பிரச்சாரத்திற்கான நிதி உதவி வேண்டுதலின் பிரகாரம், விழிப்புணர்வினைக் கட்டியெழுப்பும் பிரச்சாரத்திற்கான ஓர் செலவினத் திட்ட அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு இ.பி.ப.ஆ. ந.அ.பொ.ச.இனை பணித்தது.
- ந.அ.பொ.ச. இனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தரப்பானது பிரச்சார திட்ட அறிக்கையில் ஆணைக்குழுவிற்கு ஓர் காட்சியளிப்பினை மேற்கொண்டதுடன் ந.அ.பொ.ச.இனால் செலவினத் திட்ட அறிக்கையானது ஆணைக்குழுவின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- பின்னர், கொ.ப.ப. உடன் கூட்டிணைந்த முற்றான சந்தையை உள்ளடக்குவதற்காக விளம்பர பிரச்சாரத்தின் வரையெல்லையினை விரிவாக்குவதற்கு ஓர் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.
- இதன் பின்னர் கொ.ப.ப. எட்டு விளம்பர முகவர்களிடமிருந்த பிரேரணைகளைக் கோரி இப்பிரேரணையை மதிப்பிடுவதற்கு அனைத்து பங்காளிகளையும் உள்ளடக்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டது.
- விபரமான மதிப்பீடுகளின் பின்னர் பேட்ஸ் ஸ்ட்ரஜிக் எலாயன்ஸ் இனால் ஓர் மெய்நிலை நிகழ்ச்சி எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்ட பிரேரணையானது மூலதனச் சந்தையில் விழிப்புணர்வினை கட்டியெழுப்புவதற்கு மிகவும் உகந்தது என நிறைவேற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## ஓர் பங்குச் சந்தை ஒப்புருவாக்கி மற்றும் விளையாட்டு தலைவாசல் நிறைவேற்றுவதற்கு வசதியளித்தல்

- ஓர் முற்றுமுழுதான பங்குச் சந்தை ஒப்புருவாக்கி மற்றும் விளையாட்டு தலைவாசல் நிறைவேற்றுவதற்காக ஓர் ஆர்வ வெளிப்பாடு முடிவுறுத்தப்பட்டு பிரேரணைகள் கோரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. இதற்கு 5 பதில்கள் கிடைக்கப்பெற்றன.
- இத்தேவைக்காக பிரேரணைக்கான வேண்டுகோள் முடிவுறுத்தப்பட்டு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.
- தேசிய கொள்முதல் முகவர் வழிகாட்டிகளுக்கமைய இத்திட்டத்தினை மேலும் தொடர்வதற்கு கொள்முதல் ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

## புதிய கருவிகளின் அறிமுகம்

நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்கள் நலனைக் கருத்திற்கொண்டு இ.பி.ப.ஆ. புதிய முதலீட்டுக் கருவிகளது அறிமுகம் மற்றும் கருவிகளது வீச்சினை பன்முகப்படுத்தல் ஆகியவற்றுக்கு வசதியளிக்கும்பொருட்டு ஓர் பொருத்தமான கொள்கை வடிவமைப்பினை அபிவிருத்தி செய்வதில் முனைப்பு செலுத்தியது. இதன்காரணமாக இ.பி.ப.ஆ. நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறையில் டொலர் முறி நிதியங்களது அறிமுகத்திற்கு வெற்றிகரமாக வசதியளித்தது. இதுவே மூலதனச் சந்தையில் வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்ட முதலாவது முதலீட்டுக் கருவியாகும்.

உரிமமளிக்கப்பட்ட நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனியான சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் எனும் நிறுவனமே டொலர் முறி நிதியத்தினை அறிமுகம் செய்த முதலாவது சந்தைப் பங்குபற்றுனராகும். வெளிநாட்டு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட அமெரிக்க டொலர்களில் மதிப்பிடப்பட்ட இலங்கை அரசாங்கப் பிணையங்கள், இலங்கையின் வர்த்தக வங்கிகள் மற்றும் அரசடைமை நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அமெரிக்க டொலர் மதிப்பிடப்பட்ட பிணையங்கள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளில் அமெரிக்க டொலர்களிலான வைப்புகள் என்பவற்றில் முதலிடுவதற்கு இந்நிதியத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

## பட்டியலிடுவதன் நன்மைகள் பற்றி விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இனது உள்ளீடுகளுடன் கொ.ப.ப. இல் பட்டியலிடுவதன் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக 147 வணிக நிறுவனங்களின் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடல்களை உருவாக்கியது. தனித்தன்மை வாய்ந்த பிரசுரமான “பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடுவதற்கான வழிகாட்டி” என்பதை உருவாக்குவதற்கு இ.பி.ப.ஆ. கொ.ப.ப. க்கு துணைபுரிந்தது. இதன் சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பும் நிறைவுற்றுள்ளது. மீளாய்வாண்டில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக பின்வரும் பட்டியலிடல் மன்றங்கள் நடாத்தப்பட்டன.

- தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு மூலதனச் சந்தை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக இலங்கை மென்பொருள் மற்றும் சேவைக் கம்பனிகளது சங்கத்திற்கான மன்றம்.
- கண்டியில் தொழில்முயற்சியாளர்களுக்கான மன்றம்.
- சிறிய மத்திய நிறுவன பலகையினை உருவாக்குவதற்கான சாத்தியப்பாட்டினை மதிப்பிடுவதற்காக தேசிய வர்த்தக சம்மேளனம், கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தொழில் முயற்சியாளர்களுக்கு மன்றங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.
- அநுராதபுர மாவட்டத்திலுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கான மன்றம்.
- பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்துடன் கூட்டாக ‘குடும்ப உரித்துவ வணிக மன்றம்’ நடாத்தப்பட்டது.

## ஏனைய மூலதனச் சந்தை முன்னெடுப்புகள்

- பட்டியலிடப்பட்ட நிறுவனங்களது நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதியிடல்களை மதிப்பிடுவதற்கான சாத்தியப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான முன்னெடுப்பினை இ.பி.ப.ஆ. மேற்கொண்டது. இது இ.பி.ப.ஆ. இவ்விடயங்களை மேலும் கூர்ந்து ஆராய்வதற்காக நிபுணர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு வசதியளிக்கும். ஓர் பொருத்தமான பொறிமுறையினை நிறுவுவதற்காக பங்காளிகளது கருத்துக்களை பெறும் நோக்கில் பொது ஆலோசனைகள் நிறைவுபெற்றன.
- மூலதனச் சந்தையில் கிடைக்கப்பெறும் முதலீட்டுத் தெரிவுகளை விரிவுபடுத்துவதற்காக நிலைச்சொத்து முதலீட்டு நம்பிக்கை நிதியங்கள் (நி.மு.ந.நி.) இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது. இலங்கையில் நி.மு.ந.நி. இனை அங்குரார்ப்பணம் செய்வதற்கான வழிகாட்டிகளை வரைவதனை இ.பி.ப.ஆ. நிறைவுபடுத்தியது. இது நடைமுறையிலுள்ள உள்ளூர் சந்தைக்கான தேவைப்பாடுகளுக்கு இணங்கும் அதேவேளை நிலைச்சொத்து முதலீட்டு நம்பிக்கை நிதியங்களுக்கான கருத்தாக்கப் பத்திரிகையும் தொகுக்கப்பட்டது.
- சிற்றளவு முதலீட்டாளர்களது அக்கறைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மற்றும் அவர்களது உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாப்பதற்காக ஓர் சிற்றளவு முதலீட்டாளர்கள் சங்கம் ஒன்றை நிறுவுவதற்கான சாத்தியம் மதிப்பிடப்பட்டது. இது தொடர்பான பொதுமக்களது ஆலோசனை நிறைவுற்றது.
- இலங்கையின் மூலதனச் சந்தைக்கான ஆகக்குறைந்த பொதுப் புழக்கத்தின் அறிமுகத்துடன் பிரதான பலகையிலிருந்து திரிசவி பலகைக்கு இடம்பெயர்வதற்கு கட்டமைப்பிலான மாற்றங்களுக்கு, இவை நிறுவனங்கள் பட்டியலிடப்பட்டுள்ள ‘பலகைகளில்’ சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக, வசதியளிக்கப்பட்டது.

## செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (இ.ப.க.நி.) மற்றும் பங்குபற்றும் ஏனைய பங்காளி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கூட்டாக முன்னெடுக்கப்பட்ட 'இலங்கையின் பெறுமதியிடல் வழிகாட்டிகள்' எனும் தலைப்பிலான பிரசுரத்திற்கு இ.பி.ப.ஆ. பங்களிப்பாற்றியது. இப்பிரசுராமானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிப்படுத்தல்களை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- பட்டியலிடப்பட்ட நிறுவனங்களது ஆளுகையினை தெரிந்துகொள்வதற்காக இ.ப.க.நி. உடன் சேர்ந்து 'கூட்டாண்மை ஆளுகை மதிப்பெண் அட்டை' ஒன்றினை உருவாக்குவதற்கான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. பட்டியலிடப்பட்ட கம்பனிகள் அளவை மட்டக்குறி கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளை வெளிப்படுத்துவதை தெரிந்துகொள்வதற்காக பொருத்தமான ஒரு பொறிமுறையினை உருவாக்குவதற்கான முன்னெடுப்பானது செயல்முறையிலுள்ளது.

- மூலதனச் சந்தை முறைமைப்படுத்தல் கட்டமைப்பினது பிரயோகிக்கப்படும் வரையெல்லையானது தயாரிக்கப்பட்டது. இது இ.ம.வ. இனால் முன்னெடுக்கப்பட்ட நிதியியல் துறை ஒருங்கிணைப்புடன் அமைவுறும் தேவைப்பாட்டினைக் கொண்டுள்ள பங்காளிகளிடையே தெளிவினை உருவாக்குவதற்காக தயாரிக்கப்பட்டது. இம்முன்னெடுப்பானது ஓர் சீரான மாறுதலுக்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- காப்புறுதி நிறுவனங்களை தனிப்படுத்துவதற்காக இலங்கை காப்புறுதிச் சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள முறைமைப்படுத்தல் முன்னெடுப்புகளுக்கு வசதியளிக்கும்பொருட்டு பட்டியலிடப்பட்டுள்ள காப்புறுதி நிறுவனங்களுக்கு பொருந்துகின்ற முறைமைப்படுத்தல் கட்டமைப்பானது, தனிப்படுத்த முன்னர் மற்றும் பின்னர் எழும் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு ஓர் சீரான மாறுதலுக்கு, தயாரிக்கப்பட்டது.

- பட்டியலிடப்பட்ட நிறுவனங்களது கணக்காய்வாளர்கள் முக்கியமாக நிதிக்கூற்றுக்களில் அவர்கள் தெரிவிக்கும் கருத்தானது முக்கிய பங்கு வகிக்கின்றது. இ.பி.ப.ஆ. சில பட்டியலிடப்பட்ட நிறுவனங்களது கணக்காய்வாளர்களது நடத்தை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்வதற்காக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபைக்கு அறியப்படுத்தியது.

- சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி (சி.இ.வை.) தொடர்பான விடயங்களை இ.பி.ப.ஆ. இ.ம.வ. உடன் உத்தியோகபூர்வ தொடர்பாடல்களை மேற்கொண்டது. கொ.ப.ப. இல் சி.இ.வை ஓர் பட்டியலிடப்பட்ட நிறுவனம் என்ற விதத்தில் சி.இ.வை. இன் தற்போதைய நிலைமையின் நிமித்தம் மூலதனச் சந்தை தொடர்பான சாத்தியப்படக்கூடிய தாக்கம் மற்றும் அக்கறைகள் சுட்டிக்காட்டப்பட்டு இ.ம.வ. இன் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

- பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு கட்புலன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை வழங்குவதற்காக ஓர் சுயாதீன உரித்துடைமை பகுப்பாய்வு செயலெல்லைத் திட்டத்தினை இயலுமைப்படுத்தியது. எஸ். அன்ட் பி. எஸ்.எல். 20 சுட்டியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள 16 பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் சுயாதீன பகுப்பாய்வு செயலெல்லையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது கொ.ப.ப. இன் இணையத்தளத்தில் பொதுமக்களினால் இலவசமாக அணுகத்தக்கதாகும்.

### இ.பி.ப.ஆ. னால் மேற்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவம்

- மூலதனச் சந்தையூடாக சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதியளிப்பிற்கு வசதியளிக்கும்பொருட்டு இ.பி.ப.ஆ. நிதி அமைச்சிற்கு வரவு செலவுத் திட்ட பிரேரணைகளை சமர்ப்பித்தது. இதற்கும் மேலாக, இறைவரித் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து அனைத்து கைத்தொழில் துறைக்கும் வரிச் சலுகைகளை 2017 ஆம் ஆண்டுவரை நீடிக்கும்படி நிதி அமைச்சிற்கு ஓர் பிரேரணை மேற்கொள்ளப்பட்டது.

- "முன்மொழியப்பட்ட நிலம் அந்நியப்படுத்தல் மசோதா" இன் காரணமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் ஏற்படக்கூடிய தாக்கம் தொடர்பில் நிதி அமைச்சிற்கு குறிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

- ஏனைய பங்குபற்றும் நியாயாதிக்கங்களிடையே மூலதனச் சநதையின் தோற்றுருவத்தினை மேம்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வணிகம் செய்தல் தரப்படுத்தல் குழுவுக்கு குறிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்சி

இ.பி.ப.ஆ. இன் மூலதனச் சந்தைக் கல்வி மற்றும் பயிற்றுவித்தல் அங்கமானது சந்தைப் பங்குபற்றுனர்களுக்கு பொருத்தமான திறமை மற்றும் அறிவு ஆகியவற்றில் அவர்களது தொழில்சார் நியமங்களை உயர்த்துவதற்காக தொடர்ந்தும் ஓர் முக்கியமான பங்கினை வகித்தது. இதற்கும் மேலாக, தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் உரிமமளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர்கள் புதுமையைத் தழுவி வெளித்தோன்றும் அபிவிருத்திகளுடன் பின்தங்காது காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. (உருவம் 22, 23)

## மூலதனச் சந்தையில் சான்றிதல் (மூ.ச.சா.)

உருவம் 22: மூ.ச.சா. பரீட்சைகளின் புள்ளிவிபரச் சுருக்கம் : 2014

| மொழி மூலம் | பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்கள் (எண்ணிக்கை) | உரித்துடைமை தொடரை நிறைவு செய்தவர்கள் (எண்ணிக்கை) | கடன் தொடரை நிறைவு செய்தவர்கள் (எண்ணிக்கை) | பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறையை நிறைவு செய்தவர்கள் (எண்ணிக்கை) | மூ.ச.சா. நிறைவு செய்தவர்கள் (எண்ணிக்கை) | பதிவு செய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் நிறைவு செய்தவர்கள் (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|---|---|
| சிங்களம் | 74 | 14 | 17 | 13 | 18 | 18 |
| ஆங்கிலம் | 131 | 32 | 32 | 42 | 44 | 23 |
| மொத்தம் | 205 | 46 | 49 | 55 | 62 | 41 |

உருவம் 23: மூ.ச.சா. மற்றும் ப.மு.ஆ. க்கு நடாத்தப்பட்ட பரீட்சைகளின் விஷயச் சுருக்கம்

| நிகழ்ச்சித்திட்டம் | தொடர் | வருடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | சித்தி % |
|---|---|---|---|
| மூலதனச் சந்தைச் சான்றிதழ் தொடர் (சிங்கள மொழி) | உரித்துடைமைத் தொடர் | 2 | 51 |
| | கடன் தொடர் | 2 | 68 |
| | பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறை | 2 | 59 |
| மூலதனச் சந்தைச் சான்றிதழ் தொடர் (ஆங்கில மொழி) | உரித்துடைமைத் தொடர் | 4 | 60 |
| | கடன் தொடர் | 4 | 75 |
| | பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறை | 4 | 67 |
| பதிவிடப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (சிங்கள மொழி) | பொருத்தமற்றது | 9 | 72 |
| பதிவிடப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ஆங்கில மொழி) | பொருத்தமற்றது | 9 | 77 |

## மூலதனச் சந்தையில் டிப்ளோமா (மூ.ச.டி.)

இ.பி.ப.ஆ. ஐக்கிய இராச்சியத்தின் பிணையங்கள் மற்றும் முதலீடுகள் பட்டய நிறுவகத்துடன் கூட்டிணைந்து மூ.ச.டி. நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்தது. மீளாய்வுக் காலப்பகுதியில் இரண்டு தொடர்களுக்கான விரிவுரைகள் நிறைவு செய்யப்பட்டன.

## தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (தொ.தொ.அ.)

மீளாய்வாண்டில், உள்ளூர் மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தைகளில் நவீன போக்குகளுடன் தங்களை நிகழ்வரையாக்கிக்கொள்வதற்கும் தொடர்ந்தும் மதிப்பிடுவதற்கும் வசதியளிப்பதற்காக மூலதனச் சந்தையில் தற்போதுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்கு 6 வடிவமைக்கப்பட்ட தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பங்குத்தரகுக் கம்பனிகளின் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் துறைசார் தொழில்வல்லுனர்கள் உள்ளடங்களாக 690 க்கும் அதிகமான பங்குபற்றுனர்களை கவர்ந்தது. நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் அவர்களது வர்த்தக உரிமத்தினைப் புதுப்பிப்பதற்காக ஆகக் குறைந்தது 2 தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றவேண்டும் என இ.பி.ப.ஆ. கட்டாயமாக்கியுள்ளது. (உருவம் 24)

உருவம் 24: 2014 இல் நடாத்தப்பட்ட தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்




நிகழ்ச்சியின் தலைப்புகள்

- இலங்கையின் கடன் சந்தையில் சமீபத்தைய அபிவிருத்திகள்
- மூலதனச் சந்தை தவறுகள்
- நிதியியல் நுண்ணறிவு அலகின் பங்கு மற்றும் உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்துகொள் தேவைப்பாடுகள்
- இலங்கை எதிர் பிராந்திய, வெளித்தோன்றும் மற்றும் எல்லைப்புறச் சந்தைகள்: ஒப்பீடு மற்றும் வேறுபாடு
- பொருளாதார அபிவிருத்தியில் கடன் சந்தையின் தாக்கம்
- உறவுமுறை விற்பனை

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டம்

பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தை தொடர்பான பாடங்களைப் பல்கலைக்கழக மாணவர்கள் கற்பதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டத்தினை இ.பி.ப.ஆ. தொடர்ந்தது. இத்திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தைப் பிரிவுகளில் மிகச்சிறந்து விளங்கும் பல்கலைக்கழக மாணவனுக்கு தங்கப் பதக்கம் மற்றும் பணப் பரிசு வழங்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட திட்டம் தொடர்பாக பதினொரு (11) பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (பு.ஒ.) கைச்சாத்திடப்பட்டன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைகழகங்களிலிருந்து பத்து பல்கழைக்கழக மாணவர்களுக்கு மீளாய்வாண்டில் தங்கப் பதக்கங்கள் மற்றும் பணப் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன.

- களனிப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம்
- ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- இலங்கையின் ரஜரட்ட பல்கலைக்கழகம்
- ருஹுணு பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- இலங்கையின் சபரகமுவ பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம்

## நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

பங்கு வர்த்தகத்தின் அடிப்படை கொள்கை வழி மற்றும் நடைமுறைத் தோற்றம் ஆகியவற்றை வழங்கும் நோக்குடன் சாத்தியப்படக்கூடிய மற்றும் நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்களுக்கு நாம் 2 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தினோம். இந்த ஏழு கிழமை நிகழ்ச்சித்திட்டங்கள் மொத்தமாக 53 பங்குபற்றுனர்களைக் கவர்ந்தது.

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்

“நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்” 2014 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டமானது நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் ஊழியர்களுக்கான ஆகக் குறைந்த தகமையினை அறிமுகப்படுத்துவதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு 26 பங்குபற்றுனர்கள் பதிவு செய்தார்கள்.

## பணிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கும் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் ஆளுகையினை மேம்படுத்தும் நோக்கில் பணிப்பாளர்களுக்கு ஓர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. க்கும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்திற்கும் (இ.ப.க.நி.) இடையில் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான பாடத்திட்டமானது இ.ப.க.நி. இன் ஒத்துழைப்புடன் மூலதனச் சந்தையின் ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கும் வண்ணம் விருத்திசெய்யப்பட்டது. இ.பி.ப.ஆ. மற்றும் இ.ப.க.நி. ஆகியவற்றினால் கூட்டாக விருத்திசெய்யப்பட்ட கூட்டாண்மை ஆளுகை நியமத்தினை இந்நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கும் இலங்கைப் பணிப்பாளர்கள் நிறுவகத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

கம்பனியின் பணிப்பாளர்களுக்கு பிணையங்கள் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளில் பயிற்சியினை வழங்குவதற்காக இ.பி.ப.ஆ. க்கும் இலங்கைப் பணிப்பாளர்கள் நிறுவகத்திற்கும் இடையே ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது. அத்துடன் இலங்கையின் மூலதனச் சந்தையுடன் தொடர்புடைய விடயங்களில் அவர்களது கடப்பாடுகள் பற்றி பணிப்பாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக உருவாக்கப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது, தொடர்புடைய தரப்பினரது கொடுக்கல் வாங்கல்கள், பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள், உள்ளுறைபவர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கடப்பாடுகளை உள்ளடக்கியது. அத்துடன் இது மேலதிகமாக, நடைமுறையிலுள்ள பணிப்பாளர்கள் மற்றும் பணிப்பாளர்களாக விரும்புவோர் அவர்களது தொழில்சார் தேவைகளுக்கு வசதியளிக்கும் ஓர் வழிமுறையினை பின்வருவனவற்றினூடாக வழங்குகின்றது. சிறந்த நடைமுறைகளிலான விழிப்புணர்வு, கற்றல் மற்றும் அபிவிருத்தி மற்றும் ஒத்த தலையீடுகள் மற்றும் சபைக்கூட்ட ஆளுகையில் விசேட திறமைகளை ஊக்குவித்தல் என்பனவாகும்.

### மூலதனச் சந்தை விழிப்புணர்வு

முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இ.பி.ப.ஆ.க்கு ஆணையளிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைவதற்காக நாம் பின்வருவனவற்றை உள்ளடக்கிய விரிவான முதலீட்டாளர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்கின்றோம். மூலதனச் சந்தையில் முதலீடு செய்யும்போது அதனுடன் ஒன்றிணைந்த நன்மைகள் மற்றும் இடர்நேர்கைகள் பற்றிய முதலீட்டாளர் விழிப்புணர்வினை எழுப்புதல், தகவலறிந்த முதலீட்டுத் தெரிவுகளை

மேற்கொள்வதற்கு தேவையான திறமைகள், அறிவு மற்றும் சாதனங்களை முதலீட்டாளர்களுக்கு வழங்குதல் என்பனவாகும். எமது முதலீட்டாளர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் பல்வேறு தரப்பட்ட முதலீட்டுப் பிரிவினருக்காகவும் மற்றும் ஆகப்பரந்தளவிலான அவையினரை எட்டுவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. முதலீட்டாளர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும்போது நாம் எழுத்துமூல கட்டுரைகளை விநியோகித்தல், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் அச்சு மற்றும் இலத்திரணியல் ஊடகங்களுடன் தொடர்புவைத்திருத்தல் போன்ற முறைகளைக் பயன்படுத்துகிறோம்.

## இலத்திரணியல் ஊடகத்தினூடான விழிப்புணர்வு

### மூலதன உருவாக்கத்தில் "பொதுக் கம்பனியாதல்" எனும் தொலைக்காட்சித் தொடர்

13 நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய "பொதுக் கம்பனியாதல்" என்று தலைப்பிடப்பட்ட முதலாவது ஒரு மணித்தியால ஒளிப்பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டமானது 2014 பெப்ரவரி முதல் மே மாதம் வரை ஞாயிற்றுக் கிழமைகளில் முற்பகல் 10.00 மணிக்கு ஒளிபரப்பப்பட்டது. இது கூட்டாண்மை துறை மற்றும் பட்டியலிடுவதற்கு சாத்தியமான கம்பனிகளின் உயர்ந்த வணிக நிறைவேற்றுனர்களை கொ.ப.ப. இல் பட்டியலிடுவது பற்றி கற்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகியோரின் கூட்டு முயற்சியான இத்தொடர் பட்டியலிடுவதுடன் இணைந்துள்ள நலன்கள் மற்றும் பழங்கதைகள் பற்றிய கலையகக் கலந்துரையாடல்கள், பட்டியலிடப்பட்ட கம்பனிகளது வெற்றிகரமான சாதனைகள், முதலீட்டு வங்கிகளின் பங்களிப்பு, பட்டியலிடல் செயல்முறை, தேவைப்பாடுகள் மற்றும் ஆளுகை கரிசனைகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. இத்தொடரின் மறு ஒளிபரப்பானது செவ்வாய்க் கிழமைகளில் இரவு 8.00 மணிக்கும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10.00 மணிக்கும் ஒளிபரப்பப்பட்டது.

### "ஆயோஜன" வானொலி நிகழ்ச்சித்திட்டம்

மே 2014 முதல் ஆகஸ்ட் 2014 வரை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு லக்ஹண்ட வானொலியில் 18 நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய "ஆயோஜன" என்று தலைப்பிடப்பட்ட ஓர் நேரடி கலந்துரையாடலுக்கு இ.பி.ப.ஆ. வசதியளித்தது. இத்தொடரானது மூலதனச் சந்தையில் பல்வேறு தோற்றங்களில் முதலீடு செய்வது பற்றிய கலந்துரையாடல்களை உள்ளடக்கியதுடன் முதலீட்டாளரது கல்வித்தரத்தை மேம்படுத்தி முதலீட்டாளர்களது தளத்தினை விருத்திசெய்யும் நோக்கத்திற்காகவும் ஒலிபரப்பப்பட்டது. இத்தொடரானது சேமிப்பு மற்றும் முதலீடுகளது தோற்றத்தையும், பங்குத்தரகரின் பங்களிப்பு, முதலீட்டாளர் பாதுகாப்பு, முதன்மைச் சந்தை மற்றும் இரண்டாந்தரச் சந்தைகளில் எவ்வாறு பங்குகளைக் கொள்வனவு செய்வது என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. 1998 இற்கு பின்னர் மூலதனச் சந்தையில் ஒலிபரப்பப்பட்ட முதலாவது வானொலித் தொடர் "ஆயோஜன" ஆகும்.

இக்கலந்துரையாடல் நிகழ்ச்சியில் நாம் வாராந்தப் புதிர் ஒன்றை நடாத்தியதுடன் வெற்றியாளர் தனது பரிசுத் தொகையை மூலதனச் சந்தையில் முதலீடு செய்வதனை உறுதிசெய்வதற்கான ஒரு பொறிமுறையினை விருத்திசெய்தோம்.

### "தண்ணோ திணண்ணோ" மெய்நிலை புதிர் நிகழ்ச்சித்திட்டம்

இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஒன்றிணைந்து சிரச தொலைக்காட்சிச் சேவையில் "தண்ணோ "திணண்ணோ" என்ற தலைப்பிட்ட தொலைக்காட்சி புதிர் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடாத்தியது. இது பங்குச் சந்தை மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் ஆகியவற்றில் முதலிடுவதில் பரந்த அறிவினைப் பரப்புவதற்காக 12 நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கியது. இந்நிகழ்ச்சியானது ஆகஸ்ட் 2014 முதல் நவம்பர் 2014 வரை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் முற்பகல் 11.00 மணிக்கு ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியானது மூலதனச் சந்தையில் நடாத்தப்பட்ட முதலாவது மெய்நிலை புதிராவதுடன் இது இந்த நேரப் பட்டையில் தரப்படுத்தப்பட்ட சிறந்த நிகழ்ச்சியாகவும் காணப்பட்டது. இதன்பின்னர், இதே நேரப் பட்டையில் இந்நிகழ்ச்சியின் மறு ஒளிபரப்பு நடாத்தப்பட்டதுடன் "தண்ணோ திணண்ணோ" நிகழ்ச்சித் தொடரின் இன்னுமோர் மறு ஒளிபரப்பானது புதன்கிழமைகளில் இரவு 10.45 மணிக்கு ஒளிபரப்பப்பட்டது.

இதற்கும் மேலாக நிகழ்ச்சியின்போது கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடையளிக்கப்படுமாயின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பார்வையாளர்களுக்கு பணப் பரிசில்களை வெல்லக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டது. வாராந்த புதிர் நிகழ்ச்சியானது 30,000 க்கும் அதிகமான பதில்களை உருவாக்கியது.

### அச்சு ஊடகத்தினூடான விழிப்புணர்வு

பொதுமக்களை சேமிப்பாளர்களிலிருந்து முதலீட்டாளர்களாக மாற்றுவதற்காக மற்றும் பொது மக்களிடையே நிதியியல் அறிவினைப் பரப்புவதற்காக நாம் அச்சு ஊடகத்துடன் ஒன்றிணைந்து மூன்று மொழிகளிலும் வழக்கமான அடிப்படையில் முதலீட்டாளர் கல்விக் கட்டுரைகளை பிரசுரித்தோம். இ.பி.ப.ஆ. மீளாய்வாண்டில் டெய்லி மிரர், அத, தினக்குரல் மற்றும் சேஞ் அன்ட் பிஸ்னஸ் எல்கே என்பவற்றில் மூலதனச் சந்தை தொடர்பான 250 க்கும் அதிகமான வாராந்த/மாதாந்த பத்திரிகை கட்டுரைகளைப் பிரசுரித்தது. வாராந்த / மாதாந்த கட்டுரைகளுக்கு அப்பால் ஏனைய பத்திரிகைகள் /சஞ்சிகைகள் ஆகியவற்றில் வழக்கமாக மூலதனச் சந்தையில் முதலிடுவதில் பிரத்தியேகமான கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையில் அடிக்கடி தொலைக்காட்சிப் பேட்டிகள் /வானொலிப் பேட்டிகள் என்பவற்றையும் நடாத்தியது.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## கருத்தரங்குகள் மற்றும் மன்றங்களூடான விழிப்புணர்வுகள்

### மூலதனச் சந்தைக் கருத்தரங்கு 2014

இ.பி.ப.ஆ., கொ.ப.ப. உடன் ஒன்றிணைந்து சினமன் லேக்சைட் ஹோட்டலில் 2014 ஒக்டோபர் 09 இல் அண்ணளவாக 400 உள்ளூர் மற்றும் வெளியூர் பங்குபற்றுனர்களுடன் ஓர் மூலதனச் சந்தை கருத்தரங்கினை நடாத்தியது. இலங்கையின் மூலதனச் சந்தையினது சாத்தியப்பாட்டினை கற்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் நிதிய முகாமையாளர்கள் மற்றும் உயர்ந்த பெறுமதி மிக்க முதலீட்டாளர்களுக்கு ஓர் சிறந்த வாய்ப்பு கிட்டியது. இந்த முக்கிய நிகழ்வுடன் ஒத்தாட்போல் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முறையே 6 பக்கங்கள் மற்றும் 16 பக்கங்களை உள்ளடக்கிய பத்திரிகை இணைப்புகள் பிரசுரிக்கப்பட்டன.

### ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆ.ப.பொ.ஒ.) நிதியியல் முறைமைப்படுத்துபவர்கள் பயிற்சி முன்னெடுப்பு (நி.மு.ப.மு.) வலியுறுத்தலில் பிராந்திய கருத்தரங்கு –மதிப்பிடல், திட்டமிடுதல் மற்றும் பேட்டிகாணல்

முறைமைப்படுத்துபவர்களிடையே ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவதற்காகவும் அறிவுப் பகிர்வினை மேம்படுத்துவதற்காகவும் இ.பி.ப.ஆ. ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆ.ப.பொ.ஒ.) நிதியியல் முறைமைப்படுத்துபவர்கள் பயிற்சி முன்னெடுப்பு (நி.மு.ப.மு.) உடன் ஒன்றிணைந்து 2014 மார்ச் 17 முதல் 2014 மார்ச் 24 வரை “வலியுறுத்தல் - மதிப்பிடல், திட்டமிடுதல் மற்றும் பேட்டிகாணல்” எனும் தலைப்பில் ஓர் கருத்தரங்கினை விருந்தோம்பியது.

இக்கருத்தரங்கானது பின்வரும் பரவலான தலைப்புகளை உள்ளடக்கியது:- விசாரணைத் திட்டங்களைத் தயாரித்தல், சந்தேகநபர்கள் மற்றும் சாட்சிகளுடன் தி.ஈ.பொ.நி.ம பேட்டி மாதிரியினைப் பயன்படுத்தி பேட்டிகளை நடாத்துதல் (திட்டமிடல் மற்றும் தயார்படுத்தல், ஈடுபடல் மற்றும் விளக்கமளித்தல், பொறுப்புக்கூறல், நிறைவு, மதிப்பிடல்), சந்தைக் கையாளுகை, விசாரணை திட்டமிடுதல் முதலியன.

உள்ளூர் முறைமைப்படுத்தல் நிறுவனங்களிலிருந்து பங்குபற்றுனர்கள் மற்றும் மலேஷியா, நேபாளம், நைஜீரியா, பிலிப்பைன்ஸ், தைப்பே, தாய்லாந்து, சீன மக்கள் குடியரசு, கம்போடியா, இந்தியா மற்றும் புருணாய் ஆகிய பிராந்திய பங்குபற்றுனர்களும் இக்கருத்தரங்கில் சமூகமளித்திருந்தார்கள்.

### முறைப்படுத்தல் இணக்கப்பாட்டு கருத்தரங்கு

இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் இணைந்து கூட்டாக பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளுக்கு மேற்கூறிய கருத்தரங்கினை நடாத்தியது. இது இ.பி.ப.ஆ. னால் சமீபத்தில் வழங்கப்பட்ட, தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடான ஆகக்குறைந்த பொது உரித்துவத்தினை பராமரித்தல், தொடர்புடைய தரப்பினரது கொடுக்கல் வாங்கலில் சிறந்த நடைமுறைக்கான நியமங்கள் மற்றும் பணிப்பாளர்களது பங்கு வர்த்தகத்தில் வெளிப்பாட்டு தேவைப்பாடுகள் தொடர்பான பணிப்புறுத்தல்களில் வழிகாட்டுவதற்காக ஒழுங்குசெய்யப்பட்டது. இம்மன்றத்தில் இலங்கையில் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 325 க்கும் அதிகமான அதிகாரிகள் பங்கேற்றார்கள்.

### சுயாதீன பணிப்பாளர்களுக்கான கருத்தரங்கு

சுயாதீன பணிப்பாளர்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் இணைந்து கூட்டாக இக்கருத்தரங்கினை நடாத்தியது. இந்நிகழ்ச்சித் திட்டமானது சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களிடையே அவர்களது பங்களிப்பின் முக்கியத்துவம் மற்றும் கூட்டாண்மை ஆளுகையினை மேம்படுத்தல் என்பவற்றில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக ஒழுங்குசெய்யப்பட்டது.

### யாழ்ப்பாண முதலீட்டாளர் மன்றம்

மூலதனச் சந்தையில் கிடைக்கக்கூடிய முதலீட்டு வாய்ப்புகளில் பொதுமக்களை கற்பிப்பதற்காக 2014 டிசம்பர் 06 இல் டில்கோ சிட்டி ஹோட்டலில் யாழ்ப்பாண முதலீட்டாளர் மன்றம் இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஒன்றிணைந்து ஒழுங்கு செய்தது. இந்த மன்றத்தில் பிரசித்திபெற்ற தொழில்வல்லுனர்கள், உயர்ந்த பெறுமதியுடைய முதலீட்டாளர்கள், கல்விமான்கள் மற்றும் வணிகச் சமூகம் உள்ளடங்களாக 250 பங்குபற்றுனர்களுக்கும் அதிகமானோர் பங்குபற்றினார்கள்.

### ஏனைய விழிப்புணர்வு முன்னெடுப்புகள்

பல்வேறு கற்கை நிகழ்ச்சித் திட்டங்களினூடாக விவேகமுள்ள முதலீட்டாளர்களை உருவாக்கும் அதன் முயற்சிகளை இ.பி.ப.ஆ. தொடர்ந்தது. வர்த்தகச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் ஆகியோருடன் மூலதனச் சந்தையில் முதலிடுவதற்கான அறிவினை நாம் வெற்றிகரமாக பகிர்ந்துகொண்டோம். (உருவம் 25)

உருவம் 25: விழிப்புணர்வு முன்னெடுப்புகள்



## எமது பலம்

மனித வளமானது ஒரு நிறுவனத்தில் வித்தியாசத்தினை ஏற்படுத்தும் ஓர் தனித்துவம் மிக்க சொத்தாகும். எனவே இவ்வித்தியாசத்திற்கு பங்களிக்கும் மற்றும் நிறுவனத்தின் இலக்குகளை அடையும் இ.பி.ப.ஆ. வின் ஊழியர்கள் மதிக்கப்பட்டு, பாராட்டப்பட்டு, மரியாதை செய்யப்பட்டு மற்றும் பொருத்தமான நெறிமுறைகளுடன் பொருத்தமான சிறந்த நடைமுறைகளை தழுவுவதற்கும் வெளித்தோன்றும் சந்தைத் தேவைப்பாடுகளை சந்திப்பதற்காகவும் ஊட்டமளிக்கப்படுகின்றார்கள். இ.பி.ப.ஆ. இலுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் இரகசியத்தன்மையுடன் நேர்மை ஓர் அடிக்கோடிடப்பட்ட முன்தேவையாகும்.

## சேனைகளின் திரட்டு

மூலதனச் சந்தையின் சவால்களைச் சந்திப்பதற்கும் இ.பி.ப.ஆ. இன் ஆணையை பயனுறுதிமிக்க விதத்தில் பூர்த்திசெய்வதற்காகவும் செயலகமானது மீளாய்வாண்டில் சம்பள மட்டங்களில் ஓர் மிதமான முறையில் திருத்தியமைப்பினை அங்கீகரித்தும் சில பிறழ்வுகளை சரிசெய்யும் நோக்கில் பணியமர்த்தல் திட்டங்களையும் திருத்தியமைத்தது. மனிதவள ஆலோசகர் மனிதவள செயல்முறை மற்றும் வழிமுறைகளை சீராக்குவதற்காக சில விடயங்களில் கவனஞ்செலுத்தினார்.

இவ்வருடத்தில் மிகவும் போட்டித்தன்மைமிக்க தெரிவுச் செயல்முறையின் கீழ் ஓர் நிறைவேற்றுனர் மற்றும் ஓர் அதிகாரி ஆகிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக இரண்டு நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வருடத்தில் ஓர் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் இரண்டு நிறைவேற்றுனர்கள் உள்ளடங்களாக நான்கு ஊழியர்கள் பதவி விலகியதுடன் ஆலோசகர் ஒருவரது பணியுரிமைக்காலம் நிறைவுற்றது.

கடந்தகால செயற்திறன், நீண்ட சேவைக்காலம், மற்றும் நன்னடத்தை ஆகியவற்றை அறிந்து மேற்பார்வை பிரிவினைச் சேர்ந்த இரண்டு நிறைவேற்றுனர்கள் மற்றும் புலனாய்வுப் பரிவினைச் சேர்ந்த ஒரு நிறைவேற்றுனர் ஆகியோர் சிரேஷ்ட நிறைவேற்றுனர்களாக பதவி உயர்வு பெற்றார்கள். நிறைவேற்றுச் செயலாளர் சிரேஷ்ட நிறைவேற்றுச் செயலாளராகவும் மனிதவளப் பிரிவினைச் சேர்ந்த ஒரு அதிகாரி ஓர் நிறைவேற்றனராகவும் பதவி உயர்த்தப்பட்டார்கள்.(உருவம் 26)

உருவம் 26: 31 டிசம்பர் 2014 இல் உள்ளவாறான சேனையின் தகவல்கள்

| வர்க்கம் | அங்கீகரிக்கப்பட்ட மொத்த சேனை | தொழிலில் தற்போது உள்ள சேனை: நிலையானது | தொழிலில் தற்போது உள்ள சேனை: ஒப்பந்தம் | வெற்றிடமாயுள்ள பதவிகள் |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | - | | 1 |
| பிரதி பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | | - |
| பணிப்பாளர்கள் | 11 | 7 | 2 | 2 |
| உதவிப் பணிப்பாளர்கள் | 5 | 1 | | 4 |
| முகாமையாளர்கள் | 8 | 4 | | 4 |
| சிரேஷ்ட நிறைவேற்றுனர்கள் | 43 | 16 | | - |
| நிறைவேற்றுனர்கள் | | 22 | 1 | 4 |
| நிறைவேற்றுனரல்லாதோர் | 17 | 16 | | 1 |
| சிரேஷ்ட அலுவலக உதவியாளர்கள் | | 6 | | |
| அலுவலக உதவியாளர்கள் | 10 | 1 | 2 | |
| அலுவலக துணையாளர் | | 1 | | |
| மொத்தம் | 96 | 75 | 5 | 16 |

2014 டிசம்பர் 31இல் 32 ஆண்களும் 48 பெண்களும் உள்ளடங்களாக மொத்தம் 80 ஊழியர்கள் இ.பி.ப.ஆணைக்குழுவில் சேவையாற்றினார்கள். வருடத்தின் இறுதியில் உள்ளவாறான ஊழியர்களது சேனைகளின் கூட்டு, சேவை ஆய்வியல், பால் ஆய்வியல் மற்றும் வயது ஆய்வியல் என்பன வரைபடங்களின் மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவங்கள் 27,28,29,30)

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

உருவம் 27: தொழிலிலுள்ளோர்



| வர்க்கம் | 31.12.2014 இல் தொழிலுள்ளோர் | % |
|---|---|---|
| ப.நா., பி.ப.நா., பணிப்பாளர்கள் | 10 | 12.50 |
| உதவிப் பணிப்பாளர்கள் | 1 | 1.25 |
| முகாமையாளர்கள் | 4 | 5.00 |
| சிரேஷ்ட நிறைவேற்றுனர்கள் | 16 | 20.00 |
| நிறைவேற்றுனர்கள் | 23 | 28.75 |
| நிறைவேற்றுனரல்லாதோர் | 16 | 20.00 |
| உதவி ஊழியர்கள் | 10 | 12.50 |

உருவம் 28: பால் ஆய்வியல்




உருவம் 29: வயது ஆய்வியல்




உருவம் 30: சேவைக்காலத் தகவல்கள்




## பயிற்சியும் அபிவிருத்தியும்

இ.பி.ப.ஆ. க்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஆணையை வினைத்திறனுடனும் திறமையாகவும் நிறைவேற்றுவதற்கு ஊழியர்களது தொழில்நுட்ப மற்றும் ஏனைய தொடர்புடைய திறமைகளை அபிவிருத்தி செய்வதில் தொடர்ச்சியான அழுத்தம் வைக்கப்படுகின்றது. ஓர் அடி முன்னெடுத்து வைக்கும் வண்ணம், ஆணைக்குழுவானது ஆசியாவுக்கான ஜப்பான் - சர்வதேச நாணய நிதியம் (ச.நா.நி.) 2 வருடங்களுக்கும் சற்று அதிகமான காலஅளவைக்கொண்ட கல்வி உதவித்தொகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதுமானி பட்டப்படிப்பினை தொடர்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட ஓர நிறைவேற்றுனருக்கு கற்கை விடுமுறையினை அங்கீகரித்தது.

மீளாய்வாண்டில் அண்ணளவாக ரூபா 16.4 மில்லியன் வெளிநாட்டு பயிற்சிக்காகவும் ரூபா 2.1 மில்லியன் உள்ளூர் பயிற்சிக்காகவும் முதலீடு செய்யப்பட்டதுடன் உயர்கல்வி அனசரணை மற்றும் தொழில்சார் அங்கத்துவக் கட்டணம் ஆகியவற்றுக்கு ரூபா 1.71 மில்லியனும் செலவிடப்பட்டது. சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழு ஒழுங்கமைப்பு (ச.பி.ஆ.ஒ.) மற்றும் ஏனைய மூலதனச் சந்தை முறைமைப்படுத்தல் முகவரமைப்புகள், ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆ.ப.பொ.ஒ.) போன்றவற்றிற்கு எமது ஊழியர்கள் தற்போதைய மூலதனச் சந்தைப் போக்குகள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றுடன் காலத்திற்கேற்றவாறு மிகவும் பொருத்தமான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு சந்தர்ப்பங்களை வழங்கியமைக்காக எமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மீளாய்வாண்டில் எமது ஊழியர்கள் ஜப்பான், ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஐக்கிய இராச்சியம், சுவிற்சலாந்து, தென்கொரியா மற்றும் பிராந்தியத்திலுள்ள நாடுகள் உள்ளடங்களாக 23 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

இதற்கும் மேலாக எமது ஊழியர்கள் பின்வரும் தொடர்புடைய உள்ளூர் பயிற்சியினையும் பெற்றார்கள். ஒன்றிணைப்பின் சட்ட மற்றும் வரி தாக்கங்கள், **SPSS** மென்பொருளைப் பயன்படுத்தி புள்ளிவிபரவியல் நிரலாக்கல் மற்றும் படிமமாக்கல், ஆதன அபிவிருத்தி மற்றும் இலங்கையில் நிலைச்சொத்து முதலீடு, சட்டவறிஞரல்லாதோருக்கான சட்டம், தேசிய மனிதவள கருத்தரங்கு 2014, இலங்கை பொருளாதார கருத்தரங்கு 2014, தனிப்பட்ட உரித்துடைமை நிதியளித்தலில் கருத்தரங்கு, தேசிய தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கு 2014, கூட்டாண்மை சட்ட கருத்தரங்கு 2014 என்பனவாகும். ஊழியர்களது கல்விக்கான கடப்பாட்டினை செயல்விளக்கமளிக்கும் வண்ணம், இ.பி.ப.ஆ. இன் பயிற்றுவித்தல் அங்கமானது ஊழியர்களுக்கு அவர்களது மூலதனச் சந்தை அறிவினை தரமுயர்த்துவதை முன்னிறுத்தும் கற்கை பாடக்கோப்பினை பின்பற்றுவதற்கு தொடர்ச்சியாக சந்தர்ப்பம் அளிக்கின்றது. பட்டய நிதியியல் பகுப்பாய்வு நிறுவகமும் (ப.நி.ப.நி.) பாடக்கோப்பினை கழிவிறக்கத் தொகையில் பின்பற்றுவதற்கு ஊழியர்களுக்கு கல்வி உதவித்தொகைகளை

வழங்குகின்றது. இதற்கும் மேலாக இ.பி.ப.ஆணைக்குழு ஊழியர்களுக்கு மேல்நிலை கல்வியை, பட்டப்படிப்பின் பின்னரான பல்கலைக்கழகப் பட்டம் உள்ளடங்களாக, தொடர்வதற்கான அனுசரணையினை வழங்குகின்றது. இது அவர்கள் அப்பாடத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின்னர் இ.பி.ப.ஆணைக்குழுவில் இரண்டு வருடங்கள் சேவையாற்றல் வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டதாகும்.

2013 இல் சீரற்ற காலநிலையின் நிமித்தம் ஒத்திவைக்கப்பட்ட வீரச்செயல் அடிப்படையிலான இரண்டு நாள் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது 2014 இன் ஆரம்பத்தில் கித்துல்கலவில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் என்னவெனில் பின்வருவனவற்றைக் கொண்ட பயனுறுதிமிக்க ஓர் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை வழங்குவதாகும். நாளாந்த தொழில் மற்றும் வாழ்க்கை நோக்கிய ஊழியர்களின் சாத்தியமான மனநிலை மற்றும் தனித்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதற்காகவும் வெளிப்புறமுள்ள தரத்தினர் மற்றும் சகாக்களுடன் ஆக்கவளமுடைய உறவுகளைப் பேணுவதற்கு தேவையான ஆற்றல் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றை விருத்திசெய்வதற்கான சாத்தியமான வலிமையை உட்புகுத்தும் நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல் என்பனவாகும்.

### ஊழியர் நலன்கள்

இ.பி.ப.ஆ. இன் செயற்பணியினை அடைவதற்கு அனைத்து ஊழியர்களதும் ஆரோக்கியம் மற்றும் நலன்கள் முக்கியமானதென நாம் தெரிந்துகொண்டுள்ளோம். எனவே, 2015 ஜனவரி 1 முதல் ஊழியர்களது வெளிவாரி மருத்துவ திட்டத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கும் மேலாக உள்வாரி மருத்துவ திட்டம், நெகிழ்வுடைய கால அமைப்பு, வாகன மற்றும் இடர்பாட்டுக் கடன்கள், பண்டிகை முற்பணங்கள் முதலியனவற்றை விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைய பயன்படுத்திக்கொள்ளக்கூடியதாயுள்ளது.

வருடாந்த விளையாட்டுத் தினம் மற்றும் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றில் சக ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் உறவுகளை கட்டியெழுப்புதல் மற்றும் புரிந்துணர்வினை வளர்த்தல் எனும் நோக்கில் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஒருவரோடு ஒருவர் பரஸ்பர உணர்வுடன் நடந்துகொள்வதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றது. ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் வருடாந்த நத்தார் விருந்தினை மிகவும் உணர்ந்து மகிழ்ந்தார்கள்.

### கற்கைப் பயிற்சி

அனைத்து தேசிய கல்கலைக்கழகங்களின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தொழில் வெளிப்பாடு மற்றும் எதிர்காலத்தில் அவர்கனை வேலைக்கமர்த்துவதற்காக உருவாக்கும் நோக்கில் நாம் தொடர்ந்தும் உள்ளிருப்புப் பயிற்சியினை வழங்குகின்றோம்.

### சட்டபூர்வமான நிதியங்கள்

### தீர்வை நிதியம்

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 14**A** மற்றும் 14**B** பிரிவுகளும், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும் 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் திருத்தச் சட்டமும் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றது.

### 14 A

(1) அமைச்சரின் உத்தரவின் பேரில் குறிப்பிடப்பட்ட ஓர் கட்டணம், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் அறிவிக்கப்பட்ட கொள்வனவு விற்பனையிலும் தீர்வையாக கோரி வசூல் செய்து செலுத்தப்படவேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்டசட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படவேண்டும்.

### 14 B

(1) 14 **A** பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வக நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படவேண்டும்.

2) ஆணைக்குழுவின் உத்தரவின்படி பின்வரும் நோக்கங்களுக்காக தீர்வக நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் செய்யலாம்:

- பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு
- 38ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்தல்
- ஆணைக்குழுவின் நோக்கங்களை அடையும் பொருட்டு அதனது அதிகாரம், கடமைகள், தொழிற்பாடுகள் போன்றவற்றை உபயோகிப்பதற்கும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும்.

(3) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் தீர்வக நிதியத்திலுள்ள பணத்தை ஆணைக்குழு முதலீடு செய்ய முடியும்.

உங்களது தகவலுக்காக இ.பி.ப.ஆணைக்குழுவினால் அறவிடப்படும் தீர்வகக் கட்டணமானது பல வாதப் பிரதிவாதங்களின் பின்னர் இரண்டாவது தடவையாக 2010 ஆகஸ்ட் 01 முதல் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.09% இலிருந்து 0.072% ஆகக் குறைக்கப்பட்டது. முன்னைய குறைப்பானது 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்

## செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

முதலாந் திகதி தொடக்கம் பிரயோகத்திலுள்ள தீர்வகக் கட்டணம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.1% இலிருந்து 0.09% ஆகக் குறைக்கப்பட்டது.

2011 ஜனவரி 1 முதல் இ.பி.ப.ஆ. தீர்வையானது ரூபா 50 மில்லியன் வரையான கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.072% உம், ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.045% உம் அறவிடப்படும்.

2006 பெப்ரவரி 15 தொடக்கம் தரகர், கொ.ப.ப., ம.வை. தி. மற்றும் இ.பி.ப.ஆ. க்குக் கொடுபடவேண்டிய கொடுக்கல் வாங்கல் கட்டணமானது, ஒரு வாடிக்கையாளர் ஒரே நாளில் ஒரே பிணையத்தை ஒரே தரகரூடாக வாங்கி விற்று அல்லது விற்று வாங்கியிருந்தால் ஒரு பக்கக் கொடுக்கல் வாங்கலுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. பங்குக் கொடுக்கல் வாங்கல் வரியான 0.300% ஆனது இரண்டு பக்கக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அறவிடப்படும்.

- கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை விற்பனை செய்த பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதவிடத்து மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல் கட்டணம் குறைந்த எண்ணிக்கையிலான வாங்கிய அல்லது விற்ற பங்குகளுக்கு அறவிடப்படமாட்டாது.

- வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை விற்ற பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக உள்ளவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் விற்பனைக்கு அறவிடப்படமாட்டாது.

தரகுக்கூலி, கொ.ப.ப., ம.வை.தி. மற்றும் இ.பி.ப.ஆ. கொடுக்கல் வாங்கல் கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்களிப்பதனை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக ஒரு வாடிக்கையாளரது ஒரே பிணையத்திலான மொத்தக் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் கவனத்திலெடுக்கப்படும்.

இழப்பீட்டு நிதியத்தினைப் பலப்படுத்தவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதற்கும் மேலாக ரூபா 100 மில்லியன் தீர்வை நிதியத்திலிருந்து தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்குச் சமமாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மாற்றல் செய்யப்பட்டது. திரட்டிய நிதியத்திற்கு மூன்று தடவைகள் மேற்கொண்ட மாற்றல்கள் முறையே ரூபா 276 மில்லியன், ரூபா 380 மில்லியன் மற்றும் ரூபா 94 மில்லியன் என்பன முறையே 30.09.2010, 24.09.2012 மற்றும் 31.12.2013 ஆகும்.

2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் இத்தீர்வக நிதியத்தின் வரவிலுள்ள தொகை ரூபா 2,447,738,612/= ஆகும். 2005 - 2014 வரையான காலப்பகுதியில் தீர்வை நிதியத்தின் நிலுவைகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் 31)

உருவம் 31: தீர்வை நிதியத்தின் வளர்ச்சி



## இழப்பீட்டு நிதியம்

1987 இல் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டதோடு இழப்பீட்டு நிதியமும் செயற்பாட்டிற்கு வந்துள்ளது. 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு (திருத்தியமைக்கப்பட்டது) பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

- உரிமம் பெற்ற பங்குத் தரகர் அல்லது உரிமம் பெற்ற பங்கு வர்த்தகர் ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அதன் நிமித்தம் யாரேனும் ஒரு முதலீட்டாளருக்கு பணவகை நட்டமேற்படுமிடத்து அவருக்கு இழப்பீடு வழங்கும் பொருட்டு இழப்பீட்டு நிதியமொன்று நிறுவப்படல் வேண்டும்.

- இந்த இழப்பீட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
  * இந்நிதியத்தின் நோக்கத்திற்காகப் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட பணத்தொகைகள்.
  * 51 ஏ பிரிவின் கீழ் இந்நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய பணத்தொகைகள். (51 ஏ பிரிவானது தவறுகளுக்கான ஒத்திணங்குதல் பற்றியது.)
  * இ.பி.ப.ஆ. சட்டத்தின் 14 பி பிரிவின் கீழ் தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படும் பணத்தொகைகள்.

- இழப்பீட்டு நிதியத்திலுள்ள பணத்தொகைகள் ஆணைக்குழுவினால் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கிணங்க முதலீடு செய்யப்படலாம்.

அமைச்சர் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கிடையிலிருந்து மூன்று அங்கத்தவர்களைத் தெரிவு செய்து இழப்பீட்டுக் குழுவை நியமிக்கவேண்டும்.

இக்குழுவானது செய்யப்படும் எந்த விண்ணப்பத்தின் தொடர்பிலும் இழப்பீட்டை மதிப்பிடுவதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாயிருப்பதோடு, அத்தகைய மதிப்பீட்டின் அல்லது அளிப்பின் மீதான இக்குழுவின் தீர்மானம் இச்சட்டத்தின் தேவைகளுக்காக இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

இச்சட்டமானது இழப்பீட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கான வழிமுறையையும் கூட வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரகாரம் இக்குழுவானது விண்ணப்பதாரரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களையும் பிற சான்றுகளையும் பரிசீலனை செய்த பின்னர், அல்லது எவ்வாறாயினும் விசாரணையொன்று நடத்தப்பட்டிருந்தால் அவ் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த உரிமைக்கோரிக்கையை இழப்பீடு பெறுவதற்கு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். இழப்பீட்டு நிதியத்தினைப் பலப்படுத்துவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதுநாள்வரை இழப்பீட்டு நிதியத்திலிருந்து எவ்வித உரிமைக்கோரிக்கைகளும் செய்யப்படவில்லை.

31.12.2014 இல் இந்த இழப்பீட்டு நிதியத்தின் வரவு மீதி ரூபா 293,242,099/= ஆகும். 2005 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியில் இழப்பீட்டு நிதியத்தின் வளர்ச்சி கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் 32)

உருவம் 32: இழப்பீட்டு நிதியத்தின் வளர்ச்சி



# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் (தீ.உ.நி.)

தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் தொழிற்பாடு கீழே விளக்கப்பட்டுள்ளது.

- வர்த்தகமொன்று நிறைவேற்றப்பட்டவுடன் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் உடைமை மாற்றப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி கொ.ப.ப. ஆனது ஓரடுக்குத் தீர்வுச்சுற்றை அமுல்படுத்தியது. இதற்கமைய வாங்குபவர் T+3 மீது கொடுப்பனவு செய்யவேண்டும், அதாவது வர்த்தகம் செய்த நாள் உள்ளடங்களாக 4 ஆவது சந்தை தினத்தில் செலுத்தவேண்டும். விற்பனை செய்பவர் தீர்ப்பனவை T+3 ஆம் நாளன்று பெறுவார், அதாவது வர்த்தகம் செய்த நாளிலிருந்து 4ஆவது சந்தை நாளில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. உடமையின் மாற்றத்திற்கும் வரும்படிகளின் பெறுகைகளுக்குமிடையிலான ஒப்பீட்டளவிலான நீண்ட இடைவெளி பாதுகாப்பற்ற தீர்ப்பனவு இடர்நேர்கைக்கு வழிவகுத்துள்ளது. இது தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் தாபிக்கப்படும் தேவையை ஏற்படுத்தியுள்ளது.

- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளனர். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் நாயகம்.

- இலங்கை அரசாங்கமானது இந்த நிதியத்தினை உருவாக்குவதற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகை நம்பிக்கைப் பொறுப்பு உறுதி நியதிகளுக்கமைய அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது மீள நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.

